# ஈழத்துக் கல்வியியல் அறிஞர்கள்

பதிப்பாசிரியர்

கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்

கலை இலக்கிய அவை, மண்டூர்

# ஈழத்துக்
# கல்வியியல் அறிஞர்கள்

பதிப்பாசிரியர்
**கலாநிதி சி. சந்திரசேகரம்**

**கலை இலக்கிய அவை**
**மண்டூர்**
**2019**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஈழத்துக் கல்வியியல் அறிஞர்கள் |
| பதிப்பாசிரியர் | : | கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் |
| பதிப்புரிமை | : | © 2019 கலை இலக்கிய அவை, மண்டூர் |
| வெளியீடு | : | கலை இலக்கிய அவை, மண்டூர் |
| அச்சுப்பதிப்பு | : | வணசிங்க பிரிண்டர்ஸ்,<br>திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170 |
| விலை | : | 400.00 |

| | | |
|---|---|---|
| Title | : | Elaththuk Kalviyiyal Arignarkal |
| Edited by | : | Dr. Sinnathamby Santhirasegaram |
| Copyright | : | © 2019 Kalai Ilakkiya Avai, Mandur |
| Publisged by | : | Kalai Ilakkiya Avai, Mandur |
| Printed by | : | Wanasinghe Printers,<br>Trinco Road, Batticaloa. 065 222 7170 |
| Price | : | 400.00 |
| ISBN | : | 978-955-7202-04-4 |

# வெளியீட்டுரை

தனது இருபத்திநான்காவது வருடத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் மண்டூர் கலை இலக்கிய அவை இரு பெரும் கல்வியியலாளர்களுக்கு நினைவுதின நிகழ்வை நடாத்தி அவர்களின் கல்விப் பணிகள் மற்றும் ஆக்கங்கள் தொடர்பான நூலையும் வெளியிடு வதில் மகிழ்வெய்துகின்றது.

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்கள் மண்டூர் பிரதேசத்திலிருந்து வெளிக்கிளம்பிய முதலாவது கல்விப் பேராசிரியர். யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வியல் துறையில் தலைவராக இருந்தவர். கட்டாயம் எம்மால் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர். எமது இளைய தலைமுறையினரால் அறிந்து கொள்ளப்பட வேண்டியவர்.

அவ்வாறே நம் கல்விப் பாரம்பரியத்தின் ஓட்டமாகவும் அடையாளமாகவும் இருந்தவர் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள். அவரின் மரணம் இயற்கையானதெனினும் நம் முன்னே நீண்டுள்ள காலவேட்டில் அது எழுப்பும் அதிர்வுகள் இன்னமும் வட்டமிடுகின்றன.

சர்வதேச ரீதியில் அறியப்பட்ட அன்னாரின் புலமை அதே தரத்துடன் அவரின் சொந்த மண்ணில் உணரப்படவில்லை. அமெரிக்காவிலிருந்து அவரின் மீளத் திரும்புதலின் தாமதமும், முதுமையும் ஓங்கி எம் எதிர்காலச் சந்ததிகளின் அறிவியல் அஞ்சலோட்டத்தின் ஒரு இடை நிறுத்தத்தை ஏற்படுத்திவிட்டது. அது ஓர் காலவடுவாகிவிட்டதும் உண்மையே.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்குச் சிலை வைத்து நூற்றாண்டு விழாக் கொண்டாடியது போன்று. வித்துவான் வி.சீ.கந்தையா அவர்களுக்கு நினைவு தின நிகழ்வை நடத்தியது போன்று. மண்டூர் கவிஞர் மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் புத்தகத்தை வெளியிட்டு நினைவுதின நிகழ்வை நடத்தியது போன்று. பத்திரிகையாளர் செழியன் பேரின்பநாயகத்திற்கு நினைவுதின நிகழ்வை நடத்தியது போன்று. அண்ணாவியார் காசுபதி அவர்களுக்கும் அண்ணாவியார் அல்லிக்கந்தையா அவர்களுக்கும் நினைவுதின நிகழ்வுகளை நடத்தியது போன்று. கவிஞர் மண்டூர் தேசிகன் நினைவுப் பேருரையை வருடாவருடம் நிகழ்த்துவது

போன்று பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்களையும் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்களையும் நினைந்து நினைவுதின நிகழ்வை நடத்துவதோடு அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பணிகளும் பற்றிய "ஈழத்துக் கல்வியியல் அறிஞர்கள்" என்ற இந்நூலை வெளியிடுவது மிகுந்த மனநிறைவைத் தருகின்றது.

இவ்விரு அறிஞர்களதும் கல்வியியற் சிந்தனைகளின் எழுத்துக்களை மொத்தமான ஓர் தொகுப்பாக்க மண்டூர் கலை இலக்கிய அவை வெளியிட எண்ணியிருந்தபோதும் இக்குறுகிய கால அவகாசம் இடம் தரவில்லை. எதிர்காலத்தில் இத்தொகுப்பை நூலுருவாக்கவும், அதன் மூலம் எமது சந்ததிகளின் ஆராய்ச்சிக்கும், தேடலுக்கும் இடமளிக்கவும் அதே காலமே எம்முடன் கைகோர்க்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

கலாநிதி சி. சந்திரசேகரம் அவர்கள் குறுகிய காலப்பகுதிக்குள் இவ்விரு அறிஞர்கள் பற்றிய கட்டுரைகளையும் அறிஞர் பெருமக்களி டமிருந்து பெற்றும் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள் எழுதிய பல கட்டுரைகளைத் தேடிப் பெற்றும் இத்தொகுப்பைச் செம்மை யாகப் பதிப்பித்துள்ளமை பாராட்டுதல்களுக்குரியது.

எமது பாரம்பரியத்தின், பண்பாட்டின் வேர்களினை, எமது இன அடையாளத்தின் தடங்களினை பல்வேறு வாதங்களின் கிடுக்குப் பிடிகளிலிருந்து விடுவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இவ்வாறான விடயங்கள் - செயற்பாடுகள் அவசியமானதே. அதை மண்டூர் கலை இலக்கிய அவை தனது சக்திக்குட்பட்ட வகையில் செய்து வருகின்றது என்று நம்புகின்றோம். இந்நூல் வெளியீட்டில் உதவிய அத்தனை உள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**கலை இலக்கிய அவை,**
மண்டூர்.

# பதிப்புரை

சொந்த மண்ணின் வரலாற்றையும் அதன் வேர்களையும் ஆவணப் படுத்தாமையும், அதனை மறப்பதும் பின் திரிப்பதும் நமது பொது மரபாகி விட்ட ஒரு பின்புலத்தில் எமது மண்ணுக்குப் பெருமை தேடித் தந்த பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம், கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை ஆகிய இரு ஆளுமைகளை எதிர்காலச் சந்ததிக்கு அடையாளப்படுத்துகின்ற சின்னஞ்சிறு புள்ளியாக இத்தொகுப்பை வெளியிடுகின்றோம்.

நூலின் முதல் பகுதி பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர் களது கல்விச் சிந்தனைகளும் பணிகளும் பற்றியது. இப்பகுதி மூன்று வகையான கட்டுரைகளைக் கொண்டுள்ளது. முதல்வகை அவரது அன்புக் குரிய மாணவர்கள் அல்லது நெருங்கிப் பழகியவர்களான பேராசிரியர்கள், புலமையாளர்களால் எழுதப்பட்ட அவர்களது நினைவுகள். அந்த நினைவுகள் வரலாறாகப் பதியப்படுகின்றன. இரண்டாவது வகை அவரது பணிகள், ஆய்வுகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள். இவ்விருவகைக் கட்டுரை களும் பேராசிரியரின் கல்வி சார்ந்த முற்போக்கான சிந்தனைகளை, கல்விப் பணிகளைப் பதிவு செய்வன. மூன்றாவது வகை பேராசிரியரின் துறை சார்ந்த - அவரது குருவான சுவாமி விபுலானந்தரின் கல்விப் பணி பற்றிய கட்டுரையாகும்.

இப்பகுதியில் உள்ள கட்டுரைகள் மிகக் குறுகிய காலத்தினுள் திரட்டப்பட்டவை. அவரது அன்புக்குரிய மாணவர்கள் அல்லது நெருங்கிப் பழகியவர்களான புலமையாளர்களிடம் கட்டுரைகளைக் கேட்டபோது அவர்கள் மிகவும் ஆர்வத்தோடும் பிரக்ஞையோடும் எவ்வித காலதாமதமும் இன்றி எழுதி அனுப்பியதோடு இத்தகைய முயற்சிக்காக பாராட்டுகளையும் தெரிவித்தனர். இவையெல்லாம் அவர்கள் பேராசிரியர் மேல் கொண்ட பெருமதிப்பினது அடையாளங்களாகவே தெரிகின்றன. அவர்களுக்கு எனது நன்றிகள்.

கிழக்கிலங்கை மண்ணில் தோன்றிய அறிவியல் புலமையாளர் வரிசையில் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையும் முக்கியமானவர். அவரது நீண்டகால கல்வியியற் சேவை வெளிநாடுகளில் கழிந்துவிட்டமை துர்ப்பாக்கியமே. இலங்கையில் அவரது கல்விப்பணி தொடர்ந்திருந்தால்

ஒருபெரும் பேராசிரியராகவும் சிறந்ததொரு மாணவர் பரம்பரைக்குச் சொந்தக்காரராகவும் அவர் திகழ்ந்திருப்பார் என்று நாம் ஆதங்கப்பட்டதுண்டு. அதற்குக் காரணம் அவரிடம் இருந்த கணிதம் சார்ந்த மிகு திறமையாகும். அதேவேளை அவர் ஒரு கணிதவியல் புலமையாளனாக மட்டும் இருக்காமல் கணிதவியலுடன் கல்வியியலையும் இணைத்தவொரு புலமையாளனாக விளங்கினார். அவரது கல்விக் கலாநிதிப் பட்ட ஆய்வு இந்தப் புலமை இணைப்பை மேலும் வலுப்படுத்தியிருந்தது. அதற்கும் மேலாக அவர் மாணவனாக இருந்த காலம் முதல் கலை இலக்கியம் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். 1940 களில் மண்டூரில் இருந்து வெளிவந்த பாரதி என்ற சஞ்சிகையில் அவர் எழுதிய 'சிலப்பதிகாரத்தின் சிறப்பு' என்ற கட்டுரை இதனைக் காட்டுகின்றது. இந்த ஈடுபாட்டின் காரணமாகவே அவர் கலை இலக்கிய அவையில் ஆலோசகராக இருந்து செயற்பட்டதோடு அவையின் உறுப்பினர்களோடு நெருக்கமான உறவையும் கொண்டிருந்தார்.

கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள் 2010 இல் வெளிநாட்டிலே இருந்து மீண்டும் தனது பிறந்த இடமான மண்டூருக்கு வந்து சேர்ந்த பின் அவர் மேற்கொண்ட சமூகப் பணிகளிலே முக்கிய மானது தனது எழுத்துப் பணியைத் தொடர்ந்தமையாகும். குறிப்பாக அவர் கணிதம், அறிவியல், கல்விசார் கட்டுரைகளை முக்கியமாக மாணவர்களுக்குப் பயன்படும் வண்ணம் எழுதினார். அகவிழி என்ற சஞ்சிகையில் வெளிவந்த இத்தகைய கட்டுரைகள் சில 'பலதுறை அறிவுசார் கட்டுரைகள்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. அந்நூலைக் கலை இலக்கிய அவை மண்டூரிலே வெளியிட்டும் வைத்தது.

இதற்கும் மேலாக சமகாலத்தில் வெளிவந்த பல்வேறு புத்தகங்கள், சஞ்சிகைகளை வாசித்து அவை தொடர்பான விமர்சனங்களையும் முன்வைத்தார். முக்கியமாக அவற்றிலே இடம்பெற்றிருந்த தகவல் பிழைகளை விலாவாரியாகச் சுட்டிக்காட்டி உண்மைத் தகவல்களைத் தனது அனுபவ, புலமைத்துவ அறிவின் துணையோடு வெளிப்படுத்தினார். இத்தகைய பணி மிக முக்கியமானது. பக்கச் சார்பான/ஆழமற்ற புத்தக வாசிப்பும் அதன் அடிப்படையிலான புகழுரைகளும் மலிந்துள்ள இன்றைய எமது நவீன அறிவுச் சூழலில் அவரது கருத்துக்கள் நமது சமூகத்தவரால் வரவேற்கப்படவில்லை என்பது விசித்திரமானதல்ல. அவர் பல விமர்சனங்ளையும் எதிர்கொண்டார். எனினும், "தகவல்களை குறிப்பாக

வரலாற்றுத் தகவல்களைப் பிழையாகப் பதிவுசெய்வது என்பது நமது பிற்சந்ததியினருக்கு நாம் செய்யும் துரோகமாகும்" என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். இத்தகைய பிழைகள் பற்றிப் பலருடனும் விவாதிப்பதையும் அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். இத்தகைய நோக்குக் காரணமாக தனது எழுத்துக்களிலும் எவ்வித பிழைகளும் நேர்ந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார். கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை அவர்கள் தனது புலமைக்கும் மேலாக ஒரு காலகட்டத்தின் தகவல் களஞ்சியமாகவும் விளங்கியவர்.

இறுதி நோரத்தில் தனது ஆங்கிலத்தில் அமைந்த பட்ட ஆய்வு ஏடுகள் நம்மவருக்குப் பயன்பட வேண்டும் என்பதற்காக மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். ஆனால் அவ்விருப்பம் நிறைவேறாமலேயே அவரது உயிர் பிரிந்துவிட்டது. ஆயினும் அவரது விருப்பம் கலை இலக்கிய அவையினூடாக நிறைவேறும் என்று நம்புகின்றோம்.

இச்சிறு நூலின் இரண்டாம் பகுதி கோணேசபிள்ளை அவர்களைப் பற்றிய நினைவுப் பகிர்வாக அன்றி அவரது வாழ்வினதும் எழுத்தினதும் சிறு பகுதியைப் பதிவு செய்திருக்கின்றது. இது இரு பகுதிகளைக் கொண்டது. முதல் பகுதி அவரது வாழ்வு பற்றியதாகவும் இரண்டாம் பகுதி அவரது கட்டுரைகளை உள்ளடக்கியதாகவும் அமைகின்றது.

மட்டக்களப்பு – மண்டூர் கிராமத்தைச் சேர்ந்த இவ்விரு பேராசான்களும் எமது தமிழ்ச் சமூகத்துக்கு ஆற்றிய உன்னத கல்விப் பணிக்காக – எமக்கு ஈட்டித்தந்த பெருமைக்காக மண்டூர் கலை இலக்கிய அவை அவர்களுக்கு வழங்கும் சிறு காணிக்கையாகவே இச்சிறு நூலை வெளியிடுகின்றது.

நூற் பதிப்புப் பணியில் பல்வேறு ஒத்துழைப்புகளையும் வழங்கிய திரு மு. விமலநாதன் சேர், திரு எஸ். புஸ்பானந்தம், கவிதாயினி உருத்திரா உள்ளிட்ட கலை இலக்கிய அவை உறுப்பினர்கள், நேர்த்தியாக அச்சிட்டு நூலுருப்படுத்திய வனசிங்கா அச்சகத்தினர் குறிப்பாக சங்கர் அனைவருக்கும் மிக்க நன்றிகள்.

**- கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்**

# பொருளடக்கம்


- வெளியீட்டுரை
- பதிப்புரை

அத்தியாயம் - 1

**பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்: கல்விச் சிந்தனைகளும் பணிகளும்**

1. மாணவரின் முன்னேற்றமே தனது முக்கிய பணியாகக் கருதிய பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்
கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை

2. பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் - ஒரு தரிசனம்
திரு மா. கணபதிப்பிள்ளை

3. பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் : எனது இருபதாண்டு நினைவலைகள்
இணைப்பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

4. பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்: கல்விப் புலத்தில் ஓர் கல்வி முனிவர்
பேராசிரியர் கலாநிதி சி. மௌனகுரு

5. பேராசிரியர் ப.சந்திரசேகரம் - நினைவுகள்
பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

6. பேராசிரியர் சந்திரசேகரத்தின் கல்விப் பணிகளும் ஆய்வுகளும்
பேராசிரியர் செ.யோகராசா

7. பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் கல்விச் சிந்தனைகள்
கலாநிதி சி. சந்திரசேகரம்

8. விபுலாநந்த அடிகளாரின் கல்விச் சிந்தனைகள்
பேராசிரியர் சபா ஜெயராசா

அத்தியாயம் - 2

# கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் வாழ்வும் எழுத்தும்

## கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் வாழ்வு

1. வாழ்நாள் கல்வியியலாளர் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை
   திரு. மு. விமலநாதன்

2. கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் சுயவிபரக் கோவை
   தொகுப்பு : கலாநிதி கோ.கோணேசபிள்ளை

3. நல்லாசிரியர் திரு. கோணேசபிள்ளை
   பேராசிரியர் சி. சிவசேகரம்

4. கவிதை: முத்தை மறைத்து வைத்த வித்தைக் கடல்
   கவிதாயினி த. உருத்திரா

## கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் எழுத்து

5. மண்டூரின் கல்வி வளர்ச்சி: ஓர் அறிமுகம்
6. "அமரர் நல்லையா வாழும் மனிதம்" - சில திருத்தங்கள்
7. பல்துறைப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும் அவரது தமிழ் ஆராய்ச்சியும்
8. கற்றலில் அடிப்படைத் திறன்கள் விருத்தி மட்டமும் உயர் கணித விருத்தியும்
9. ஆசிரியர், உயர்வதற்கு கற்பித்தலோடு தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

**பின்னிணைப்பு** : 1) பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரத்தின் புகைப்படங்கள்.

**பின்னிணைப்பு** : 2) கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் புகைப்படங்கள்

# அத்தியாயம் - 1

## மாணவரின் முன்னேற்றமே தனது முக்கிய பணியாகக் கருதிய பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்

கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை

**பே**ராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூர் கிராமத்தில் 17.07.1926 இல் பிறந்தார். இவரது தந்தையார் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வந்து மண்டூர் சைவப் பாடசாலையில் ஆசிரியராகவும் பின்னர் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார். மண்டூரிலே திருமணம் செய்துகொண்டு மண்டூரின் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த பணியாற்றினார். அந்தக் காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் பாடசாலைகளில் படிக்கும் பத்து வயது மாணவர்களுக்கு பரீட்சை வைத்து அதில் ஆகச்சிறந்த மாணவர் ஒருவருக்கு புலமைப்பரிசு வழங்கும் முறையை மட்டக்களப்பு நெல்வங்கி முன்வைத்திருந்தது. அந்தப் பரீட்சைக்கு பத்தக்குட்டி ஆசிரியர் தனது மூத்த மகனை அனுப்பி சோதனையில் சித்தி பெற்று சாதனை படைக்கச் செய்தார். இந்தப் பரீட்சையில் சித்தி பெற்று புலமைப் பரிசு பெற்றதைத் தொடர்ந்து தமது மற்றைய மக்களையும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு அனுப்பினார். மூன்றாம் மகனும் நான்காம் மகனும் புலமைப் பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கில மொழிமூலம் கல்வியைத் தொடரச் சென்றனர். இந்த நான்காவது மகன்தான் பேராசிரியர் சந்திரசேகரம். சில ஆண்டுகளுக்குப் பின் எனக்கும் புலமைப்பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கில மொழிமூலம் கல்வி

கற்க வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது எனது சிறிய தந்தை முறையான பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் எனக்கோர் வழிகாட்டியாக அமைந்து எனது கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவினார்.

சிவாநந்த வித்தியாலத்தில் சிரேஷ்ட தராதரப் பத்திரக் கல்வியை முடித்து பின் யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் படித்து கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்றார். அங்கு சுவாமி விபுலாநந்தரிடம் தமிழ் கற்க வாய்ப்புக் கிடைத்தது. பட்டப் படிப்பை முடித்து சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஏற்றார். அங்கு பணியாற்றியபோது அரசாங்கத்தில் டி.ஆர்.ஓ. வேலை கிடைத்தது. சில நாட்களில் இப்பணியை விட்டு மீண்டும் சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியரானார். இந்தக் காலகட்டத்தில் நானும் சிறிது காலம் அங்கு ஆசிரியராகப் பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தது.

பின்னர் எனது ஆசிரியரும் அதிபராகவும் சிவாநந்த வித்தியாலயத்தில் பணியாற்றிய திரு.அம்பலவாணர் அவர்கள் திருகோணமலை இந்துக் கல்லூரி அதிபராக மாற்றம் பெற்றுச் சென்றார். அவரது வேண்டுகோளை ஏற்று திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக பணியேற்றேன். இந்தக் காலகட்டத்தில் பேராசிரியர் சந்திரகேரம் யாழ்ப்பாணத்தில் கந்தரோடையில் அமைந்துள்ள கந்தவரோதயக் கல்லூரியில் நியமனம் பெற்று அங்கு சென்று பதவியை ஏற்றுக்கொண்டார். அடுத்த விடுமுறையில் அவரைப் பார்ப்பதற்கு யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள சில ஆசிரியர்களும் சேர்ந்து சுன்னாகத்தைச் சென்றடைந்தோம். அங்குள்ள ஈழகேசரி அலுவலகத்துக்குச் சென்றபோது ஈழகேசரி ஆசிரியர் இராஜ அரியரத்தினம் எங்களை வரவேற்று அங்கு சென்ற நோக்கத்தை விசாரித்து அவர்களுடைய மோட்டார் வாகனத்தில் எங்களை கல்லூரிக்கு அனுப்பி வைத்தார். கல்லூரிக்கு அருகில் இருந்த அவருடைய வீட்டை அடைந்தோம். சகல வசதிகளும் உள்ள வீட்டையே அவருக்கு கொடுத்து அவரை நன்கு கவனித்துள்ளமை தெளிவாகப் புலப்பட்டது. யாழ்ப்பாணப் பண்பாடு ஆசிரியர்களுக்கு உயர்ந்த இடத்தைக் கொடுத்து அவர்களை நன்கு கவனிக்கும் பண்பு தென்பட்டது. கல்வியில் முன்னேறுவதற்கு ஆசிரியர்தான் முக்கியம் என்பதை யாழ்பாண மக்கள் நன்கு உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தினார்கள்.

பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் அங்கு சிறந்த பணியாற்றி இருக்கும்போது அவருடைய ஒரு சகோதரின் மனைவியின் தம்பி பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் சித்தியடையவில்லை என்பதை அறிந்து அவரை அழைத்துக் கொண்டுபோய் கந்தவரோதயக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைத்து பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற வாய்ப்பளித்தார். மாணவனும் நன்கு படித்து முதலாம் வகுப்பில் எந்திரிப் பட்டப் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் கனடாவில் உள்ள உவாட்டலூ பல்கலைக்கழகத்தில் படித்து கலாநிதிப் பட்டம் பெற்றார்.

பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் கந்தவரோதயக் கல்லூரியில் இருந்து லண்டன் பல்கலைக்கழகத்துக்குச் சென்று படித்து கல்வியில் முதுகலைமாணிப்பட்டம் பெற்றார். படிப்பை முடித்து மீண்டு வந்து கந்தவரோதயக் கல்லூரியில் பணியைத் தொடர்ந்த காலத்தில் பேரதேனியா பல்கலைக்கழகத்தில் கல்விப்பீடத்தில் பணியாற்றிய தனிநாயக அடிகள் மலேசிய பல்கலைக்கழகத்துக்கு பேராசிரியராகப் பதவி யேற்றார். பேரதேனியா பல்கலைக்கழகம் அவருடைய இடத்துக்கு விளம்பரம் செய்தது. இதற்கு பேராசிரியர் சந்திரசேகரம் மனுச்செய்தார். ஏற்கனவே இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமிழை பட்டத்துக்கு பாடமாக படித்தவர். லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியில் முதுமாணிப் பட்டம் பெற்றவர். ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றியவர் என்ற தகைமைகளின் நிமிர்த்தம் பேரதேனியா பல்கலைக்கழகம் அவரை கல்விப் பீடத்தில் விரிவுரையாளராக நியமித்தது. அந்தக் காலகட்டத்தில் நான் கண்டி முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டேன். அடிக்கடி அவரைச் சந்திக்க வாய்ப்புக்கிடைத்தது. அவரது உதவியினால் நான் மேற்படிப்பைத் தொடர்ந்தேன்.

அவர் பேரதேனியா பல்கலைக்கழகத்தில் இருந்து விடுவிக்கப் பெற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியேற்றார். அந்தக் காலகட்டத்தில் நானும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் கல்விமாணிப் படிப்புக்கு அனுமதிக்கப்பட்டேன். அப்பொழுது அவர் எனது விரிவுரையாளர்.

நான் பல்கலைக்கழக வசதிகளை நன்கு பயன்படுத்த வேண்டும் என்று அடிக்கடி ஞாபகம் ஊட்டுவார். நான் படிப்பை முடித்து மட்டக்களப்பு

ஆசிரியர் கல்லூரிக்கு அதிபராகச் சென்றேன். பரீட்சை முடிவுகள் வெளி வருவதற்குமுன் அவர் யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியேற்று அங்கு பேராசிரியராக நியமிக்கப்பெற்றார். எனது பரீட்சை முடிவு வெளிவந்தது. பரீட்சையில் முதலாம் இடமும் முதலாம் வகுப்புச் சித்தியும் கிடைத்தன. முதலாம் வகுப்பில் சித்தியடைந்த காரணத்தால் என்னை உடனே பல்கலைக்கழகத்துக்கு விடுவித்தார்கள். ஆச்சரியம் என்னவென்றால் பேராசிரியர் கற்பித்த பாடத்தை நானே கற்பிக்க வேண்டியிருந்தமை. சில ஆண்டுகளுக்குப்பின் நான் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றேன். அங்கிருக்கும்போது அவர் 12.11.1987 இல் அகால மரணம் அடைந்த துக்ககரமான செய்தியைக் கேட்டு மனம் வருந்தினேன்.

பல மாணவர்களின் சிறந்த முன்னேற்றத்துக்கு எந்தப் பிரதிபலனையும் எதிர்பாராது பெரும் பணியாற்றிய பெருந்தகை பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் ஆசிரிய உலகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவார்.

• • •

# பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் - ஒரு தரிசனம்

திரு மா. கணபதிப்பிள்ளை

நவீன கல்வி மரபு உருப்பெறத் தொடங்கிய காலத்தில் வரன் முறையான உயர் கல்விக்கான கற்கை மரபு விரிவாக்கம் பெறத் தொடங்கியது. இந்த மரபுடன் பல்கலைக்கழக மரபும் ஒன்றிணைந்து வளர்ந்து வந்தது. இந்த பின்புலத்தில் உருவாகிய தமிழ்மூலக் கல்வி விரிவாக்கத்தின் புதுப் பரிமாணமாக கல்வியியல் தனித்துறையாக விருத்தியடைவதற்கு அடித்தளம் அமைத்த பெருந்தகைகளில் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் முக்கியமான முன்னோடி.

இவர் பிறந்த மண்டூர் தமிழ் அறிஞர்களையும், கல்வியியலாளர் களையும் தந்த பூமி. அதற்கென்று ஒரு தனித்த பெயர் மட்டக்களப்பு பிரதேசத்தில் உண்டு. அந்த மண்டூரில் புகழ்பூத்திருந்த ஆசிரியர் வ. பத்தக்குட்டி அவர்களுக்கு கனிஸ்ட புதல்வனாக 1926ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் திகதி சந்திரசேகரம் அவர்கள் அவதரித்தார். ஆரம்பக் கல்வியை மண்டூர் இராமகிருஷ்ண சங்க பாடசாலையில் பெற்ற இவர் பின்னர் மட்/சிவாநந்தாக் கல்லூரி, திருமலை இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கற்று தன் உயர் கல்வியை யா/மத்திய கல்லூரியில் பெற்று 1948இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக் கப்பட்டார். தன் பட்டப்படிப்பை முடித்த பின் தான் கல்வி கற்ற மட்/ சிவாநந்தாக் கல்லூரியில் ஆசிரியரானார்.

நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை என்ற அடிப்படையில், இராமகிருஷ்ண மிசனில் பெற்ற மத சமத்துவம் என்ற எண்ணத்துடனும், சிறந்த தமிழ்ப் புலமையுடனும், சிறந்த ஆங்கிலப் புலமையுடனும், மாணவர் மையக் கல்விச் சிந்தனையில் அன்றே ஆர்வம் காட்டியவராக பேராசிரியரைக் காணலாம். இந்தப் பின்னணியில் 1953 – 1954ஆம் ஆண்டுக் காலத்தில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமாவைப் பெற்ற அவர் மிகச் சிறந்த கல்வியியல் சிந்தனையாளர்களான திரு. கு. நேசையா, பேராசான் வண பிதா. தனிநாயகம் அடிகள் ஆகியோரிடம் இருந்த சிறந்த புலமையைத் தனதாக்கிக் கொண்டவர்.

மேற்படி அனுபவங்களுடன் யாழ்ப்பாணத்தில் அன்று புகழ் பெற்றிருந்த சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் 1956ஆம் ஆண்டு ஆசிரியரானார். இக்காலத்தில் புகழ்பெற்ற பாராளுமன்ற உறுப்பினர் அமரர் இராசமாணிக்கம் அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம், உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தர்மலிங்கம் அவர்களின் வீட்டில் இருந்து இவர் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். இக்காலத்தில் இக்கல்லூரியின் அதிபராக ஒரேற்றர் (நாவலர்) சுப்பிரமணியம் அவர்கள் மிகச் சிறப்பாக இக்கல்லூரியை நடத்திக் கொண்டிருந்தார்.

இக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர் வகுப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. சிறந்த ஆற்றல், புலமை உள்ள மாணவர்களைத் தான் கற்பித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு அழைத்து அவர்களை மருத்துவத்துறை, பொறியியல் துறை, கலைத்துறை, வர்த்தகத்துறை பட்டப்படிப்புகளுக்கு ஆற்றுப்படுத்திய பெருமை பேராசான் சந்திரசேகரத்துக்கு உரியது. “கல்விதான் மனிதனை மனிதனாக்குவது” என்ற கோட்பாட்டில் இறுக்கமான நம்பிக்கை கொண்ட அவர் இச் செயலில் ஈடுபட்டது வியப்பில்லையே! இவ் ஆசிரியப் பணியில் 1961வரை ஈடுபட்ட அவர் பின்னர் பல்கலைக்கழக விரிவுரையாளரானார்.

கல்வித் தத்துவம், ஒப்பீட்டுக் கல்வி ஆகிய பாடங்களில் துறைபோன விவேகத்தைக் கொண்டிருந்த பேராசான் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராய், சிரேஸ்ட விரிவுரையாளராய், துணைப் பேராசிரியராய், பேராசிரியராய் தன் பணியைத் தொடர்ந்தார். கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் மட்டுமல்லாது மதுரைக் காமராயர் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழகம், காந்தி கிராமப் பல்கலைக்

கழகம், வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், இந்திரா காந்தி கிராம பல்கலைக்கழகம், அண்ணாமலை ஆசிரிய கல்லூரி, டில்லி பல்கலைக் கழகம் என்பவற்றில் அதிதிப் பேராசிரியராகவும், லண்டன் பல்கலைக்கழக வருகை தரு பேராசிரியராகவும் துலங்கியவர். இக்காலத்தில் ஒப்பியல் கல்விக்கழகம் அவுஸ்திரேலியா, இலங்கை தேசிய கல்விக் கழகம், பிரித்தானிய ஒப்பீட்டு கல்விக்கழகம் என்பவற்றின் பேரவை உறுப்பி னராகவும் செயற்பட்டு நல்ல ஆலோசனைகள் வழங்கியவர்.

இவர் தனது முதுகலைமாணிப் பட்டப் படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் "இலங்கையில் பல்கலைக்கழக வளர்ச்சி" என்ற தலைப்பில் ஆய்வு செய்து பட்டம் பெற்றார். பின்னர் கலாநிதி பரீட்சைக்காக அவர் செய்த "இராமகிருஷ்ணரின் கல்விச் சிந்தனைகள்" என்ற தலைப்பிலான ஆய்வில், அவருக்கும் அவருடைய மேற்பார்வை யாளருக்குமிடையிலான சிந்தனைத் தெளிவற்ற போக்கால் கலாநிதிப் பட்டத்தையே துறந்து இலங்கை திரும்பினார். நெழிந்து, சுழித்து எப்படியாவது பட்டம் பெற வேண்டுமென்ற நோக்குள்ள இன்றைய பேராசிரியர்களோடு ஒப்பிடும்போது, தன் கருத்துக்கு ஒத்துவராத சிந்தனைக்கு தான் உடன்படமாட்டேன் என்ற பெறுமதிமிக்க நடத்தைக் கோலம் முன்மாதிரியாக அமையத்தக்கது.

இத்தகைய அறிவுப் பின்புலத்திலே லண்டன் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் இவரை உலக அறிஞர் குழுவில் சேர்த்துக் கொண்டது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் தன் நாட்டின் அறிஞர் தலைமைத்துவக் குழுவில் சேர்த்துக் கொண்டது. இத்தகைய புலமைப் பின்புல ஆற்றலினால் அவர் எழுதி வெளியிட்ட நூல்களான கல்வித் தத்துவம், கல்விச் சிந்தனைகள், கல்வியியற் கோவை என்பவை புகழ்பூத்த நூல் களாக காணப்படுகிறன. இவற்றைவிட இக்காலத்தில் பிரசுரிக்கப்பட்ட ஆங்கில சஞ்சிகைகளான "யங் சோசலிஸ்ட்", "யவ்னா ரிபியூன்", "கோப்பிறேட்டர்" என்பவற்றிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட "கல்வி" என்ற சஞ்சிகையிலும் அவர் எழுதிய கட்டுரைகளும் கல்வி உலகத்தால் பாராட்டப்பட்டவை மாத்திரமல்ல கல்வி உலகத்தின் உயர் சிந்தனைகளாகக் காணப்பட்டவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையை உண்டு பண்ணிய காலத்தில் "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முழுமை பெற வேண்டுமானால் அங்கு சகல பீடங்களும் திறக்கப்பட வேண்டும்"

என்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கூற்றிற்கிணங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு கல்விப் பேராசானாக சந்திரசேகரம் நியமனம் பெற்றார். இக்காலத்தில் கொழும்பில் பேராசிரியர் முத்துலிங்கம் போன்ற யாழ்ப்பாணத்து கல்வித் துறைசார் பேராசிரியர்களே போகாத போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முழுமைபெற தன்னால் ஆன பங்களிப்பை நல்கிய பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்களின் சிந்தனைத் தெளிவை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

இது மாத்திரமல்ல கிழக்குப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவதில் ஆர்வத்துடன் உழைத்த பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்கள் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையை அமைப்பதை அங்கீகரித்தபோதும் தான் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ்ப்பாணக் கல்வித் துறையை மூடிவிட்டு கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வருவதற்கு ஆயத்தமாக இல்லை என்ற உயர் சிந்தனையை வெளிப்படுத்தியவர். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டியவர். ஆனால் யாழ்ப்பாணத்தில் கல்வித்துறையை மூடிவிட்டு கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையை ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் கற்ற காலத்தில் காலை 8.30 மணிக்குத்தான் நூலகம் திறக்கும். ஆனால் காலை 8.15க்கு முன்னே முதலாவது நபராக பேராசிரியர் சந்திரசேகரம் அவர்கள் நிற்பார். நூல் நிலையம் மூடும்வரை நூலகத்தைப் பயன்படுத்திய இவரை பிரதம நூலகர் ஒருநாள் பேட்டி கண்டார். பேராசிரியரின் தேடல் ஆர்வத்தையும் வாசிப்பு அனுபவத்தையும் கண்ட பிரதம நூலகர் தன் துணை நூலகரிடம் ஒரு கட்டளை பிறப்பித்தார். "இன்றிலிருந்து பேராசிரிருக்கு தனியான ஒரு மேசை போடப்படல் வேண்டும். அவர் கேட்கும் நூல்கள் கொடுக்கப்படல் வேண்டும். அவர் ஆய்வு செய்து முடியும் வரை அவரது மேசையில் இருந்து புத்தகங்களை அகற்ற வேண்டாம் என்றவாறு." இத்தகைய வாசிப்பு தேடலுடன் தன் ஆளுமையை வளர்த்தவர்தான் எமது பேராசான்.

யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் இவரது காலத்தில் 23பேர் முதுகலைமாணியையும் ஒருவர் கலாநிதி பட்டத்தையும் பெற்றனர். இன்று கல்வித்துறையில் பிரகாசிக்கும் பேராசிரியர் சபா ஜெயராஜா, பேராசிரியர் சோ. சந்திரசேகரன், பேராசான் கோணேசபிள்ளை,

பேராசான் மா. செல்வராஜா என்ற ஆளுமைமிக்கவர்களை உருவாக்கித் தந்த பேராசான் இவரே.

இன்று வடக்கும் கிழக்கும் ஒற்றுமைப்படாத இரு கோணங்களில் நிற்கின்றன. பேராசிரியரின் காலத்தில் இரண்டு மாகாணங்களும் இறுக்கமான நல்லுறவுடன் விளங்கியது. "பண்புடையர் பட்டுண்டு உலகம்" என்ற பொன்மொழிக்கேற்ப அந்த மகானின் அறிவும் ஆற்றலும், மனிதநேயமும், மத ஒருமைப்பாடும் இன்றுள்ளவர்களுக்கு பாடமாக அமையலாம்.

தமிழ்மொழிக்கென்று பல புதிய கலைச்சொற்களை உருவாக்கியவர் அவர். பல்கலைக்கழகங்களை "செழுங்கலை நியமங்கள்" என்றும் அறிஞர்களை முனிவர் என்றும் அழைத்தார். உதாரணமாக கார்ல்மாக்ஸை, மாக்ஸ் மா முனி என்றே எழுதியிருப்பார். தமிழ்மொழி மூலம் உயர் நிலையான ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்பதை நிரூபித்தவர். கல்வித் தத்துவத்தை உயர் நிலையில் எடுத்துரைப்பதற்கு வலுவான மொழிக் கட்டமைப்பை தமிழில் உருவாக்கியவர் அவர். மேலைத்தேய, கீழைத்தேய தத்துவ சிந்தனை மரபுகளுடன் ஊடாடி, மேலைத்தேயத்திற்கு கீழைத்தேய கல்வியியற் சிந்தனைகள் குறைந்தவை அல்ல என்பதை எடுத்துக்காட்டியவர். மகாத்மா காந்தி, இராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தர், அரவிந்தர், ரவீந்திரநாத தாகூர், ஆறுமுக நாவலர், சுவாமி விபுலாநந்தர், அநகாரிக தர்மபால, சித்திலெப்பை போன்றோரின் சிந்தனைகளை கல்வியியல் ஆய்வுப் புலத்திற்கு முன்னெடுத்து நிறுத்திய பெருமை பேராசிரியரையே சாரும்.

அத்தகைய மகான் இந்திய அமைதி காக்கும் படையின் செல்வீச்சில் 1987ம் ஆண்டு நவெம்பர் மாதம் 12ம் திகதி இறையடியெய்தினார். அன்னாரின் புனிதமான சிந்தனைகள், கல்வித் தத்துவங்கள் நிலைபெற வேண்டும். அதற்காக அவரின் அரும்பணிகளைத் தேடிக் கண்டறிய வேண்டும். அவரால் வெளியிடப்படாத கட்டுரைகளைத் தேடிக் கண்டறிந்து அவற்றை நூல் உருவாக்கம் செய்ய வேண்டும். அன்னாரின் அபிலாசையை பூர்த்தியாக்கும் வகையில் யாழ் பல்கலைக் கழக கல்வியியல் துறையும், கிழக்குப் பல்கலைக்கழக கல்வியியல் துறையும் "தமிழர் கல்வியியற் சிந்தனைகள்" என்ற பாடப்பரப்பை கலைத்திட்டத்தில் சேர்த்து ஆய்வுகள் செய்யும் போது பேராசிரியரின் அபிலாசைகள் நிறைவுபெறும் என்பது எனது வேண்டுகோள்.

• • •

# பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்: எனது இருபதாண்டு நினைவலைகள்

இணைப்பேராசிரியர் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

**பே**ராதனைப் பல்கலைக்கழகத்தில் 1968 இல் பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பு மூத்த கல்வியியலாளனான பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களுடன் பரிச்சயம் ஏற்படக் காரணமாயிற்று. 1987 இல் இந்திய இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல் காரணமாக அவர் எம்மை விட்டுப் பிரியும் வரை அவரோடு மாணவனாக, சகபாடியாக, நண்பனாக என அன்புடன் பழகிய நாட்களும் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இன்றும் மனதில் பசுமையாகவே உள்ளன. பல்வேறு வகிபாகங்களூடாக அவர் ஆற்றிய பணிகள் ஏராளம். அவற்றுள் சிலவற்றை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கிடைத்த சந்தர்ப்பம் இனிமையானது.

**விரிவுரை நடாத்தும் பாங்கு**

வகுப்புக்கு வரும்போது விரிவுரைக்குரிய விடயம் தொடர்பான சில விபரங்கள் குறிக்கப்பட்ட தாள்கள் சில கொண்டுவருவார். ஒவ்வொரு தாளிலும் ஏனையவர்கள் செய்வது போன்று எழுத்துக்களால் பக்கம் நிறைந்திருக்காது. மாறாக, ஒரு சில சொற்கள் மட்டுமே அப்பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கும். அவற்றினைப் பார்வையிட்டபின் பேச ஆரம்பித்தாரெனின் அரைமணிநேரமோ முக்கால்மணிநேரமோ தொடர்ந்து விபரங்களோ விளக்கங்களோ வினாக்களோ அவர்

வாயிலிருந்து கொட்டும். குறிப்பெடுக்க விரும்பியவர்கள் வழுவின்றி முழுமையாக எழுதக்கூடிய வகையில் தெளிவாகவும் சீரான வேகத்திலும் அணி அணியாகப் பேச்சு அமைந்திருக்கும்.

**விரிவுரையின் போதான தோற்றம்**

விரிவுரையின்போது வெள்ளைநிற நீளக் காற்சட்டையுடன் வெள்ளைநிற முழுக்கை மேலங்கியுடனான நிமிர்ந்த, நேரான பார்வையுடன் தோற்றமளிப்பது அவரது வழமையான பாணி.

**மாணவர்களுடனான தொடர்பு**

தம்பி, மோனை, தங்கச்சி, பிள்ளை போன்ற பதங்களூடாக அன்புகலந்த பார்வையுடன் மாணவர்களுடனான அன்னியோன்யம் வெளிப்படும். இவையாவும் அவரது உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்த வையாகும்.

**நேரம் தவறாமை**

எந்தப் பணியையும் நாம் உரியநேரத்தில் தொடங்கவேண்டும் என்பதற்கு இவர் ஓர் உதாரணபுருஷன். நேரமுகாமையும் செவ்விதே அமையும்.

**இலட்சியம், கொள்கை இரண்டிலும் தளம்பாத இயல்பு**

தளம்பல் இல்லாத இறுக்கமான கொள்கையுடன் செயற்படல் இவரது சிறப்பான இயல்பு. தனது மனச்சாட்சிக்கும் கொள்கைக்கும் முரணான எவ்விடயத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாதவர். இதன் காரணமாகப் பல பின்னடைவுகளுக்கும் முகங்கொடுத்துள்ளார். அதற்கு ஓர் உதாரணம் அவரது கலாநிதிப் பட்டம். சுய கௌரவத்தைப் பேணுதல், பதவிக்காக மற்றவர் பின்னால் செல்லாமை அவரது வாழ்நாள் கொள்கை. கல்வியியற் துறையின் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தமை இதற்கோர் உதாரணம்.

**சேவைமனப்பாங்கில் கல்விப் பணி**

ஆசிரியப் பணியை இதயபூர்வமாக நேசித்தவர். அவரது சேவைக்காலத்தில் அவர் ஒருபோதும் பணத்துக்கு முன்னுரிமை வழங்கியவரல்லர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1980 இல் பட்டப்பின் கல்வித்தகைமைச் சான்றிதழ் நெறியோடு தொடங்கிய

கல்வித்துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இவர் மிகக்குறுகிய காலத்துள்ளேயே கல்வியில் முதுமாணி, கல்வியில் கலாநிதிப் படிப்பு ஆகியவற்றினையும் தொடக்கிவிட்டார். அத்தோடு இப்பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு பட்டப்பின் கல்விச் சான்றிதழ் பகுதிநேரக் கற்கைநெறியைத் தொடக்கிவைத்த பெருமையும் இவருக்குண்டு. விரிவுரையாளர்கள் விரிவுரைக்கான கொடுப்பனவு ஏதுமின்றி இக்கற்கைநெறியை நடாத்தவேண்டும் என்னும் இவரது பேரவாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை இன்றும் நடைமுறைப்படுத்துகின்றமை இவரது சேவைக்கு வழங்கும் மதிப்புக்குரிய செயலென நாம் கருதமுடியும்.

**பணபலம் குன்றியோர் தொடர்பான இவரது நிலைப்பாடு**

சமூகத்தில் பணபலம் சார்பாக எல்லோரையும் சமமாக நடாத்தும் பண்பு இவரது சொத்து. ஏழைகள் என்னும் சொல்லுக்குப் பதிலாக 'பணவசதி குன்றியோன்' எனக் குறிப்பிட முடியாதா எனக் கேள்வி எழுப்புவார். பணவசதி குன்றியோரிடம் பரிதாபம் காட்டுவது இயல்பாகவே ஏற்பட்டுவிடும். இதற்கு ஓர் உதாரணமாக 1972 அளவில் இடம்பெற்ற பின்வரும் சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியில் நான் விரிவுரையாளராகக் கடமையாற்றிய காலத்தில் எமது கலாசாலைக்கு வருகைதந்த இவர் தனது சொந்த ஊரான மண்டூருக்குத் தம்மோடு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று நானும் இவரது பெறாமகன் முறையிலான விரிவுரையாளர் கலாநிதி கோ.கோணேசபிள்ளை, கலாசாலை உபஅதிபர் திரு சு. தருமலிங்கம் ஆகியோர் புறப்பட்டோம். ஆற்றைக் கடப்பதற்காக அக்கரை சென்ற பாதை திரும்பி வரும்வரை குறுமண்வெளித் துறையில் காத்திருந்தோம். அவ்வேளை, ஐஸ்பழ வியாபாரி ஒருவர் வாடிய முகத்துடன் அங்கிருப்பதைக் கண்டு அவருடன் அளவளாவியபின் எம்மிடம் வந்து 'இன்று இவருக்கு வியாபாரம் நடைபெறவில்லை என கவலையாக உள்ளார். பணம் ஏதும் வாங்கவும் ஒப்புக்கொள்கிறார் இல்லை. என்ன செய்யலாம்?' எனக் கூறினார். அவரிடம் ஐஸ் பழத்தை வாங்கினால் அதற்கான காசைப் பெறுவார்தானே என நான் கூறியதுடன் முதலாவது ஐஸ்பழத்தை பேராசிரியரே தன் கையால் வாங்கவேண்டும் என வற்புறுத்தினேன். ஐஸ்பழத்தைப் பெற்றுக் கொண்ட அவர் அதனைச் சுவைத்தபோது 'நான் இதுவரை இதனைச் சுவைத்தது

கிடையாது. பரவாயில்லை. ஆனால் நல்லபிரகாசமாக இருக்கின்றது' எனக் கூறினார். எனக்கு அவர் கூறியது புதிராக இருந்தது. என்ன என வினவினேன். ஐஸ்பழ வியாபாரியின் முகம் எவ்வளவு பிரகாசித்துள்ளது எனப் புன்முறுவலுடன் கூறினார். மண்டூருக்கான பாதை கரையை அண்மித்து விட்டது. சனங்களின் ஆரவாரத்தின் மத்தியில் பேராசிரியரின் அருகில் வந்து இருகை கூப்பி 'உங்கள் கைராசி. எல்லாம் காசாச்சு' எனக்கூறிச் சென்றுவிட்டான். ஆனால், பேராசிரியருடனான இந்தச் சிறிய, உணர்வுமிக்க அனுபவம் இன்றும் மனதில் பசுமையாகவே நின்றுவிட்டது.

**பேராசிரியரின் அறிவுப் பகிர்வுச் சேவை.**

நாம் சம்பாதித்த அறிவுத் தேட்டம் பலரும் பயன்பெறும் வகையில் ஏனையவர்களுடன் பகிரப்பட வேண்டும் என்பது அவரது தத்துவம். தனது விரிவுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், நூல்கள், கட்டுரைகள், ஆசிச் செய்திகள் என்பவையூடாகத் தனது இத் தத்துவத்தை நிஜப்படுத்தியுள்ளார். வருவாயூட்டும் செயற்பாடாக இவை எவற்றினையுமே அவர் தன் வாழ்நாளில் மேற்கொண்டதில்லை. இன்றும் மகிமையுடன் உலாவரும் 'கல்வித் தத்துவம்' எனும் நூல் இதற்கோர் அருமையான எடுத்துக்காட்டு.

**பேராசிரியருக்கென தொடர்ந்து கொண்டிருக்கும் கௌரவிப்பு**

பேராசிரியரின் பன்முகச் சேவையை நன்குணர்ந்த அன்னாரின் மாணவர்களினதும் சகபாடிகளினதும் பங்களிப்புடன், அவர் நாமம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் என்றும் நிலைக்கும் வண்ணம் மாணவர் அமைப்பாகிய கல்விக் கழகம் நிதி ஒன்றை ஏற்பாடுசெய்து பல்கலைக்கழகத்திற்கு கையளித்தது. பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறியின் இறுதித் தேர்வில் அதிஉயர் நிலையைப் பெறும் மாணவருக்கு வருடாவருடம் நிகழ்பெறும் பட்டமளிப்பு வைபவத்தில் தங்கப் பதக்கம் வழங்கப்படுவதற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித்துறையிற் பேணப்பட்டுவரும் இவரது உருவப்படம் பற்பல அர்த்தங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

• • •

# பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம்: கல்விப் புலத்தில் ஓர் கல்வி முனிவர்

பேராசிரியர் சி. மௌனகுரு

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்களைப் பிரிந்து முப்பத்தி ஒரு ஆண்டுகளாகிவிட்டன. வெள்ளை வெளேரென்ற உடை. மிகுந்த அழகான பற்கள். பிரகாசமான சிரித்த முகம். வாரிவிடப்பட்ட வெள்ளிக் கேசம். மென்மையான பேச்சு. எப்போதும் உபதேசம், அறிவுரை கூறும் கனிவான குரல். அவரை நினைத்ததும் இவைதான் எனக்கு ஞாபகம் வருகின்றன.

1961 தொடக்கம் 1965 வரை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், 1971 தொடக்கம் 1975 வரை கல்வி டிப்ளோமா மாணவனாக கொழும்புப் பல்கலைக்கழகத்திலும், 1980 தொடக்கம் 1987 வரை உடனாசிரியனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் அவருடன் நெருக்கமாகப் பழகிய இனிய நாட்கள் ஞாபகம் வருகின்றன. நம் மத்தியில் வாழ்ந்து மறைந்து போன ஓர் கல்வியல் ஞானி அவர்.

1961 இல் பேராதனைப் பல்கலைக்கழக விஜயவர்த்தனா விடுதியில் பேராசிரியர் கைலாசபதியின் அறையில் அவரை முதன் முதலில் கண்டமை ஞாபகம் வருகின்றது. புன்னகை தவழும் கனிவான அந்த முகம் எனக்கு எடுத்த எடுப்பிலேயே பிடித்துக்கொண்டது. "மட்டக்களப்புப் பையன் உங்கள் ஊரவர்" எனக் கைலாசபதி என்னை அவருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

என்மீது பேராசிரியர் சந்திரசேகரத்துக்கு அக்கறை உண்டானது. அன்று நீண்டதோர் இலக்கிய உரையாடல் கைலாசபதி அவர்களின் அறையில் நடந்தது. என்னோடு காலம் சென்ற எழுத்தாளர் யோகநாதனும், கதிர்காம நாதனும் வந்திருந்தார்கள்

உரையாடல் முடிய எம்மைத் தனது அறைக்குள் கூட்டிச் சென்றார். அவரது அறை புத்தகங்களால் நிரம்பிக் கிடந்தது. பல்வேறு துறை நூல்கள். "தாமரை" ஆண்டு மலரை என்னிடம் தந்தார். அதன் அட்டையில் தமிழக கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியஸ்தரான ப. ஜீவானந்தத்தின் படம் பெரிதாக இருந்தது. "இவரைத் தெரியுமா? என்றார். "இல்லை" என்றேன். ப. ஜீவானந்தத்தை அறியாத வயது அது. ப. ஜீவானந்தம் பற்றியும் கம்யூனிஸம் பற்றியும் விளக்கி, அதனைப் படித்துப்பாருங்கள் என்றார்.

ப. ஜீவானந்தம் தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவர். சிறந்த பேச்சாளர். தாமரை எனும் முற்போக்குப் பத்திரிகையின் நிறுவகர். அதன் ஆசிரியராக இருந்தவர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் இந்திய அரசால் தேடப்பட்டுத் தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர். சில காலம் இலங்கையிலும் ஒழித்திருந்தவர். மிகச் சிறந்த பேச்சாளர், கவிஞர்.

நாங்கள் அப்போது பல்கலைக்கழக இளம் சோசலிஸ்ட் சங்க உறுப்பினராயிருந்தோம். பொதுவுடைமைக் கருத்துக்கள் எனக்கு அறிமுக மான காலங்கள் அவை. ஒரு வாரத்தினுள் அதனை வாசித்துவிட்டு அவரிடம் ஒப்படைத்தேன். அடுத்து அவர் எனக்குத் தந்த நூல் ராகுல்ஜி சாங்கிருத்தி யாயனின் "பொதுவுடைமைதான் என்ன?" என்ற நூல். பொதுவுடைமைச் சித்தாந்தத்தை மிக எளிமையாகவும் ஆழமாகவும் விளக்கும் நூல் அது.

நான் தமிழ்த் துறை மாணவன். அவரோ கல்வித்துறை விரிவுரை யாளர். எனினும் எங்கள் உறவு ஆசிரிய மாணவ உறவாக மலர ஆரம்பித்தது.

சமதர்ம நூல்கள் பால் என் சிந்தனையைத் திருப்பினர் அன்று இருவர். ஒருவர் பேராசிரியர் கைலாசபதி, மற்றவர் பேராசிரியர் சந்திரசேகரம். இருவரும் நண்பர்கள். அவர்கள் அறைகள் அருகருகே இருந்தன. இருவரின் உறவாலும் என் வாசிப்பு முற்போக்கு நூல்களின் பால் திரும்பியது. என் சிந்தனைகளிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இப்படித்தான் எமது உறவு ஆரம்பித்தது. பின்னர்தான் பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் பற்றிய தகவல்களை அறிய ஆரம்பித்தேன்.

அவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா வீட்டில் வளர்ந்தவர். பீட்டர் கெனமன் போன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்தலைவர்களின் நண்பர். கட்சியுறுப்பினர் அல்லாவிடினும் கட்சி அனுதாபி. அவரே இவை பற்றியெல்லாம் என்னுடன் கூறியிருக்கிறார். கால் மாக்ஸை அவர் எல்லோரையும் போல மார்க்ஸ் என அழைக்கமாட்டார் "மாக்ஸ் முனிவர்" என்று மிக மரியாதையாக அழைப்பார். இந்திய தத்துவ மரபில் ஞானிகளாக முனிவர்களைக் கண்ட அவர் தொழிலாள வர்க்கத்தை மீட்க வந்த மார்க்ஸை ஒரு முனிவராகவே கண்டார்.

பேராசிரியர் வித்தியானந்தன் அப்போது எமது விரிவுரையாளர். *1961 – 1965* வரை கர்ணன் போர் *(1962)*, நொண்டி நாடகம் *(1963)*, இராவணேசன் *(1964)* ஆகிய நாடகங்களைத் தயாரித்துக் கொண்டிருந்தார். அவை மட்டக்களப்புக் கூத்துக்கள். நான் அவற்றில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துக்கொண்டிருந்தேன். கர்ணன் போரில் கர்ணனாகவும், நொண்டி நாடகத்தில் செட்டியாராகவும், இராவணேசனில் இரவணனாகவும் நடிக்கும் வாய்ப்பை எனக்கு பேரா.வித்தியானந்தன் அளித்திருந்தார். நாடக ஒத்திகைகளுக்கு பேராசிரியர் வித்தியானந்தன் பேராசிரியர் சந்திரசேகரத்தை அழைத்து வருவார். நிறையத் தடவைகள் பேரா. சந்திரசேகரம் ஒத்திகைகளுக்கு வந்து ஆலோசனைகள் கூறியுள்ளார். மண்டூரில் தான் கூத்துப் பார்த்த அனுபவங்களை, மண்டூர்க் கூத்தாட்டக் கலைஞர்களைப் பற்றியெல்லாம் எங்களிடம் கூறுவார். மட்டக்களப்புக் கூத்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களால் ஆடப்படுவது அவருக்கு மகிழ்ச்சி தந்தது.

உலகளாவிய சிந்தனைப் போக்கு உடையவராயினும் பிரதேசப் பற்றும் அவரிடம் இருந்தமையை நாம் சிலாகித்துப் பேசினோம் எமது நாடக ங்களின் பிரதான பார்வையாளர்களுள் ஒருவரானார். என் நடிப்பு என்மீது அவருக்கு பெருவிருப்பை ஏற்படுத்தியது. என்னுடன் இன்னும் நெருக்கமானார்.

பேராதனைப் பல்கலைக்கழக நூல்நிலையம் மிகப் பிரசித்தமான நூல் நிலையம். அதன் கீழ்ப்பகுதி வாசிப்புப்பகுதி *(Reading section)* எப்போதும் அங்கு இருந்து படித்துக்கொண்டிருக்கும் ஒருவராக அவரைஅங்கு நான் காண்பேன். தினமும் மாலை 5.00 மணி தொடக்கம் 8.00 மணிவரை புத்தகக் குவியல்களின் மத்தியில் பிரகாசமான மேசை விளக்கொளியில் அவர் நூல்களை வாசித்துக் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கும் காட்சி என் மனதில் அப்படியே பதிந்துள்ளது.

எமது மாணவர் குழாம் அவரின் தீவிர வாசிப்பைப் பார்த்து வியந்துள்ளது. அவர் போல நாங்களும் படிக்க முயற்சி செய்தோம். கற்றலில் பார்த்துக் கற்றலும் ஒன்றல்லவா?

இடையில் தேநீர் அருந்த அவர் வெளியில் வருவார். நாமும் வெளியில் வந்து அவருடன் இணைந்துகொள்வோம். கன்டீன் சென்று தேநீர் அருந்திச் சில நிமிட நேரங்கள் செலவு செய்த பின் மீண்டும் சென்று அவருடன் இருந்து படிக்க ஆரம்பிப்போம். இப்படியான விரிவுரையாளர்களை இன்று பல்கலைக்கழகங்களில் காண்பதே அரிதாகிவிட்டது. பல்கலைக்கழக நூல்நிலையங்கள் விரிவுரையாளர்களைக் காணாமல் இன்று பரிதாபமாக நிற்கின்றன.

1961 தொடக்கம் 1965 வரை எங்கள் உறவு இவ்வண்ணம் அறிவு உறவாகவும் கலை உறவாகவும் அமைந்திருந்தது. நான் பேராதனையில் என் பட்டப் படிப்பை முடித்துக்கொண்டு 1965 ஆம் ஆண்டு வெளியேறினேன். இடையிடையே கடிதத் தொடர்புகள் இருந்தன. பேராதனை செல்லும்போது சந்திப்பேன். புதிய நூல்களை அறிமுகம் செய்வார்.

1974 – 1975 காலப்பகுதியில் அவரிடம் நேரடி மாணவனாக கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமா படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் எங்களுக்குக் கல்வித் தத்துவம் படிப்பித்தார். அப்போது எனக்கு வயது 30 இருக்கும். அவர் கற்பித்தல் அலாதியானது. அவருக்கு என்றே சில சொற்கள் வைத்திருப்பார். பல்கலைக்கழகம் என அழைக்கமாட்டார். செழுங்கலை நியமம் என்றே அழைப்பார். தொல்காப்பியரை வெறும் தொல்காப்பியர் என அழைக்கமாட்டார். ஒல்காப் புகழுடை தொல்காப்பியன் என்பார். வள்ளுவரை வெறுமனே வள்ளுவர் என்று கூறமாட்டார். வள்ளுவப் பெருந்தகை என்ரே கூறுவார். அழகான செந்நெறித் தமிழ் அவர் நாவில் சுழன்று விளையாடும். கல்வியியலைத் தமிழில் கொணர்ந்த முன்னோடியல்லவா அவர்!

காலையில் அவர் வழிபடப் போகும் இடங்கள் பல. இந்துக் கோயிலுக்குச் செல்வார். கிறிஸ்தவ தேவாலயம் செல்வார். புத்த கோயில் செல்வார். மசூதிக்கு முன் நின்று வணங்குவார். அங்கெல்லாம் எம்மையும் அழைத்துச் செல்வார். அமைதியாக அந்த இடங்களில் அமர்ந்திருப்பதே அவரது வணக்க முறை.

“பொதுவுடைமை கடவுள் மறுப்புத் தத்துவம் அல்லவா சேர்” என நான் கேட்பேன். பதில் எதுவும் கூறமாட்டார். ஒரு புன்னகைதான்

பதிலாக வரும். அனுபவத்தில் அதனை அறிவாய் என்றுதான் அந்தப் புன்னகை மூலம் சொன்னாரோ தெரியாது.

எனக்கு கம்பனித் தெருவில் ஒரு பாடசாலை ஒதுக்கப்பட்டிருந்தது. இரண்டு வாரங்கள் அங்கு கற்பிக்க வேண்டும். அப்பாடசாலை அதிகமாக கம்பனித் தெரு சேரிப்புற மக்களின் பிள்ளைகள் கற்கும் பாடசாலை. அம்மக்கள் பெரும்பாலும் கூலித்தொழிலாளிகள், மூட்டை சுமப்போர், கான் கழுவுவோர், வீதி துப்புரவு செய்வோர் எனப்பல வகையினர். அவர்களின் பிள்ளைகள் அருமையான பிள்ளைகள். சந்திரசேகரம் சேர்தான் எனது மேற்பார்வையாளர். அடிக்கடி என் கற்பித்தலை மேற்பார்வை செய்ய பாடசாலைக்கு வருவார். அப்பிள்ளைகளுடனும் உரையாடுவார். அவரின் ஆலோசனையுடன் நானும் அவரும் ஒருநாள் பின்னேரம் அந்தப் பிள்ளைகளின் மிக நெருக்கமான சேரிப்புற வீடுகளுக்குச் சென்றோம். அப்பிள்ளைகளின் வாழ்க்கை நிலையை, கஷ்டங்களைக் கண்முன்னால் கண்டோம். எங்களைக் கண்டதும் அப்பெற்றோர்கள் உபசரிக்கப் பட்ட பாடுகள், மகிழ்ச்சி, பரபரப்பு என்பன இப்போதும் ஞாபகம் வருகின்றன. அத்தொழிலாள மக்கள் கொடுத்த தேநீரை மிக மகிழ்சியுடன் வாங்கி அவர் குடித்த காட்சி இன்றும் மனக்கண்முன் நிற்கிறது.

பிள்ளைகளுக்குக் கற்பிப்பது மாத்திரமல்ல அவர்களின் பின்னணி, வாழ்க்கை, அவர்களைப் பாதிக்கும் சூழல் என்பனவற்றையும் ஓர் ஆசிரியன் அறிந்திருக்க வேண்டும் என்று எனக்கு தனது நடைமுறை மூலம் போதித்தார்.

அவருடைய இம்முன்னுதாரணம் இன்றைய ஆசிரியர்களுக்குச் சமர்ப்பணம்.

*1980 – 1987* வரை அவருடன் உடன் ஆசிரியனாகக் கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிடைத்தது. அது இன்னொருவகை அனுபவம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி யியற் துறைத் தலைவராக அவர் பணியாற்றிய காலங்கள் அவை.

அப்போது நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். தினமும் அவரைக் காணவும், உரையாடவுமான சந்தர்ப்பங்கள் கிடைத்தன. பல்கலைக்கழக ஆசிரியர் களிடையே அவருக்கு மிகுந்த மதிப்பு இருந்தது. ஆசிரியர் கூட்டங்களில், பீட அவைக் கூடங்களில் மூதவைக் கூட்டங்களில் ஏற்படும்

முரண்பாடுகளைக் கழைவதில், முரண்பாடு கொண்டோரிடையே சமாதானத்தை ஏற்படுத்துவதில் முக்கியமான பாத்திரமொன்றை அவர் அங்கு வகித்தார்.

அக்காலத்தில் நான் பல்கலைக்கழகத்துள்ளும் வெளியில் பாடசாலைகளிலும் நிறைய நாடகங்கள் செய்துகொண்டிருந்தேன். என் நாடக முயற்சிகளுக்கு அவர் பேராதரவு வழங்கினார்; என் நாடகங்களின் பிரதான ரசிகராக முன்னிருந்து ரசித்தார்; விமர்சித்தார்; ஊக்குவித்தார். யாழ்ப்பாணத்தில் எனது பலங்களில் ஒன்று பேராசிரியர் சந்திரசேகரம்.

நான் ஸ்கூட்டர் வாங்கிய காலம் அது...1983 என நினைக்கின்றேன். ஒரு மஞ்சள் நிற ஸ்கூட்டர். புதுப் பழக்கம். ஒருநாள் அவர் வீடு செல்ல கைப் பையுடன் யாழ் பல்கலைக்கழக வாசலில் நிற்கிறார். ஸ்கூட்டரில் வந்த நான் "சேர் ஏறுங்கள் வீட்டுக்குக் கொண்டு சென்று விடுகிறேன்"

என ஏறிக் கொள்கிறார். அவர் வீடு தெல்லிப்பளைப் பக்கம். மருதனா மடம் சந்தியில் வருகையில் வீதியில் பரவியிருந்த எண்ணெய்யில் வழுக்கி ஸ்கூட்டர் புரண்டு கீழே விழுகிறது. அவரும் நானும் கீழே கிடக்கி றோம். ஸ்கூட்டர் ஒருபக்கம் கிடக்கிறது. எனக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. ஓடிவந்த அவர் "I am alright are you alright தம்பி" என்று கேட்ட அந்த வார்த்தைகள் ஞாபகம் வருகின்றது. பின்னால் இருவரும் உள்நோவாக இருவாரம் படுக்கையில் கிடந்தமை இன்னொரு கதை.

தன் நோவையும் பொருட்படுத்தாது பிறர் நோ அறிய ஓடோடி வந்த அந்த மனிதனின் தன்னலமின்மை என் மனதில் பதிந்த பிரதான குணம்.

அவருடனான அனுபவங்கள் மிகமிக அதிகம். அவற்றை ஓர் பெரு நூலாக விரித்து எழுதலாம்.

அவர் சிந்தனைகளின் சாறாக வந்த "கல்வித் தத்துவம்" என்னும் நூல் ஒரு முக்கியமான நூல். கல்வி பற்றிய அவரது சிந்தனைகளை அந்நூலில் காணலாம். அவரது கன்னி நூல் அது. அந்நூலுக்கு முன்னுரை எழுதிய கல்வியியல் அறிஞர் இரத்தினா நவரெத்தினம் தன் முன்னுரையில் இவ்வாறு கூறுகின்றார்:

"கல்வித் துறையில் மேற்படிப்பை மேற்கொண்ட பல்வேறு கலாசாரத்தையுடைய பட்டதாரி மாணவர்களுக்கு கல்வித் தத்துவம்:

கோட்பாடு, ஒப்பீட்டுக் கல்வி, கலைத்திட்ட அமைப்பு ஆகியவற்றைச் சிறிலங்கா பல்கலைக்கழகத்தின் கல்வித் துறையில் பதினைந்து ஆண்டுகள் கற்பித்த ஆசிரியரின் அனுபவத்தின் பயன்" எனக் குறிப்பிடுகின்றார். பதினைந்து வருட அனுபவத்தின் பின் நூல் எழுதும் இப்பண்பை ஒரு வருடக் கற்பித்தல் அனுபவத்துடன் பாடநூல் எழுதும் ஆசிரியர்கள் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். பாடநூல் (Text book) என்பது அனுபவத்தின் சாறு என்பதைப் பாட நூல்கள், பாட நூல் வழிகாட்டிகள் எழுதும் ஆசிரியர்கள் எவரும் அறிவதில்லை.

பேரா.சந்திரசேகரம் கல்வியியலை மேற்குநாட்டு முறையில் அறிந்தவர். மேற்கு நாட்டில் உயர் கல்விப்பட்டம் பெற்றவர். பிளேட்டோ, ரூஸோ, ஜோன் டூயி என்ற மேற்கத்தைய கல்வியியலாளர்களுடன் கார்ல் மாக்ஸையும் அவர் இணைக்கையில் அவர் மற்றவர்களில் இருந்து மாறுபடுவார். அது மட்டுமன்றி அவர்களோடு வள்ளுவர், விவேகானந்தர், காந்தியடிகள், தாகூர் என இந்தியக் கல்வியியலாளர்களின் தத்துவங்களையும் இணைப்பார். அதுமாத்திரமா, ஆறுமுகநாவலர், விபுலாநந்த அடிகள், அநாகரிக தர்மபாலா, சித்திக் லெவ்வை என உள்ளூர்க் கல்வியியலாளர்களையும் இணைப்பார். மேற்கத்தைய மரபில் அல்லாது கீழைத்தேய மரபில் அவர் கல்வியை, உளவியலை, ஆசிரிய விழுமியங்களை நோக்கினார்.

கல்வியைப் புரிந்து கொள்வதில் மேற்கத்தைய மரபையும் கீழைத்தேய மரபையும் இணைத்து அவற்றினூடாக நமக்கு ஏற்ப ஒரு முழுமை தேடும் இப்பார்வை பேராசிரியர் சந்திரசேகரத்திற்கேயுரிய பார்வை என நினைக்கின்றேன்.

மேற்குலகக் கல்வியினையும் தத்துவங்களையும் அவர் பயின் றாலும் அவற்றை நம் நாட்டுக்குத் தக பிரயோகிக்க வேண்டும் என்பது அவரது நோக்கு. மேற்கத்தைய சிந்தனைகளையும் கிழக்கத்தைய சிந்தனை களையும் குழைத்து எடுத்து நம் நாட்டிற்கான கல்வி முறையினைப் பற்றிச் சிந்தித்த அவர் சிந்தனைகளை, மாக்ஸிஸம், பிளேட்டோவிஸம் என அழைப்பது போல நாம் சந்திரசேகரனிஸம் என்று அழைக்கலாம்.

பிறர் கருதுகோள்களை அடிக்குறிப்பாக்கிக் கட்டுரை வரைபவர்கள் எனப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பற்றி ஓர் அபிப்பிராயம் உண்டு. அதில் உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் இதனின்று மாறுபட்டு சுயத்தோடு மேலெழும் பேராசிரியர்களும் உண்டு. அவர்களின்

சிந்தனைகள் அவர்களுக்கேயுரியன. அவை தனித்துவமானவை. பேராசிரியர் சந்திரசேகரத்தின் எழுத்துக்களை வாசிக்கையில் அவர் அனைத்தையும் உள்வாங்கித் தன்வயமாக்கி சுயமாக எழுந்த ஓர் பேராசிரியராக எனக்குப்படுகின்றார்.

காந்தியின் தொழிற் கல்வியும் தாகூரின் பண்பாட்டுக் கல்வியும் பிளேட்டோவின் அறிவியற் கல்வியும் அவரிடம் இணைந்து மனிதனை முழுமனிதனாக்கும் கல்விச் சிந்தனை அவரிடம் முகிழ்க்கின்றது. இதனையே நான் சந்திரசேகரனிஸம் எனக் குறிப்பிட்டேன்.

கல்வி டிப்ளோமா செய்யும்போது ஓர் ஆய்வுக் கட்டுரை அவர் மேற்பார்வையில் எழுதினேன். அவரே அதற்கான தலைப்பையும் தந்தார். “பாரதியின் கல்விச் சிந்தனைகள்“ என்பது ஆய்வுத்தலைப்பு. அக்கட்டுரையில் மூன்று விடயங்களில் கவனம் செலுத்துங்கள் என்றார் பேரா, சந்திரசேகரம்.

ஒன்று அவரது எல்லோருக்குமான கல்வி முக்கியமாக அவரது பெண் கல்வி, இரண்டு, விடுதலைக்கான கல்வி, மூன்று சுயமொழிக் கல்வி. இது பாரதியின் கல்விக் கொள்கை மாத்திரமன்று. பேராசிரியர் சந்திரசேகரத்தின் கல்விக் கொள்கைகளுமாகும்.

அகஸ்டாபோலின் விடுதலைக்கான கல்விச் சிந்தனைகள் அறிமுக மாகாத காலங்கள் அவை. விடுதலைக்கான கல்வியை சந்திரசேகரம் பேசினார்; விரிவுரையாற்றினார். சுயமொழிக் கல்வியையும் எல்லோருக் குமான கல்வியையும் விடுதலைக் கல்வியையும் தனது கல்விக் கொள்கை யாகக் கொண்டதுதான் சந்திரசேகரனிஸக் கல்விக் கொள்கை.இதற்குள் பிளேட்டோவும் வருவார், கார்ல் மாக்ஸும் வருவார், வள்ளுவரும் வருவார், காந்தியும் வருவார், தாகூரும் வருவார். அவர்கள் அனைவரும் சந்திரசேகரம் என்ற கல்வியியலாளரில் பட்டுத்தெறிப்பார்கள்.

மாக்ஸை முனிவர் என அழைத்த பேராசிரியர் சந்திரசேகரம் நல்லாசிரியனுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். அவரே ஒரு முனிவராகவும் வாழ்ந்தவர். அவரையும் நாம் ஓர் இல்லற முனி என அழைப்பதில் தவறில்லை. ஆம், ஒரு இல்லறக் கல்வி முனிவர் பேராசிரியர் சந்திர சேகரம். இன்னொரு வகையில் கல்வியியல் முனிவர் என அவரை நாம் அழைக்கலாம்.

• • •

# அமரர் பேராசிரியர் ப.சந்திரசேகரம்: சில நினைவுகள்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

காலஞ்சென்ற பேராசிரியர் ப.சந்திரசேகரம் அவர்களை யான் 1963 முதல் நன்கு அறிவேன். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டப்படிப்பின்போது (1963 – 1967) அவர் எனக்கு கல்வியியல் கற்பித்தார். அவ்வகையில் அவர் எனது கல்வியியல் ஆசான். அவரிடம் கல்வி பயின்று பேராசிரியராக உயர்வு பெற்ற பலருள் யானும் ஒருவன். ஏனையவர்கள் பேராசிரியர் சபா.ஜெயராசா, மா.செல்வராசா, மா.கருணாநிதி, எம்.சின்னத்தம்பி, உசேன் இஸ்மாயில், உசேன்மியா ஆகியோர். அன்னாரிடம் கல்வி கற்ற பெருமை எமக்கெல்லாம் உண்டு.

பின்னர் 1973 தொடக்கம் பல்கலைக்கழகத்தில் ஒரு பணியை ஆற்ற வந்தபோது, அப்பணியை அன்னாரின் கீழ் செய்தேன். இத்தகைய ஒரு பின்புலத்தில் அன்னார் பற்றிய சில நினைவுகளைப் பகிர்ந்துக் கொள்ள விரும்புகின்றேன். பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து பட்டம் பெற்ற பின்னர் அன்னார் பாடசாலை ஆசிரியராகக் கடமையாற்றிய பின்னர் உயர்கல்வியில் கொண்ட ஆர்வம் காரணமாக அவர் அக்காலத்திலேயே எதுவித புலமைப் பரிசுகளுமின்றி இங்கிலாந்து சென்றார். அங்கு அவர் இலங்கையின் உயர்கல்வி வளர்ச்சி என்ற துறையில் தமது ஆய்வை மேற்கொண்டார். ஆங்கிலேயர் காலத்தின் இறுதிப் பகுதியில் அரசாங் கத்தின் உயர் கல்விக் கொள்கைகள் பற்றிய அவரது ஆய்வேடு, இன்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில்

உள்ள நூல் நிலையத்தில் பாதுகாக்கப்படுகின்றது. 1970களில் யானும் அந்த ஆய்வேட்டினை என்னுடைய தேடுதல் முயற்சியின் போது வாசித்தேன். பிற்காலத்தில் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி பற்றி ஆராயப் புகுந்த பேராசிரியர் லக்சிறி ஜயசூரியா, தமது கட்டுரையில் அன்னாரின் இவ்வாய்வு மிகவும் அரிய ஒரு மூலாதாரம் என்று குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இவ்வாய்வேடு அச்சிடப்பட்டு வெளிவராதது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறையில், ஆரம்ப காலத்தில் விரிவுரையாளராக பணியாற்றிய தமிழர்கள் வண.தனிநாயகம் அடிகள், கே.நேசையா போன்ற பெரியார்கள் ஆவர். இவர்களைத் தொடர்ந்து விரிவுரையாளராக நியமிக்கப்பட்டவர்கள் ச.முத்துலிங்கம், ப.சந்திரசேகரம் ஆகியோர்களாவர். இவர்களே பிற்காலத்தில் பேராசிரியர் களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள். தமிழ்ச் சூழலில் கல்வியியல் பேராசிரியர்களாக முதலாவதாக நியமனம் பெற்ற இவர்களே எமக்கெல்லாம் முன்னோடிகளாக அமைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1964 தொடக்கம் அன்னார் தமிழ் மொழியில் கல்வித்தத்துவம், ஒப்பீட்டுக்கல்வி, கற்பித்தல் முறைகள் போன்ற துறைகளில் விரிவுரை யாற்றினார். ஆங்கில மொழியிலேயே கல்விகற்ற அன்னார் அம்மொழியில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவராக விளங்கினார். அவருடைய ஆங்கில மொழியிலான கல்வியியல் விரிவுரைகளை அவருடைய மாணவர்கள் பெரிதும் பாராட்டுவதுண்டு. அதே வேளையில், அவர் தமிழ் மொழியிலும் சிறந்த பற்றும் ஞானமுமுடையவராக விளங்கினார். தமது கல்வித் தத்துவ விரிவுரைகளில் அவர் மேலைநாட்டு தத்துவங்களோடு, தமிழர் களின் கல்விச் சிந்தனைகளை மேற்கோள் காட்டியே விரிவுரையாற்றுவார். அவருடைய அவ் விரிவுரைகளை அவர் மேலும் செம்மைப்படுத்தித் தமது கல்வித் தத்துவம் என்ற நூலையும் வெளியிட்டார்.

இன்றளவும் அன்னாரின் இந்நூல், கல்வியியல் மாணவர்களுக்குப் பயனுடைய ஒரு உசாத்துணை நூலாக விளங்குகின்றது. அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சபா.ஜெயராசா, சண்முகநாதன் ஆகியோரும் கல்வித் தத்துவம் தொடர்பான நூல்களை வெளியிட்டனர்.

பேராசிரியர் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பவற்றில் பணியாற் றியவர். யாழ் பல்கலைக்கழகத்தில் அவர் கல்வியியல் பேராசிரியராகவும்

கல்வித்துறைத் தலைவராகவும் பதவி உயர்வு பெற்றார். அவருடைய கல்வியியல் அறிவையும் அனுபவத்தையும் அங்கீகரித்த மதுரை காமராஜ் பல்கலைக்கழகம் அவரை அங்கு வருகைதரு பேராசிரியராக நியமித்தது.

அவருடைய கல்வித் தத்துவம் சார்ந்த நூல்களுக்கு அப்பால் அவர் தமிழர் சார்ந்த இரு விடயங்களை உணர்வுபூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் அணுகினார். தாய்மொழியே பிள்ளைகளின் கல்வி மொழியாக அமைதல் வேண்டும் என்பதில் மிகவும் கடுமையான போக்கினை அவர் கடைப்பிடித்தார். அதற்கு ஒரு காரணமும் இருந்தது. 1960களில் வெளிவந்த இரு (அரசாங்க) அறிக்கைகளில், பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்விமொழி சிங்களமாகவும் அமைதல் வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தன.

பேராசிரியர் ஜே.சி. ஜயசூரியா தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழு (1961) இப்பரிந்துரையைச் செய்ய, தொடர்ந்து வந்த ஒரு அரசாங்க அறிக்கையில் அப்பிள்ளைகளின் கல்வி மொழி அரசகரும மொழியாக அமைதல் வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. அக்காலத்தில், பேராசிரியர் சந்திரசேகரம் இப்பரிந்துரைகளைக் கடுமையாக விமரிசித்தும் பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதினார். எவ்வாறாயினும், பின்னர் இப்பரிந்துரைகளுக்கு எழுந்த எதிர்ப்பின் காரணமாக அவை கைவிடப்பட்டன.

பேராசிரியரவர்கள் பேராதனையில் கற்பித்த காலத்தில் இருந்த ஒரு சிறந்த பழக்கம், அவர் எப்போதுமே நூல் நிலையத்திலேயே இருப்பார். கல்வியியல் துறையில் ஒதுக்கப்பட்ட அலுவலக அறையில் அவர் எப்போதுமே நீண்ட நேரம் இருந்ததில்லை. அவரை சந்திக்க வருபவர்கள் அவரை நூல் நிலையத்திலேயே சந்தித்துக் கொள்வார்கள். முழு நேரமும் நூல் நிலையத்தில் அமர்ந்து வாசித்துத் தனது விரிவுரைகளைத் தயாரிப்பது அவருடைய பயனுள்ள பொழுதுபோக்காக இருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

துறைபோகக் கற்ற ஒரு பேராசிரியரிடம் இருக்கவேண்டிய அறமும் ஞானமும் மட்டுமன்றி மிகவும் சாந்தமும் அமைதியும் நிறைந்த சுபாவம், அடக்கமான பேச்சு, மாணவர்களை உயர்கல்வி கற்க வழங்கிய ஊக்கம் என்ற முறையில் பல்வேறு பாராட்டப்படக்கூடிய மாண்புகளை மிகக் கொண்டவராக அன்னார் விளங்கினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

• • •

# பேராசிரியர் சந்திரசேகரத்தின் கல்விப் பணிகளும் ஆய்வுகளும்

பேராசிரியர் செ.யோகராசா

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் (ப.ச.) அவர்களது ஆய்வு முயற்சிகள் பலவற்றினதும் அடித்தளமாகவிருப்பது, அன்னார் நவீன கல்வியியலை தமிழிற்கு கொண்டுவந்த பின்புலமாகும். அதாவது, சென்ற நூற்றாண்டின் அறுபதுகளளவிலே பல்கலைக்கழக உயர் கல்வி தாய்மொழியிலாக்கப்பட்ட சூழலில் கல்வியியலைத் தமிழிற்கு அறிமுகம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவ்வேளையில் அதற்காக செயற்பட்டவர்களுள் தனித்துவமான ஒருவராக 'ப.ச' திகழ்ந்தார். கல்வியியலை அறிமுகப்படுத்தியபோது பழையன புகுதலோடு புதியன புகுதலும் அவ்வேளை நடைபெற்றுள்ளது என்பதே 'ப.ச' அவர்களின் தனித்துவமான இயல்பாகின்றது.

**'கல்வித் தத்துவம்'**

மேற்கூறிய சூழலிலே கல்வித் தத்துவத்தோடு தொடர்புபட்ட தத்துவவாதிகள் பலர் பற்றியும் கல்வியியல் துறை கவனம் செலுத்துவது தவிர்க்கவியலாததே. இவ்விதத்திலே பிளேட்டோ, ரூசோ, அரிஸ்டோட்டில், ஜோன்டுயி, மொந்தெஸ்ஸோரு, பெஸ்ட்லோசி முதலான ஐரோப்பிய தத்துவவாதிகளை அறிமுகப்படுத்துவதிலேயே மேலைத்தேயக் கல்விமுறை சிரத்தை எடுத்தது. காலனித்துவம் வழங்கிய அக்கல்வி முறையில் அது தவிர்க்கவியலாதது. இத்தகைய சூழலில் அவர்களுக்குச்

சமமாக இந்தியர்களான ஸ்ரீ இராமகிருஷ்ணர், அரவிந்தர், தாகூர் முதலானவர்களை தமிழுக்கு அறிமுகப்படுத்துவதில் (சந்திரசேகரம்,ப.,2018) முன்னின்றார் 'ப.ச'. அதாவது கல்வித் தத்துவத்துறை என்ற விதத்திலே மேற்கும் கிழக்கும் இப்போது சந்தித்துக்கொள்கின்றன என்பது முக்கியமான விடயமாகின்றது.

அதுமட்டுமன்று ஈழத்துப் பெரியோர்களான ஆறுமுகநாவலர், அநாகரிக தர்மபால, அறிஞர் சித்திலெவ்வை, விபுலாநந்த அடிகள் முதலானோரும் இத்துறைக்கு அறிமுகமாகின்றனர். (இவர்கள் பற்றி எழுதிய கட்டுரைக்கான பொதுத் தலைப்பு, 'ஈழத்துச் சிந்தனைக் கதிர்கள்' (மேலது: 87) என்பது கவனிக்கத்தக்கது.) மேலே இறுதியாகக் குறிப்பிட்ட இந்தியத் தத்துவவாதிகள் பற்றி இந்திய அறிஞர்களும் எழுதியிருக்கக்கூடிய சூழலுண்டு. ஆயின், ஈழத்தவர்களை முக்கியப் படுத்துவது ஈழத்து அறிஞர்களால் மட்டுமே இயலும் என்பது நினைவு கூரப்படத்தக்கது. கீழைத்தேய கல்வித் தத்துவவியலாளர் வரிசையில் ஈழத்தவர்களும் இணைக்கப்படுவது சாதாரண விடயமன்று என்பதே நமது கவனத்துக்குரியது.

மேற்குறிப்பிட்டவாறு ஒரே வரிசையில் மேலைத்தேய – கீழைத்தேய தத்துவவியலாளர் இணைந்தமை தொடர்பாக சுவாரஸ்யமானதும் முக்கியமானதுமானதொரு சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமானது. கலாநிதிப்பட்ட ஆய்வின் பொருட்டு இலண்டன் சென்று அங்கே இராமகிருஷ்ண மிஷன் தொடர்பான ஆய்வு முயற்சியிலே 'ப.ச' அவர்கள் ஈடுபட்டதும் அவ்விடயம் தொடர்பாக அவருக்கும் மேற்பார்வையாளருக்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக, அவர் தமது கலாநிதிப்பட்ட ஆய்வு முயற்சியைத் தொடராமல் திரும்பி வந்ததுமே அச்சம்பவமாகும். அவ்வாறெனில், அது மிக முக்கியமானதொரு விடயமாகக் கருதப்பட வேண்டும். அதாவது கீழைத்தேய தத்துவவியலும் மேலைத்தேயத் தத்துவவியலும் தம்முள் முட்டிமோதிக் கொண்டன என்று அதனைக் கருதுவதிலே தவறில்லை.

### பாரம்பரியத் தமிழ்க் கல்வி முறைமை

'ப.ச' அவர்கள் கீழைத்தேயக் கல்வி மரபுகள் பற்றிய தேடலிலும் கவனஞ்செலுத்துகிறார். குறிப்பாக, பாரம்பரியத் தமிழ்க் கல்வி மரபுகள் பற்றிய தேடலில் அதிக கவனஞ் செலுத்தினார். இவ்விதத்தில் முக்கியம்

பெறும் கட்டுரைகளுள் ஒன்று 'தமிழ் நெறி காணும் கல்வி மரபு' என்பது. பழங்கால ஆசிரியரது இயல்புகள், சிறப்புகள், கலைத் திட்டம், போதனா முறை முதலியன இக்கட்டுரையில் அலசப்படுகின்றன.

கல்வியியல் நோக்கில் பழந்தமிழ் நூல்கள் பற்றிய ஆய்விலும் கவனஞ் செலுத்துகின்ற 'ப.ச.' அவர்கள் மணிமேகலை, திருமந்திரம் முதலியவற்றில் வெளிப்படும் பாரம்பரியக் கல்விச் சிந்தனைகள் பற்றியும் இனங்காண முற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்திலே அதிதிப் பேராசிரியராகப் பணிபுரிந்த வேளை கல்விப் பேராசிரியை திருமதி கோதைப்பிள்ளையுடன் இணைந்து தமிழர் கல்வி மரபு பற்றி ஆராய்ந்துள்ளார்).

## சமயஞ்சார் கல்வி மரபுகள்

சமய வழிப்பட்ட கல்வி மரபுக்கு முக்கியமளித்த மேலைத்தேய வழிவந்த கல்வியியல் துறை, கிறிஸ்தவ கல்வி மரபுக்கு முக்கியமளிப்பதும், தவிர்க்க இயலாததே. இந்நிலையில் 'ப.ச.' அவர்கள் இஸ்லாமியக் கல்வி மரபு, இந்து சமயக் கல்வி மரபு, வேதாந்தக் கல்வி மரபு முதலியனவற்றையும் கவனத்திற்குட்படுத்தி ஆய்வுகள் மேற்கொண்டமையும் முக்கியமானதே. இவற்றுள் வேதாந்தக் கல்வி மரபில் அதி முக்கிய கவனம் செலுத்தியமை குறிப்பிடத்தக்கது. தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலத்திலும் ஸ்ரீ இராமகிருஷ்ணரது வேதாந்தக் கல்வி மரபு பற்றி அவர் எழுதுகின்றார் (சந்திரசேகரம்,ப., 1987:115).

மேலைத்தேய அறிஞர்களது கல்விச் சிந்தனைகளிலேகூட வேதாந்த மரபினை 'ப.ச' அவர்கள் இனங்காண்கின்றமை குறிப்பிடத்தக்கது. 'வேதாந்தக் கல்வி நெறியாளர் வேட்ஸ்வேத் கண்ட சால்பினன்' என்ற கட்டுரை இதற்குச் சிறந்த சான்றாகின்றது.

## கல்வியும் பிற துறைகளும்

நவீன கற்கை நெறிகள் எவையும் நவீனகாலச் சூழலிலே அகன்ற பார்வையிலே பார்க்கப்படவேண்டியது அவசியமானது. இத்தகைய நிலையில் 'கல்வியும் அரசியலும்', 'கல்வியும் பொருளாதார விருத்தியும்', 'கல்வியும் மெய்யியலும்', 'கல்வியும் விஞ்ஞானமும்' என்ற விதங்களில் நோக்கி (சந்திரசேகரம்,ப.,2011) விரிசிந்தனை எய்துவதற்கான தடத்தை இட்டவராகவும் 'ப.ச' அவர்கள் தம்மை இனங்காட்டுகின்றார் என்பதும் முக்கியமானதொரு விடயமாகும்.

**கீழைத்தேயக் கல்வியியற் சிந்தனை மரபுகள்**

'ப.ச.' அவர்கள் கூடுதலாக வெளிப்படுத்திய அல்லது கூடுதலாக அக்கறை காட்டிய கல்வியியற் சிந்தனை மரபுகள் எவை என்பது பற்றிக் கவனிப்பதும் அவசியமானது. இவ்வாறு நோக்குகின்றபோதும் 'ப.ச' அவர்கள் கீழைத்தேசச் சிந்தனை மரபுகளிலே கூடுதலாகச் சிரத்தை கொண்டிருப்பதும் அவரது தனித்துவமாக அது இருப்பதும் புலப்படுகின்றது. இவ்விதத்தில் முக்கியம் பெறும் கட்டுரைகளுள் பின்வருவன சிலவாகும்.

இராமகிருஷ்ண வேதாந்தக் கல்வி மரபு.

கல்வியியலில் அறநோக்குச் சிந்தனை.

தவத்திரு விபுலானந்த அடிகளின் பல்கலைக்கழகக் கல்விச் சிந்தனைகள்

காந்திக் கிராமக் கிராமியப் பல்கலைக்கழகம்.

கல்வியியலில் அறநோக்குச் சிந்தனை.

மேற்கூறியவாறான கல்விச் சிந்தனை மரபுகளில் சிரத்தை கொண்டிருந்த 'ப.ச.' அவர்கள் கீழைத்தேசங்களில் உருவான அத்தகைய சிந்தனை மரபுகளை மேலைத்தேசச் சிந்தனை மரபுகளில் இனங்கண்டார் என்பது – அவ்விதத்தில் கீழைத்தேச, மேலைத்தேயச் சிந்தனை மரபுகளை இணைத்துப் பார்க்கும் புதிய அணுகுமுறை ஒன்று உருவாவதற்கு முக்கிய காரணமாக விளங்கினாரென்பது புலப்படுகின்றது. உதாரணமாக, இராமகிருஷ்ண வேதாந்தக் கல்வி மரபு பற்றிப் பேசவந்த 'ப.ச.' அவர்கள் ஆரம்பத்தில் பின்வருமாறு கூறுகின்றார்:

"கல்வியின் இலக்குகள், அதன் செயற்பாடுகள், கோட்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்டனவாயினும் அவை யாவும் மனிதனையே மையமாகக் கொண்டன. இந்துமத இயக்கங்களும் மனிதனை மத்தியாகக் கொண்ட எண்ணக் கருக்களையுடையன. இவ்விரு எண்ணக்கருக் களுக்குமிடையே நெருக்கமான தொடர்பு காணப்படுகின்றது. மனிதனை அறியாமையில் இருந்து அறிவுக்கு இட்டுச் செல்வதே கல்வியின் நோக்கம், மனிதனின் உள்ளொளியைப் பெருக்கி, உவப்பிலா ஆனந்தத்தை மிளிரச் செய்வதே சமயத்தின் இலக்காகும். மேலே கூறிய பணியில் இராமகிருஷ்ண சங்கம் முக்கியத்துவம் பெறுகின்றது" (சந்திரசேகரம்,ப., 2012:01).

கல்வியியலில் அறநோக்குச் சிந்தனை என்ற விடயம் பற்றிப் பேச முற்படும்போது இற்றை உலகச் சூழலோடு இணைத்துப் பார்க்கின்றார். ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

"உலகம் இன்று அறிவியலில், அறஇயலில் எழுந்த மனித இயலையும் விஞ்ஞானச் சிந்தனை, பண்பு முறைகள் ஆகியவற்றில் எழுந்த விஞ்ஞானத்தையும் கல்வியின் மூலம் இணைத்து மனிதவியற் கோட்பாட்டினை உருவாக்குகின்றது என்று பொதுவாகக் கொள்கின்றோம். அறவியல் சார்ந்த அறிவியல் மனிதவியற் கோட்பாடே இன்று உலகு, மனித குலம் வேண்டிநிற்பது..."(சந்திரசேகரம்,ப., 2012:56).

'தவத்திரு விபுலாநந்த அடிகளின் பல்கலைக்கழகக் கல்விச் சிந்தனைகள்' என்ற கட்டுரையின் ஆரம்பப் பகுதிகளில் ஒன்று பின்வருமாறு அமைகின்றது:

"பல்கலைக்கழகக் கல்வி கிரேக்கம், உரோமம் போன்ற நாடுகளில் ஆரம்பமானது எனப்பல மேற்கத்திய அறிஞர்கள் கருத்துக்கு விடை பகரும் முகமாக, அறிவுச் சுடர் இந்நாடுகளிலும் இருந்து பரவியது எனும் கருத்தினை ஏற்றுக்கொள்ளும் அதேவேளையில் நாலந்தா, தக்கசீலம், காஞ்சிபுரம் ஆகியன பல கலைகளில் உலக நோக்கு மட்டுமல்ல, இவை உலகக் கல்வி நிறுவனங்களாகவும் விளங்கின என்னும் கருத்தையும் வலியுறுத்துவார்.

இக்கருத்தினை எடுத்துரைத்த அடிகளார் பண்டை நாளிலிருந்து கிரேக்க, உரோம நாகரிகங்கள் செழுமைபெற்று விளங்கினாலும் ஐரோப்பாக் கண்டத்தில் அஞ்ஞானவிருள் பரவியிருந்த காலத்தில் அவ்விருட் படலத்தை அகற்றும் அறிவு விளக்கத்தைக் கொடுத்தோர் கிழக்கிலிருந்து போய் மேநாட்டில் வெற்றிக்கொடி நாட்டிய அராபியரே என்னும் கருத்தினையும் தருவதைக் காண்கின்றோம். பாக்தாத் நகரத்தில் விளங்கிய பல்கலைக்கழகம் கிழக்கிலுள்ள ஞானத்தைப் பெற்று அறிவு அமுதத்தை வழங்கி வந்தது. கோர்டோவா நகரில் விளங்கிய இஸ்லாமியப் பல்கலைக்கழகம் மேனாட்டு அறிவினை விமர்சனம் செய்யும் நிறுவனமாக விளங்கியது என்னும் செய்தியைத் தருவதன்மூலம் இஸ்லாமியப் பல்கலைக்கழக நெறியினை நமக்கு அவர் தருவதை உணர்கின்றோம்.

வானநூல், கணிதம், தத்துவம் ஆகியவற்றின் தொட்டிலாக விளங்கிய பாரதம் அராபியர்கள் மூலம் ஐரோப்பாவுக்கு அறிவுச்

சுடரைப் பரப்பியது என்பது அவரது வாதமாகும்" (சந்திரசேகரம், ப., 2011:09).

மேலுள்ள மேற்கோள் நீண்டதாயினும் நிதானமாக அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை மனங்கொள்க.

'காந்திக் கிராமக் கிராமியப் பல்கலைக்கழகம்' என்ற கட்டுரை பின்வருமாறு முடிகின்றது:

"இலங்கை போன்ற வளர்வுறு நாடுகளிலும் இத்தகையதான உயர்கல்வி நிலையங்கள் பல தேவை என்பதை கல்வியியலாளர் ஏற்றுக்கொள்வர். இவ்வித கல்வி நிலையங்கள் சமகால சமுதாயத்தின் சமூக, பொருளாதார, கலாசார பாரம்பரியங்களில் ஒட்டித் தோன்றக் கூடிய கல்வி முறை தொடர்பான பலதரப்பட்ட பிரச்சினைகளையும் தீர்க்க வல்ல காந்தியக் கல்வி நெறி உலகளாவிய கல்வி நெறியாக வளரும் தன்மையது" (சந்திரசேகரம்,ப., 2012:49).

கீழைத்தேயக் கல்வியியற் சிந்தனைகளுள் வேதாந்தக் கல்வி மரபே 'ப.ச' அவர்களைக் கூடுதலாக ஈர்த்திருந்தது என்று கூறத் தோன்றுகின்றது. இவ்விதத்தில் 'பிரெஞ்சு நாட்டின் கல்விச் செயற்பாடுகள்' என்ற கட்டுரையும் எமது கவனத்தை ஈர்க்கின்றது. இக்கட்டுரையில் பின்வரும் பகுதிகள் கவனத்திற்குரியவை:

"கீழைத்தேய நாடுகளில் பண்பாட்டு, கலாசார கலசம் பாரத நாடு என்றும் மேலைத்தேய நாடுகளின் பண்பாட்டுத் தொட்டிலாக விளங்கியது கிரேக்கம் என்றும் கொள்வது மரபு. ஆனால் காலம் செல்லச் செல்ல மேற்கத்தேய நாடுகளின் பண்பாட்டுச் சிகரமாக பிரன்சு நாடு உருவெடுத்தது. அத்தோடு 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டுகளில் பாரதத்தில் உதித்த வேதாந்த நெறியும் இந்நாட்டுக் கத்தோலிக்க நெறியோடு ஒன்றித்தது. ரொமெயின் ரோலன்ட் போன்ற தலைசிறந்த அறிஞர்கள், சுவாமி விவேகானந்தர், காந்தியடிகள், கலாயோகி ஆனந்தகுமாரசாமி போன்றோரை உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். பிரன்சுக் கல்வி முறையை நன்கறிந்தால் மேல்நாட்டுக் கல்வியை அறிந்ததற்கு ஒப்பாகும்" (சந்திரசேகரம்,ப., 2012:96).

"கடந்த நாற்பது வருடங்களாக வேதாந்தக் கல்வி மரபு, பிரன்சு நாட்டில் பட்டொளி வீசிப் பரவுவதைக் காணலாம். மூதறிஞர், தத்துவ ஞானி ரொமெயின் லாண்ட் அவர்கள் தலைமையில் இவ்வியக்கம்

வளர்ந்து வருகின்றது. சமய சமரசம், உலக ஒற்றுமை, ஒன்றே குலம் எனும் கோட்பாடு, எல்லோருக்கும் கல்வி பொதுச் சொத்து எனும் நீதி, ஆத்ம சாந்தி, உலோகாய வளர்ச்சி ஆகிய நெறிகளைக்கொண்டு விளங்குவது இராமகிருஷ்ண சங்கம் இச்சங்கம் இந்நாட்டில் அளப்பெரிய சேவை ஆற்றுகின்றது" (சந்திரசேகரம்,ப., 2012:96).

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் செயற்பாடுகள்

'ப.ச.' அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் எத்தகைய சமூக நோக்குடன் செயற்பட்டார் என்பதனை அவரது தலைசிறந்த மாணவர்களுள் ஒருவராகிய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்:

"அவர் துறைத்தலைவராக இருந்த வேளையிற் கல்விக் கழகம் ஒன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே ஆரம்பித்தார். 'கலைஞானம்' என்ற பெயரில் ஒரு கல்வியியற் சஞ்சிகையை ஆரம்பித்து மாணவரின் எழுத்தாக்க முயற்சிக்கு உற்சாகமளித்தார்..."

"இலங்கைப் பெருந்தோட்டக் கல்வி முஸ்லிம்களின் கல்வி முதலாம் துறைகளிலும் பேராசிரியர் கவனம் செலுத்தினார். அத்துறைகளிலே ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு மாணவருக்கு உற்சாகமளித்தார். தொடர்ந்து பேராசிரியர் சோ. சந்திரசேகரம், திருமதி. பத்மநாப ஐயர் முதலியோர் பெருந்தோட்டக் கல்வி பற்றி ஆராய்ந்தனர். ஜனாப் அப்துல் சமீம், ஜனாப் எம். ஜமீல் முதலாம் மாணவர்கள் முஸ்லிம்களின் கல்வி பற்றி ஆராய்ந்தனர்..." (கலைக்கேசரி – 35: 33-34).

மேலும் தமிழ்நாட்டிலுள்ள மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகம், காந்திக் கிராமப் பல்கலைக்கழகம் முதலானவற்றுடன் யாழ் பல்கலைக்கழக கல்வித் துறையை இணைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டார்.

## மாணவர் பரம்பரை உருவாக்கம்

'ப.ச.' அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலே விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் விளங்கி நீண்டகாலமாகக் கற்பித்து வந்தமை காரணமாக கல்வியியல்

துறை சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் பலரை உருவாக்கும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. இவ்வாறானதொரு பட்டியல் இன்று பரவலாக அறியப்பட்ட பேராசிரியர்கள், சோ. சந்திரசேகரம், சபா ஜெயராசா, பேராசிரியர் சோ. கிருஷ்ணராசா தொடக்கம் சுபாஸ் சந்திரபோஸ் வரை நீண்டு செல்லக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

**கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கம்**

கிழக்கு மாகாணம் கல்வியில் உயர்ந்த நிலையை எய்த வேண்டும் என்பதிலே கூடிய அக்கறை கொண்டிருந்த 'ப.ச' அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்று கிழக்கு மாகாணத்துக்கும் பல்கலைக்கழகம் வேண்டும் என்பதை வலியுறுத்திக் கட்டுரைகள் எழுதியிருந்தார். அரசியல் முயற்சிகளினால் அவரது கனவு நனவானாலும் அங்கு பணியாற்றுவதற்கான சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவில்லை. எனினும் அங்கு கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற பேராசிரியர் ம. செல்வராசா அவரது மாணவர் என்பதையிட்டு மனநிறைவு கொள்ளலாம்.

**கல்வியியல் சாராத துறைகளில்**

'ப.ச.' அவர்கள் ஆரம்ப காலங்களில் நவீன இலக்கியம் சார்ந்த ஆய்வுகளிலும் ஈடுபட்டிருப்பதாக அறிய முடிகின்றது. மேற்கூறிய விதத்தில் 'பாரதி' சஞ்சிகையிலே சந்திரநாதன் என்ற பெயரில் எழுதிய 'இருபதாம் (20 ஆம்) நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும்' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில் முக்கியம் பெற்று விளங்கிய பாரதியார், பாரதிதாசன், தேசிகவிநாயகம்பிள்ளை ஆகியோரது கவிதைகள் பற்றி விரிவான முறையிலே ஈழத்தில் வெளிவந்த முதல் ஆய்வுக் கட்டுரை என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி தமிழ் நாட்டிலேகூட மேற்கூறியவாறான விரிவும், ஆழமும் கொண்ட, நவீன கவிஞர்கள் பற்றிய கட்டுரைகள் மிக அரிதாகவே அவ்வேளை வெளிவந்திருந்தன. இன்னொருவிதமாகக் கூறின், பல்கலைக்கழகமட்டத் தமிழ்நாட்டு ஆய்வாளர்கள் நவீன இலக்கிய வளர்ச்சி பற்றிய தேடலில் ஆர்வம் காட்டுவதற்கு முன்பே ஈழத்து ஆய்வாளர்கள் ஈடுபாடுகாட்ட ஆரம்பித்துவிட்டனர் என்பது

வற்புறுத்திக் கூறவேண்டிய ஒன்றாகும். 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதிய வி. செல்வநாயகம் அவர்கள் அந்நூலிலே 'இருபதாம் நூற்றாண்டு'ற்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தமை அதற்குச் சான்றாக அமைகின்றது. அத்தகைய நிலையிலான இலங்கைப் பல்கலைக்கழகச் சூழல், 'ப.ச.' அவர்களையும் இத்துறையிலே ஈடுபாடு கொள்ள வைத்திருக்கலாம்.

மேற்கூறியவாறான வேறு கட்டுரைகளும் 'ப.ச' அவர்களால் எழுதப்பட்டிருக்கலாம். அறிவை மக்கள் மயப்படுத்துவதிலும் அவர் ஊன்றிய கவனஞ்செலுத்திய நிலையில் வீரகேசரி, தினகரன், தினபதி, டெயிலி நியூஸ், த ஐலண்ட் முதலிய பத்திரிகைகளிலும் கட்டுரைகள் எழுதியிருக்கின்றார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலே அதிதிப் பேராசிரியராக இருந்த வேளையில் அவராற்றிய விரிவுரைகளை நூலுருப்படுத்த அவரது மாணவர்கள் விரும்பியிருந்தனர் என்றும் அறியப்படுகின்றது. அவ்வாறானவற்றைத் தேடுவது இன்றைய தலைமுறையினரின் கடமையாகின்றது.

**உசாத்துணைகள்:**


- சந்திரசேகரம்,ப., 1987, கல்வியியற் கோவை, கல்விக் கழகம், கல்வியியற் புலம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
- சந்திரசேகரம்,ப., 2011, கல்வித் தத்துவம், சேமமடு பொத்தகசாலை, கொழும்பு.
- சந்திரசேகரம்,ப.,2012, கல்வியியற் சிந்தனைகள், சேமமடு பொத்தகசாலை, கொழும்பு.
- சந்திரநாதன், 1948, 'இருபதாம் (20 ஆம்) நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும்,' பாரதி - இதழ் - 10, கலை இலக்கிய அவை, மண்டூர்.
- ஜெயராஜா, சபா, (ஆண்டு இல்லை), 'நவீன கல்வியியலைத் தமிழுக்குக் கொண்டுவந்த பேராசிரியர் ப. சந்திரசேகரம்', கலைக்கேசரி- 35, வீரகேசரி வெளியீடு, கொழும்பு.

# பேராசிரியர் ப. சந்திரசேகரத்தின் கல்விச் சிந்தனைகள்

கலாநிதி சி. சந்திரசேகரம்

**பே**ராசிரியர் ப. சந்திரசேகரம் பாடசாலை ஆசிரியனாக, பல்வேறு பல்கலைக்கழகங்களிலே விரிவுரையாளனாக, பேராசிரியராக என நீண்டகாலம் சமூக அக்கறையோடு பணியாற்றியவர். அறிவுத் தேட்டம் மீதுரப் பெற்ற அவர் கீழைத்தேயக் கல்வித் தத்துவங்களை மட்டுமன்றி மேலைத்தேயக் கல்வித் தத்துவங்களையும் நன்கு கற்றறிந்தவர். இத்தகைய முதிர்ந்த அனுபவங்களின் வழியே முற்போக்கானதும் சமூக மாற்றங்களுக்கு வேண்டியதுமான கல்விச் சிந்தனைகளை அவர் எமக்குத் தனது நூல்கள், கட்டுரைகள் மூலமாக விட்டுச்சென்றிருக்கின்றார். அந்தவகையில் அவரது “கல்வித் தத்துவம்”, கல்வியியற் கோவை” ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு அவரது கல்வியியல் நோக்கின் சில அம்சங்கள் பற்றி நோக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் கல்விப் புலத்தில் மட்டுமன்றி சமூக, சமய, தத்துவ மரபுகள் பற்றிய ஆழ்ந்த புலமையும் ஈடுபாடும் கொண்டிருந்தவர். அதன் காரணமாக அத்தகைய தளங்களில் நின்றுகொண்டு முன்னோக்கிச் செல்வதாக அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன. முக்கியமாக, கல்வியிலே பழைமையும் புதுமையும் ஒன்றிக்க வேண்டும் என்பது அவரது அடிப்படைக் கொள்கையாக இருந்தது. அவர் பழைமையைக் கருவாகவும் புதுமையை அதன்

உருவாகவும் கருதுகின்றார். பழைமையின் வழியே புதுமையும் புதுமை மூலம் பழைமையையும் காண்பதற்குக் கல்வி வழிகாட்ட வேண்டும் என்பது அவர் கருத்து. புதுமை போற்றப்பட வேண்டும். ஆனால் புதுமை என்ற சாயலில் பழைமையை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. பழைமையைப் பின்னோக்கு என்றும் புதுமையை முற்போக்கு என்றும் கூறும் அவர், இவை இரண்டும் இணைந்து வளர ஏதுக்கள் உள்ளன என்பதை எடுத்துக் காட்டுகின்றார். அதேவேளை பழைமைகள் எல்லாவற்றையும் ஏற்பதையும் மறுக்கின்றார். அதாவது கால மாற்றத்தின் மத்தியில் சில பழைமைகள் கழிந்தே தீரும் சில வேளைகளில் கழியவும் வேண்டியிருக்கும் என்ற காலமாற்ற உணர்வுள்ளவராகவும் இருந்தார்.

பழைமை பயனும் பலமும் கொண்டது. ஆனால் அந்தப் பழைமை சூழ்நிலைக்கு ஏற்ப புதுமையைக் காணுவதாக அமையவேண்டும் கல்வி பழைமை ஊற்றிலிருந்து புதுமை பொங்கி எழும் காட்சியைக் கவிதையாக்கவேண்டும் என்று பழைமைப் பற்றுநிலை புதுமைக்குத் தளமாக அமையுமாற்றை ஏத்துக்காட்டுகின்றார். பழைமைப் பற்றுநிலையினையும் புதுமையின் மூலம் பழைமையை நோக்கும் நிலையினையும் வளர்ப்பதன் மூலம் உள்ளத்தில் அன்பு என்ற உணர்ச்சி நிலையை எற்படுத்த முடியும் என்பதும் இந்த அன்பு நாட்டன்பாகவும் மொழியன்பாகவும் வளர்ச்சியடையும் என்பதும் அவரது கோட்பாடாகும்.

இந்தப் பழைமையின் முதன்மைக் கூறு சமூக மரபாகும். கல்விக்குச் சமூக மரபு அச்சாணி போன்றது. கல்விச் செயல்முறை சமூக மரபினைப் பேணிக் காத்து அதனைச் சமூகத்தில் பரப்ப வேண்டும் என்கிறார். உயிரியல் மரபின் செல்வாக்கும் சமூக மரபின் செல்வாக்கும் இணைந்து குழந்தையின் முழுமைக்கு உதவியாகின்றன. உயிரியல் மரபிலிருந்து பெறும் பண்புகள் நிலைத்து வாழ்க்கை செயற்படுவதற்கு சமூக மரபினின்றும் பெறப்படும் பண்புகளே முக்கியமாகின்றன. ஆளுமை வளர்ச்சிக்கு சமூக மரபின் செல்வாக்கு சிறப்பாக வேண்டப்படுவதால் கல்வி மூலம் சமூக மரபு ஊட்டப்பட வேண்டும். குழந்தைகள் பெறும் வளர்ச்சி, சமூக அனுபவங்கள் எல்லாம் சமூக மரபைத் தழுவி எழுந்தவை. சமூக மரபு என்பது மனித இனத்தை முன்னேற்றிச் செல்லும் சிறந்த பாதை. சமூக மரபு புதுமைக்கும் வளர்ச்சிக்கும் தற்கால ஒழுங்கிற்கும் அவசியமானது எனக் கருதும் அவர், கல்விவழி ஊட்டப்படும் சமூக மரபுகள் சமூக இயலையும்

பண்பாட்டையும் அறிய உதவும் திறவுகோலாகவும் வாழ்வை வளம்படுத்தி நீதிகளைப் புகட்டும் நெறியாகவும் அமையவேண்டும் என்கிறார்.

அந்தச் சமூக மரபு மூலம் நுண்புத்தியை வளர்க்கலாம் என்பது அவரது கருத்து. அதாவது, கல்வியின் நோக்கம் முன்னோரால் உருவாக்கப்பட்டு கைமாறப்பட்டு வந்த சமூக மரபுகளை இன்றைய தலைமுறைக் குழந்தைகளுக்கு வழங்குவதாக அமைய வேண்டும் என்கிறார். இந்த இடத்தில் சமூக நிலையங்களின் (பாடசாலை உள்ளிட்ட) கடமைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றார்:

- புதியனவற்றைக் கண்டுபிடிக்கும் ஆற்றலை வளர்த்தல்.
- கருத்துக்களை வாழ்க்கைக் கருத்தாக்கி மக்களுக்கு அளித்தல்.
- சமூக பண்பாட்டினைப் பாதுகாத்து அதை மேலும் சிறப்பாக்கி அடுத்துவரும் மக்களுக்கு வழங்கல்.

இங்கு அவரது சமூக மாற்றம் பற்றிய அக்கறை அடிப்படையாக அமைந்துள்ளமை தெரிகின்றது. கல்வியின் மூலம் நிகழ்காலத்தை உணருதல் வேண்டும். அத்துடன் இறந்த காலத்துக்குரிய பண்டைய அறிவினைப் பக்குவப்படுத்தி நிகழ்காலத்துக்கு உரியதாக்க வேண்டும் என்பது அவரது அடிப்படையான கருத்தாகும். முக்கியமாக கல்வி அறிவியலை வளர்க்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றார். ஒரு நாட்டின் கல்வித் திட்டம் விஞ்ஞான நோக்கில் வளர்க்கப்படுவது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமூக, பண்பாட்டு வளர்ச்சிக்கும் முதற்படி என்பது அவரது கொள்கை.

“விஞ்ஞானம் கருத்துக் கல்வியாகவும் தன்னியக்க ஆற்றலை வளர்க்கும் கல்வியாகவும் இருக்க வேண்டும். விஞ்ஞானம் வாழ்க்கைப் பயன் அளிக்கும் பாடமாக அமையவேண்டும்... விஞ்ஞானம் செய்யும் தொழிலுக்கு உதவி, பண்பாட்டு வளர்ச்சிக்கும் அழகுணர் ஆற்றல் வளர்ச்சிக்கும் உதவ வேண்டும். பிரச்சினைக்குத் தீர்வு காணும் திறன், தொகுத்து அறியும் சிந்தனை முறையில் பயிற்சி பெறல், தொழில் உற்பத்தி முறைகளில் விஞ்ஞான அறிவைப் பிரயோகித்தல் போன்ற பலன்கள் விஞ்ஞானக் கல்வியின் மூலம் கிடைப்பதால் விஞ்ஞானம் அன்றாட வாழ்க்கை ஒழுக்கமாக உருவாக வேண்டும்”(2011:19). என்று கூறும் அவர் நமது சமூகம் விஞ்ஞான சமூகமாகத் திகழ வேண்டும்

என்ற வேண்டுகோளை முன்வைக்கின்றார். இத்தகைய கருத்துக்களின் ஊடாக கல்வித் திட்டம், சமூக அமைப்பு, விஞ்ஞான வளர்ச்சி என்பன இணைந்து வளரவேண்டியன என்ற கருத்தை அவர் முன்வைக்கின்றார்.

மேலும், சமூக மரபுகளிலே தாய்மொழியை அவர் முன்னிலைப் படுத்துகின்றார். அகக்காட்சி, மன எழுச்சி, ஆராயும் திறன், ஆக்கும் திறன் ஆகியவற்றைத் தாய்மொழி சிறப்பாக வளர்க்கும் சக்தி கொண்டது. குழந்தைகள் தாய்மொழி மூலமே தம் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் தெளிவாக வெளியிட முடியும். அவர்களது படைப் பாற்றல் தாய்மொழி மூலம் வளரும் ஓர் இனத்தின் தாய்மொழி சிதைந்தால் அவர்களின் பண்பாடும் உயர்நிலையும் அழியும் நிலை உண்டாகும் என்ற யதார்த்தத்தை எடுத்துக் காட்டுகின்றார். இதனால் தாய்மொழியே போதனா மொழியாக அமையவேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைப்பதோடு நமது நாட்டு வரலாற்றின் கல்வி முறையில் தாய்மொழி பெறவேண்டிய இடம் வரையறுக்கப்படாமை, தாய்மொழிப் பிரச்சினைக்கு உளவியல், தத்துவ அடிப்படையில் தீர்வு காணப்படாமை ஆகிய குறைபாடுகளையும் அவர் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை பன்மொழிச் சமுதாயங்களில் மொழிப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிக் கூறவந்த அவர் இலங்கையில் ஒவ்வொரு இன மக்களும் தத்தம் சகோதர மொழியைக் கற்க வேண்டும் என்றும் இது இன ஒருமைப்பாட்டுக்கான வழியாக அமையும் என்றும் கூறுகின்றார்.

பழைமைப் பற்றுநிலையை வெளிப்படுத்திய அவர் எமது சமய, சமூக, தத்துவ, இலக்கிய, இலக்கண மரபுகளிலே பயிலப்பட்டுவந்த கல்வி முறையியல்களையும் கல்வி நோக்கினையும் பல்வேறு இடங்களிலும் முன்னுதாரணங்களாக, பின்பற்ற வேண்டிய நெறிகளாகக் காட்டுகின்றார். குறிப்பாக இன்றைய கல்வி முறை எவ்வாறு அமைய வேண்டும், அதன் நோக்கு எவ்வாறு அமையவேண்டும் முதலான விடயங்கள் பற்றிப் பேசும்போது எமது சமய, சமூக, தத்துவ, இலக்கிய, இலக்கண மரபுகளை முன்னிறுத்தித் தன் கருத்தை வலியுறுத்துகின்றார். கல்விக்கு வரைவிலக்கணம் கூறவந்த அவர் இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய மரபுகளில் இருந்தும் எமது தமிழ் இலக்கியங்களில் இருந்தும் விளக்கம் தேடுகின்றார்.

'தமிழ் மரபும் கல்வி மரபும் தத்துவ அடிப்படையிற் சங்ககாலம் தொடக்கம் இன்றுவரையும் ஒன்றோடொன்றிணைந்து வளர்ந்து வந்துள்ளது' (2011:07) என்று அவர் கூறுவது குறிப்பிடத்தக்கது.

'தமிழ்நெறி காணும் கல்வி மரபு', 'மணிமேகலை கற்பிக்கும் அறநெறி', 'திருமந்திரம் தரும் கல்வி நெறி', 'இந்துசமயக் கல்வி மரபு' முதலான கட்டுரைகள் இந்த அடிப்படையில் அமைந்தவை.

பேராசிரியரின் கல்வியியற் கட்டுரைகளிலே அதிகமானவை கிழக்கத்தேய, மேற்கத்தேயக் கல்விச் சிந்தனையாளர்களது கல்வித் தத்துவங்கள் பற்றிய வெளிப்படுத்துகைகளாகவே அமைந்துள்ளன. இத்தகைய தத்துவங்களையெல்லாம் உள்வாங்கிக்கொண்டு காலமாற்றச் சூழலுக்குரித் தான ஒரு தத்துவத்தை முன்வைப்பதாகவே அவரது கல்விச் சிந்தனைகள் அமைந்துள்ளன. இன்னொருவகையில் கூறின், கிழக்கத்தேயக் கல்வித் தத்துவங்களதும் மேற்கத்தேயக் கல்வித் தத்துவங்களதும் அவரது பட்டறிவினதும் இணைப்பின் தொகுதியாகவே அவரது கல்வித் தத்துவம் அமைகின்றது. அந்த சிந்தனையூடாக எமது கல்வி முறையும் கல்வி நோக்கும் எவ்வாறு அமையவேண்டும் என்பதை முன்வைக்கின்றார். அதனூடாக சமூக, பொருளாதார வளர்ச்சியை, விடுதலையை அடைய முடியும் என்பது அவரது முடிவு.

"இந்நூலை யான் ஆக்கியதன் நோக்கம் கல்வித் தத்துவத்தைப் பற்றி யான் கற்றுச், சிந்தித்துச் சுவைத்து இன்புற்றவற்றை 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதற்கமையத், தமிழ்கூறு நல்லுலகிலுள்ள என் பிற சகோதரர்களும் சுவைத்து இன்புற வேண்டும் என்ற பேரவாவேயாகும். கல்விக்கோள்களை முதற்கண் உள்ளமைத்து முறைப்படுத்தி மேற்புலக் கல்வியாளர் நூல்களை ஒப்புநோக்கி என் பட்டறி வோடு பொருந்திக் கண்டு அதன் பயனாக அமைத்துள்ளேன்" (2011:x).

என்று 'கல்வித் தத்துவம்' என்ற நூலூலின் முன்னுரையில் அவர் கூறுவது மேற்படி கருத்தை வலுப்படுத்துகின்றது.

பேராசிரியரின் கல்விச் சிந்தனைகளிலே எல்லோர்க்கும் கல்வி, சகோதரத்துவம், ஒருமையுணர்வு என்பன முக்கியமானவை. இதற்கு மாக்சிஸம் மீதும் மாக்சிஸ கல்விச் சிந்தனையாளர்கள் மீதும், வேதாந்தத் தத்துவத்தின் மீதும் அவருக்கிருந்த ஈடுபாடும் அவரது மனிதாபிமான நோக்கும் அடிப்படைகளாக இருக்க வேண்டும்.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற தத்துவம் கல்வியின் மூலம் முழுமைபெற வேண்டும் என்பார் அவர். அதாவது கல்வி வளர்ச்சி என்பது அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையில் இருந்து இடம்பெறவேண்டும் என்பது அவர் கருத்து. கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதை அவர் பல இடங்களிலே வற்புறுத்துகின்றார். மக்கள் தங்கள் நாட்டுக் குடிமக்களாக வளர்ந்து யாவரும் ஓர்குலம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் உலகப் பொது மக்களாகத் திகழ வேண்டுமெனின் அனைத்து நாடுகளிலும் எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகளுக்கு கட்டாயக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று உலகு தழுவிய சமூக முன்னேற்றத்துக்கான அடிப்படைக் கல்வியூட்டலை முன்மொழிகின்றார். அந்த அடிப்படையில் நமது நாட்டிலும் தேசியக் கட்டாயக் கல்வியை உருவாக்கி வழிசமைத்து மாணவர் பள்ளி செல்ல வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைக்கும் அவர் நமது கல்விச் சீரமைப்பில் இக்கருத்து முதலிடம் பெறவில்லை என்ற குறைபாட்டையும் எடுத்துக் காட்டுகின்றார்.

அனைவருக்கும் கல்வி என்ற மனிதாயதக் கல்விச் சிந்தனையைக் கொண்டிருந்த அவர் அச்சிந்தனையின் மற்றொரு வெளிப்பாடாக கல்வி ஒருமையுணர்வை வளர்ப்பதையும் அதனூடாக அமைதி, நல்லெண்ணம் என்பவற்றைப் பேணுவதையும் முதன்மை நோக்கங்களாகக் கொண்டிருக்கவேண்டும் என்பார். ஒரே உலகம் என்ற ஒருமை நிலையை கல்வியூடாக வளர்ப்பதற்கு பாடசாலையின் கல்வி நிரல்கள் பரிசீலனை செய்யப்படல், புதுப்போதனை முறைகள் கடைப்பிடிக்கப்படல், ஆசிரியர் பயிற்சி புது நோக்கில் மாற்றம் பெறல் என்ற வழிமுறைகளை முன்வைக்கின்றார்.

'நாம் உணர்வு' என்னும் உணர்வை வளர்ப்பது பள்ளிக்கூடத்தின் சிறந்த கடமைகளுள் ஒன்றெனவும் பள்ளிக்கூடத்திற் பெறும் இவ்வுணர்வு சமூகத்திற் தாக்கம் பெறும் எனவும் அவர் கூறுகிறார். குறிப்பாக ஒருமையுணர்வை வளர்க்கும் வண்ணம் வரலாறு, புவியியல், மொழி, கவின் கலை, சமயக்கல்வி என்பற்றை எவ்வாறு ஒழுங்கமைக்கலாம் என்பது பற்றி கருத்துரைக்கிறார். சமயக் கல்விப் போதனை பற்றிப் பின்வருமாறு கூறுவார்:

"மனித ஆளுமையின் மதிப்பு, மனித சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் முறையில் சமயக்கல்வி போற்றப்பட வேண்டும். மதக்காழ்ப்பு, மதக் கொடுமைகள் மக்களிடையே பிளவையும் பிணக்கையும் தோற்றும். இவற்றையுணர்ந்து சமரசம் போற்றும் மனப்பாங்கினை உருவாக்கும் நோக்குடன் சமயப் போதனை அணுகப்படல் வேண்டும்" (2011:201).

ஆகவே இத்தகைய பாடங்கள் மானிட நேயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும் என்பது அவரது கருத்தாகும். போதனைப் பொருட் கூறுகள் பற்றிக் கூறுமிடத்து இனவாதச் சார்பு, இராணுவ ஆதிக்கச் சார்புள்ள பொருட் கூறுகள் பாடநூல்களில் இடம்பெறலாகாது என்பார். கல்வி மூலம் சமாதானத்தையும் நல்லெண்ணத் தையும் வளர்க்க வேண்டும் என்ற அவரது உயரிய சிந்தனையையே இக்கருத்துக்கள் காட்டிநிற்கின்றன.

இறுதியாக, பேராசிரியரின் பின்வரும் கூற்றின் ஊடாக அவரது கல்விச் சிந்தனையின் விசாலமான தன்மையை நாம் தரிசிக்கலாம்.

"கல்விமூலம் பாலைவனம் சோலைவனமாக வேண்டும். அங்கே பயிர்களெல்லாம் செழித்து ஓங்கி வளர வேண்டும். சாலைகளிலே பல தொழிலும் பெருக வேண்டும். தருமநெறி தவறாது தழைக்க வேண்டும். என் இனம், என் மதம் என்று சொல்ல நாவெழாது இருக்க வேண்டும். தீண்டாமை எனும் நோய் அழிய வேண்டும்".

ஒரு தார்மீக சமூக, பொருளாதார மாற்றத்துக்கான – விடுதலைக்கான கல்விச் சிந்தனையின் வெளிப்பாடே இதுவாகும்.

**உசாத்துணைகள்:**


- சந்திரசேகரம்,ப., 2011, கல்வித் தத்துவம், சேமமடு பதிப்பகம், கொழும்பு.
- சந்திரசேகரம்,ப., 2015, கல்வியியற் கோவை, சேமமடு பதிப்பகம், கொழும்பு.


• • •

# விபுலாநந்த அடிகளாரின் கல்விச் சிந்தனைகள்

பேராசிரியர் சபா ஜெயராசா

**பே**ராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் வித்தியா குருவாக விளங்கியவர் சுவாமி விபுலாநந்தர். பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் யாழ் பல்கலைக்கழகக் கல்வியல் துறை புலமை வலுவுடன் எழுச்சி கொண்ட வேளை, சுவாமி விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகளை அவர் "கல்வித் தத்துவம்" பாட நெறியில் உள்ளடக்கினார். அதனைத் தொடர்ந்து சுவாமிகள் பற்றிய தேடல்களும் ஆய்வுகளும் மீட்சிகொள்ளத் தொடங்கின. 1985 ஆம் ஆண்டு கல்வியியற் கழகத்தில் பேராசிரியரின் தலைமையில் நான் ஆற்றிய உரையை அடியொற்றியே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

வேதாந்த மரபு, தமிழியல் மரபு ஆகிய இருபெரும் தளங்களில் இருந்து சுவாமி விபுலாநந்தரின் (1892 – 1947) கல்விச் சிந்தனைகளும் செயல்வடிவங்களும் முகிழ்த்தெழுந்தன. இந்தியச் சூழலில் அக்காலத்தில் வளர்ச்சி பெற்ற அரசியல் விடுதலை, சமூக விடுதலை, பண்பாட்டு விடுதலை ஆகியவற்றை அடியொற்றிய பழைமையின் தேடலும், மனிதரைச் சூழ்ந்துள்ள அனைத்து அழுத்தங்களிலுமிருந்து விடுபட வேதாந்த மரபு கூறும் பரம்பொருளிடத்துச் சரணாகதி அடைதலும் அவரது கல்விச் சிந்தனைகளின் நீள் பதிவுகளாக அமைந்தன.

உள்ளத்தின் அறியாமை, நம்பிக்கையீனம், அகங்காரம் ஆகியவை நீக்கப்படுவதற்கு இறைவன் மீது பூரண சரணாகதிக்கு இட்டுச்செல்ல

வல்லது கல்வியே என்பது விபுலாநந்த அடிகளாரின் கல்வி நோக்கு.

காலனித்துவக் கல்வி முறையைத் தீவிர விமர்சனங்களுக்கு உள்ளாக்கியவர்களுள் அடிகளார் முக்கியமானவர். எழுதுவினைஞரை உருவாக்குதலை முதன்மை நோக்காகக் கொண்டிருந்த அக்கல்வி முறைமையோடு இழையோடியிருந்த அடிமைத்தனத்தையும், அதிலிருந்து விடுதலை பெறுவதற்கான மாற்று வழிகளையும் அடிகளார் முன்மொழிந்தார்.

அக்காலத்தில் காலனித்துவக் கல்விமுறையை நிராகரிப்புக்கு உள்ளாக்கிய கல்விச் சிந்தனையாளர்களுள் போலோ பிரேரி, மகாத்மா காந்தி, இரவிந்திரநாத் தாகூர் ஆகியோர் முக்கியமானவர்கள். பிரேரியின் கல்விச் சிந்தனையில் ஒடுக்குமுறை விடுவிப்பு அரசியல் மேலோங்கி யிருந்தது. காந்தியின் கல்விச் சிந்தனையில் தன்னிறைவுப் பொருளாதாரத் துடன் இணைந்த அரசியல் மற்றும் ஆன்மீகச் சிந்தனைகள் முகிழ்ப்புக் கொண்டிருந்தன. தாகூர் பண்பாட்டு விடுதலையுடன் இணைந்த அழகியற் கல்விச் சிந்தனைகளை முன்மொழிந்தார்.

மேற்கூறியவை அனைத்தையும் உள்ளடக்கக் கூடிய முழுதளாவிய கல்விச் சிந்தனையும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய செயலாற்றலும் அடிகளாரிடத்துக் காணப்பெற்றன.

அவரது கல்வி நோக்கில் விளிம்புநிலை மக்களின் வாழ்நிலையைக் கல்வி வாயிலாக உயர்த்துதல் முதன்மை பெற்றிருந்தது. யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய வேளை கரையூர், பாஷையூர் மக்களின் கல்வியிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய வேளை திருவேற்களச் சேரி மக்களின் கல்வியிலும் ஈடுபாடு கொண்டிருந்த வினைப்பாட்டாளர் (Activist) என்ற வகிபாகம் முக்கியமானது.

கல்விவாயிலாக அவர் நிகழ்த்த முயன்ற மேல்நோக்கிய சமூக அசைவியக்கம் அக்காலத்தைய மேலாதிக்கச் சமூகச் சூழலைப் புரளச் செய்யும் முன்னெடுப்பாக அமைந்தது. சமய நெறியில் காலூன்றி சமூக மாற்றத்தை மேலெழச் செய்யும் கல்விச் சிந்தனை அடிகளாரிடத்து வலுப்பெற்றிருந்தது. அடிகளாரின் நோக்கில் கல்வி என்பது ஆய்வாகின்றது. தமிழ்ச் சூழலில் நவீன அய்வுப் பண்பாட்டை மேலோங்கச் செய்த செயலாற்று கையில் அடிகளாரின் பங்கு முக்கியமானது. யாழ் நூல் ஆய்வு தனித்து தமிழரின் தொன்மையான இசைக்கருவியாகிய யாழைத் தேடும் முயற்சியாக மட்டும் அமையவில்லை. அதன் வழியாகத் தமிழரின் தொன்மையான இசையையும் பண்பாட்டு

அடையாளங்களையும் வெளிக்கொண்டு வந்தார்.

தமிழிசை இயக்கத்தின் இருபெரும் ஆளுமையினர் என்று குறிப்பிடப்படுபவர்கள் ஏப்ரகாம் பண்டிதரும் சுவாமி விபுலாநந்தருமாவர். தொல்சீர் கலைத்திட்ட (*Classical curriculum*) ஏற்பாட்டினுக்கும் மனிதரின் ஆளுமை விருத்திக்கும் உள்ள தொடர்புகள் அடிகளாரின் கல்விச் சிந்தனைகளில் மேலோங்கி நின்றன. உடல் உறுதியின் மீது உள உறுதியும் உள உறுதியின் மீது ஆன்ம உறுதியும் என்ற முப்பரிமாணங்கள் வழியாக உலகியற் கல்வி, ஆன்மீகக் கல்வி ஆகியவற்றை மட்டுநகர் சிவாநந்த வித்தியாலயத்திலே உருவாக்கினார்.

உடலுறுதிக்குரிய தேகப் பயிற்சியும் உள உறுதிக்குரிய எழுத்துவழி மற்றும் எண்வழிப் பாடங்களும், ஆன்ம ஈடேற்றத்துக்குரிய இசையும் கவிதையும் சமயக் கல்வியும் அவர் உருவாக்கிய கலைத் திட்டத்திலே சமநிலை கொண்டிருந்தன.

இசையையும் கவிதையையும் கலந்து செழுங்கலவை (*Blend*) நிலையில் வழங்கும் கற்பித்தல் உபாயத்தையும் அவர் முன்மொழிந்தார். அக்காலத்தைய பள்ளிக்கூடக் கலைத்திட்டத்தில் அது ஒரு புத்தாக்கமாக அமைந்தது. வகைமாதிரிக்கு ஒரு எடுத்துக்காட்டு வருமாறு:

“நீ நீ- சாச – ரீ நீலவானிலே
நீசரி – காக – மா நிலவு வீசுதே
மாம – பாப – தா மாலை வேளையிலே
மபத – நீநி – சா மலைவு தீருவோம்
சாச – ரீரி – சால நாடியே
சரிக – மாம – பா – சலதிநீருளே
பாப – தாத – நீ – பாலைபாடியே
பதநி – சாச – ரீ – பலரெடாடுவோம்”

இசை கற்பித்தல், கவிதை கற்பித்தல் என்ற செயற்பாடுகளில் இவ்வாறான ஆக்கம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை இலகு நிலையிலே இட்டுச் செல்ல வல்லது.

கல்விச் செயற்பாட்டில் இருதள அணுகுமுறையை அடிகளார் மேற்கொண்டார். ஒரு தளத்தில் ஆரம்ப நிலைக் கற்போருக்குரிய கற்றற் செயற்பாடுகளையும் இன்னொரு தளத்தில் வளர்ச்சி அடைந்த நிலை யில் உள்ளோர்க்கான கற்றற் செயற்பாடுகளையும் கருத்திற் கொண்ட படிநிலை வளர்ச்சி உளவியல் அணுகுமுறை அடிகளாரிடத்துக் காணப்பெற்றது.

மேற்குறித்த பாடல் தொடக்கநிலைப் பயில்வோருக்குரியது. உயர்நிலையில் அவர் எழுதிய செய்யுள் இறுகிய புணர்ச்சி விதிகளைக் கொண்டதாகவும் சந்தி பிரித்துப் பொருள் அறியக்கூடியதாகவும் அமைந்தன. வகைமாதிரிக்கு "குருசரணஸ் தோத்திரம்" என்னும் பாமாலையில் இருந்து ஒரு பாடல் வருமாறு:

"நோவொழிய விளைப்பகற்றி நுவலநின்ற முதுமை
நோய் மரண முறுதலிலாத்தேவர்நிலை பெறுதற்
காவன செய் தானந்த நிறைவினை யன்றளித்த
அணிமலர்ச் செஞ்சேவடியை யடைந்தவரைப் புரக்கும்
தேவதரு நிழலென்கோ தெள்ளமுத மென்கோ
சிவானந்த நிதிபொதிந்த செழும் பேழை யென்கோ
பாவமென்றா நீரமைந்து பரிந்து வந்தென் சிரத்திற்
படிந்த திருவடியிணையை யடைந்தது மற்புதமே'

இலங்கையின் கல்விச் செயற்பாட்டில் மடைமாற்றத்தை ஏற்படுத்தியதும், தாய்மொழிக் கல்வி, இலவசக் கல்வி ஆகியவற்றுக்குத் தளமிட்டதுமான கன்னங்கராக் கல்விச் சீர்திருத்தத்தை ஆதரித்து 1938 ஆம் ஆண்டில் ஈழகேசரி இதழில் அடிகளார் ஒரு கட்டுரையினை எழுதினார். "பயனற்ற கல்வி' , "பயனுள்ள கல்வி' ஆகிய இரண்டையும் வேறுபிரித்தறிந்து அவர் எழுதிய கட்டுரைகள் கல்வி பற்றிய கருத்தாடல் களுக்கும் திறனாய்வுக்கும் களம் அமைத்தன.

தமிழ்ச் சூழலிலே கல்வி பற்றிய திறனாய்வுகள் மேற்கிளம்புவதற்கு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசும் அடிகளாரும் மேற்கொண்ட பணிகள் தென் ஆசியச் சூழலில் முற்போக்கு எழுச்சிகளாய் அமைந்தன. இலவசக் கல்வி, தாய்மொழிக் கல்வி, பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாக்கும் கல்வி, சுதேசப் பொருள் வளத்தை மேம்படுத்தும் கல்வி முதலாம் சிந்தனைகளுக்கும் செயல் வளத்துக்கும் அவை வலுவூட்டின.

மேற்கூறிய கருத்துக்கள் இராமகிருஷ்ண வேதாந்தச் சிந்தனைகளிலும் நடைமுறைகளிலும் ஊற்றெனெ வளர்ச்சி கொண்டிருந்த இயல்பினைப் பேராசிரியர் ப. சந்திரசேகரம் சான்றாதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளார் (1982).

கல்வியில் வேதாந்தக் கருத்தியலைப் பிரயோகிப்பதன் வாயிலாக பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பது அடிகளாரின் தளராத நம்பிக்கை. அதே கண்ணோட்டத்திலேதான் அவர் நடைமுறையில்

இருந்த கல்வி வடிவங்களைத் திறனாய்வுக்கு உட்படுத்தினார்.

அடிகளாரின் கல்விச் சிந்தனை, கலை, விஞ்ஞானம், அழகியல், ஆன்மிகம் ஆகியவற்றுக்கிடையே சமநிலையை வலியுறுத்தியது. சம நிலைக் கல்விக்கும் குறைவுபடாத சமநிலை ஆளுமை உருவாக்கத்துக்கு முள்ள தொடர்பினை வேதாந்த மெய்யியல் தளத்திலிருந்து விளக்கினார். அக்காலத்தில் பாரதியின் விடுதலைச் சிந்தனையோடு உட்புகுந்திருந்த வேதாந்தச் சிந்தனை, காந்தி, தாகூர் ஆகியோரின் கல்வி நோக்கில் இழையோடியிருந்த வேதாந்த நெறி, அடிகளாரின் கல்விக் கோட்பாட்டின் அடிப்படையாக இருந்த வேதாந்தம் அகியவை கல்வி என்ற நேர்கோட்டில் இணைந்துகொண்டன.

அடிகளாரின் உயர் கல்விச் சிந்தனையில் தரவுறுதிப்பாடும் உலக நோக்கும், அறிவுப் பிரவாகத்தோடு இணைந்திருந்தன. பெருக்கெடு க்கும் உலக அறிவோடு இணைந்து கொள்வதற்குத் தாய்மொழிக் கல்வி யுடன் உலக மொழிகள் பற்றிய அறிவும், மொழிபெயர்ப்பும் புதிய கலைச் சொல்லாக்கமும் முக்கியமானவை என்பது அடிகளாரின் முன்மொழிவு தமிழ் மொழியின் வளப்பாட்டில், புதிய கலைச் சொல்லாக்கங்களும், உலகப் பெரும் பனுவல்களை தமிழ் மொழிக்கு மாற்றம் செய்தமையும் அடிகளார் மேற்கொண்ட நவீனப்பாட்டு முயற்சிகளாகும்.

மொழிபெயர்ப்பு என்பது அறிவுப் பரவல் சார்ந்த நடவடிக்கை யாகும். ஒரு மொழியில் உள்ள அறிவு, மொழிபெயர்ப்புக்களால் வேறு மொழிகளில் பரவவிடப்படுகின்றன. மொழிகளூடாகப் பயணம் செய்யும் அறிவு நுகர்வோரிடத்துப் புதிய தரிசனங்களையும் மாற்றுத் தரிசனங்களையும் உருவாக்க வல்லது. அந்நிலையில் கல்வியின் உலகமய நோக்கை விரிவு படுத்தும் சிந்தனை அடிகளாரிடத்து விசாலித்து இருந்தமையைக் காணலாம்

அறிவும் சொற்களஞ்சியமும் வேறுபிரிக்க முடியாதவை. சொற்களஞ்சிய வளர்ச்சியில் அடிகளார் செலுத்திய கவனம் மொழியின் தேக்க நிலைகளோடு உறவாடிய மரபினரில் இருந்து தமிழை விடுவிக்கச் செய்யும் நடவடிக்கையாகும். “உலகிலுள்ள மொழியானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்” என்று அடிகளார் “கலைச் சொல்லாக்கம்” என்னும் கட்டுரையிலே குறிப்பிட்டுக் கூறினார்.

ஆய்வும் மொழிப் பிரயோகத்தின் கூர்மைப்பாடும் பற்றிய சிந்தனையைத் தமிழில் வளர்த்த நடைமுறைக் கல்வியாளர்களுள்

அடிகளார் தனித்துவமானவர். ஆய்வு மேற்கொள்கையில் தேய்வியம்பலில் (Cliche) இருந்து மொழியை விடுவிக்க வேண்டும். கூர்மையான கருத்துக்களை வெளிப்படுத்த மிகையான மொதுமையாக்கல் மொழியைக் கைவிடல் வேண்டும். அதனை மேற்கொள்வதற்குப் பொருத்தமான கலைச் சொற்களின் உருவாக்கம் அடிப்படையானது.

அடிகளாரின் கலைச்சொல்லாக்க முயற்சி ஆய்வியல் நோக்கிலும் முக்கியமானது. ஆய்வின் தரத்தை மேம்படுத்துவதற்குரிய அடிப்படை யாகவும் அது அமைந்தது.

அடிகளார் மேற்கொண்ட அறிவுப் பரவற் பணி இருபக்க வீச்சுக் கொண்டது. பிறமொழிச் சிந்தனைகளையும் பனுவல்களையும் தமிழுக்குக் கொண்டுவந்தமை போன்று இந்தியப் பண்பாட்டையும், தத்துவ ஞானத்தையும், கலைகளையும் ஆங்கில மொழி வாயிலாக உலக வெளியிலே பரவலாக்கம் செய்தார். "பிரபுத்த பாரத" இதழ் வாயிலாக அடிகளாரின் அந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

அடிகளாரின் கல்விச் சிந்தனையில் மூல நூல்களே முக்கியத்துவம் பெற்றிருந்தன. வழி நூல்கள், உரை நூல்கள் முதலியவற்றைக் காட்டிலும் மூல நூல்களுடன் உறவுகொள்ளலையே அவர் மேலாகக் கருதினார். அதனை நிரூபிக்கும் அவரது கருத்து வருமாறு: "திருக்குறளின் பரிமேலழகரின் உரையையோ, மற்றவர்களின் உரையையோ பின்பற்றாமல் திருவள்ளுவரையே துணையாகக் கொண்டு அவரது உண்மையான உள்ளக்கிடக்கையை உலகறியச் செய்தல் வேண்டும்" (வேலாயுதபிள்ளை, செ.,1992, அடிகளாரும் அடியேனும்).

கற்போர் வழிநூல்களிலும் துணைநூல்களிலும் தங்கியிருக்கும் தவறான கல்வி ஆற்றுப்படுத்தலுக்கு எதிரான முன்மொழிவாக அடிகளாரின் கருத்துக்கள் அமைந்தன.

அடிகளாரின் கல்விக் கோட்பாடு விரிந்த வேதாந்த உலக நோக்கை அடிப்படையாகக் கொண்டது. சமய வேறுபாடு காட்டாத உலக நோக்கு அவரிடத்து மேலோங்கியிருந்தது. எல்லாச் சமய இலக்கியங்களையும் வேறுபாடு காட்டாது எல்லாரும் கற்க வேண்டும் என்பது அடிகளாரின் நோக்கு.

இலக்கியங்களையும் நூல்களையும் கால வரையறை செய்யும் பொழுது புறவயமானதும் விஞ்ஞான பூர்வமானதுமான அணுகுமுறையின்

முக்கியத்துவம் அவரால் வலியுறுத்தப்பட்டது. பனுவல்களில் இடம்பெறும் சொற்களை மட்டும் வைத்துக் கால நிர்ணயிப்புச் செய்தல் போதுமானதல்ல என்பது அவரின் கருத்து. அவ்வகையில் அவர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் இலக்கிய வரலாற்றுக்கால கால நிர்ணயிப்பை ஏற்றுக்கொள்ளாதிருந்தமையும் குறிப்பிடத்தக்கது (வேலாயுதபிள்ளை, செ., மேலது).

மேலைப்புலக் கல்வியியலாளர் முன்மொழிந்த முப்பொருள்களோடு அடிகளார் உடன்பாடு கொண்டிருந்தார்.மெய்மை, நன்மை, அழகு என்பவையே அவர்கள் குறிப்பிட்ட அழியாப் பொருள்களாகும். அந்த முப்பொருள்களையும் அவர் முத்தமிழோடு தொடர்புபடுத்திக் கண்டார்.

நாடகத் தமிழ் - மெய்மை  இசைத் தமிழ் - நன்மை
இயற்றமிழ் - அழகு

இந்தச் சிந்தனையை அவர் மேலும் உயர்வுபடுத்தி அவை பரம்பொருளிலே சங்கமமாகின்றன எனக் கண்டார். அடிகளாரின் அறிவு பற்றிய கோட்பாடு அகல்விரி பண்பு கொண்டதாக அமைந்தது. அறிவின் கூறுகளின் ஒன்றிணைப்பின் வழியாக மேலெழும் பலம் அவரால் வலியுறுத்தப்பட்டது. "சேக்ஸ்பியரை அறியாதிருத்தல் அத்தனை அறிவுடைமை இன்மையோ அவ்வாறே வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதியை அறியாதிருத்தலும் அறிவின்மையாகும்" என்று சினோ பிரபு ஒரு சமயம் குறிப்பிட்டார். அதன் பொருள் கலையறிவும் விஞ்ஞான அறிவும் ஒன்றிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அதுவே பலமாக மேற்கிளம்பும் என்பதுமாகும்.

அறிவைத் துண்டங்களாக்காது ஒன்றிணைத்தல் வேண்டும் என்பதில் அடிகளார் உறுதிகொண்டிருந்தார். தமது அறிவு ஆளுமையில் கலையையும் விஞ்ஞானத்தையும் சமய மெய்யியலையும் ஒன்றிணைத்துக் கொண்டார். அந்த ஒன்றிணைப்பே அவரின் ஆய்வுகளுக்கும் எழுத்தாக்கங் களுக்கும் செயற்பாடுகளுக்கும் நிறைவுநிலை வலிமையைக் கொடுத்தது.

அடிகளார் தமிழ்த் தேசிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு முக்கியமானது. அவர் வலியுறுத்திய கல்வித் தேசியம் எனது தேசிய இனங்களினதும் தேசிய மதங்களினதும் ஒன்றிணைப்போடும் பாதுகாப்போடும் பரிபூரணமடைந்திருந்தது.

• • •

# கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் வாழ்வும் எழுத்தும்

## வாழ்நாள் கல்வியியலாளர் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளை

திரு. மு. விமலநாதன்

மட்டக்களப்புக்கு தென்பால் சுமார் 30 கி.மீற்றர் தொலைவில் மண்டூர் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க முருகன் ஆலயம் இக்கிராமத்தின் உயிர்ப்புக்கும் உயர்வுக்கும் இங்கு வாழும் மக்களுக்கும் அருள் ஒளி பாய்ச்சுகின்ற பெரும் கருணை மிக்கது.

இவ்வகையில் பல தமிழ்ப் புலவர்களும், பண்டிதர்களும் கல்வியியலாளர்களும் அவ்வப்போது தோன்றிப் பிரபல்யம் பெற்று விளங்குகின்றனர். இவ்வரிசையிலேதான் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையையும் வரிசைப்படுத்தலாம்.

மண்டூரில் சுவாமி விபுலானந்தருடன் இணைந்து சைவப் பாடசாலையான இராமகிருஷ்ண மிசன் பாடசாலையை ஸ்தாபித்தவர்களில் (1912) கோணாமலை முக்கியமானவர். இவர் இப்பாடசாலையின் ஆசிரியராகவும் சித்த வைத்தியராகவும் திகழ்ந்ததுடன் பல நில புலங்களுக்கும் சொந்தக்காரன் ஆவார். இவ்வாறான சிறப்பு மிக்க கோணாமலை ஆசிரியருக்கும் சி.பொ.த.தம்பிமுத்து (பொலிஸ் தலைமை) வின் மகள் அழகம்மாவிற்கும் மூத்த மகனாக கோணேசபிள்ளை 1929.11.08 ஆம் திகதி மண்டூரில் பிறந்தார். இவருடன் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உடன் பிறப்புக்களாவர்.

கலாநிதி கோணேசபிள்ளை அவரது தந்தையார் கற்பித்த மண்டூர் பாலமுனை அ.த.க பாடசாலையிலே தனது ஆரம்பக் கல்வியை ஆரம்பித்தார். அங்கு தந்தையார் கோணாமலை அவர்களின் வழிகாட்டலில் சிறப்பான கல்வியைப் பெற்று வந்து தரம் 5 இல் திறமையாகச் சித்தி பெற்று மட்டக்களப்பு மாவட்ட நெல் வங்கியினால் (Paddy Bank Scholership) வழங்கப்பட்ட புலமைப் பரிசிலும் பெற்றுக் கொண்டார். அக்காலத்தில் வழங்கப்பட்ட குறிப்பிட்ட புலமைப்பரிசில் மாவட்ட மட்டத்தில் தரம் ஐந்து பரீட்சையில் உயர் புள்ளி பெற்ற ஒருவருக்கு வழங்கப்பட்டது. இவ்வகையில் அந்த வருடத்தில் வழங்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்நிலை மாணவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இக்காலத்தில் இராமகிருஷ்ணமிசன் பாடசாலைகளின் முகாமையாளராக இருந்த சுவாமி விபுலாநந்த அடிகள் மண்டூர் இராமகிருஷ்ணமிசன் பாடசாலைக்கு வந்து செல்வது வழக்கம். இவ்வாறாக ஒருநாள் வந்த போது சுவாமியைத் தரிசிப்பதற்காக கோணேசபிள்ளையும் தந்தையாருடன் குறிப்பிட்ட பாடசாலைக்குச் சென்ற போது சுவாமி அவர்கள் தன்னிடம் ஆங்கிலம் படிக்க விருப்பமா எனக் கேட்டதாகவும், தான் ஆம் என்று சுவாமியிடம் கூறிய போது தனது தலையில் சுவாமி கையை வைத்து ஆசிர்வதித்து சிவானந்த வித்தியாலயத்தில் சேர்ந்து படிக்குமாறு கூறிச் சென்றதாகவும், இதனைத் தொடர்ந்து தனது தந்தையார் கோணாமலை அவர்கள் குறிப்பிட்ட பாடசாலையில் சேர்த்ததாகவும் என்னிடம் கூறியுள்ளார்.

மட்/சிவானந்த வித்தியாலயத்தில் S.S.C(G.C.E.O/L) வகுப்பு வரை திறம்பட ஆங்கில மொழி மூலம் கற்று சிறந்த பெறுபேற்றைப் பெற்றார். இக்காலத்தில் தனக்குத் திறம்படக் கற்பித்த ஆசிரியர்களான அதிபர் அம்பலவாணர், மு.கணபதிப்பிள்ளை (FRGS), வித்துவான் பண்டிதர் வி.சீ.கந்தையா, பேராசிரியர் ப.சந்திரசேகரம், திருநாவுக்கரசு ஆகியோரின் கற்பித்தல் நுட்பங்களையும், தியாக சிந்தனைகளையும் அடிக்கடி நினைவூட்டி கதைத்ததையும் நினைவுபடுத்துகின்றேன்.

தொடர்ந்து H.S.C(G.C.E.A/L) வகுப்பை கணிதத் துறையில் கற்பதற்குத் தனது சிறிய தந்தை அருட்பிரகாசம் அவர்களின் வழிகாட்டலில் யாழ்/மத்திய கல்லூரியில் சேர்ந்து கற்றார்.அக்காலத்தில் தனது கற்றல் முயற்சியில் சிறப்பாகச் செயற்பட்டதுடன் அங்கு நடைபெற்ற தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகளிலும் ஏனைய இணைப்பாடவிதான

செயற்பாடுகளிலும் முதன்மை பெற்று பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றிருக்கின்றார்.

உயர் தர வகுப்பில் திறமையாகச் சித்தி பெற்றிருக்கும் வேளை ஆங்கில ஆசிரியர் நியமனம் இவர் கற்ற பாடசாலையான மட்/சிவானந்த வித்தியாலயத்திலே கிடைக்கப்பெற்றது. இவ்வாசிரியர் சேவை தன்னைக் கற்பித்த ஆசிரியர்களுடன் தானும் ஆசிரியராகச் சேவை செய்யக் கிடைத் தமை தனக்குப் பெருமையும் மகிழ்வையும் தந்ததாகத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து ஆங்கில, கணித ஆசிரியராக இருந்து திறம்படச் சேவையாற்றிப் பல புத்திஜீவிகளை இப்பகுதியில் உருவாக்கியமை பெருமைக்குரியது. தொடர்ந்து திருகோணமலை இராமகிருஷ்ண மிசன் பாடசாலைக்கு (தற்போது கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) இடமாற்றம் பெற்றுச் சென்று அங்கும் மாணவர்களுக்கு நல்லாசிரியராகவும் வழிகாட்டி யாகவும் ஆசிரியர், மாணவர் உறவைப் பலப்படுத்தியும் பெருமை சேர்த்தார். இக்காலத்தில் நாட்டின் முன்னணியில் திகழ்ந்த புத்திஜீவிகள் பலரை இப்பாடசாலை மூலம் உருவாக்கியுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது (பேராசிரியர் சிவசேகரம், வரி மதிப்பீட்டாளர் சோமநாதன்).

இக்காலத்தில் கண்டி முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு கணித பாட விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றார். தொடர்ந்து அட்டாளச்சேனை, மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைகளில் தனது பணியைத் தொடர்ந்தார். இக்காலத்தில் கல்விச் சீர்திருத்த ஆணைக் குழுக்களிலும் பங்குபற்றியதுடன் பல அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளார். அத்தோடு டெய்லி நியூஸ், டெய்லி மிரர், வீரகேசரி பத்திரிகைகளின் நிருபராகவும் திரைப்படத் தணிக்கைச் சபை உறுப்பினராகவும் இருந்து காத்திரமான பல பணிகளைச் செய்துள்ளார்.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் உப அதிபராகவும், அதிபராகவும் சேவையாற்றியதுடன் தனது கல்வித் தரத்தை மேன்மைப்படுத்தும் முகமாக கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இணைந்து கல்விப் பீடத்தில் கணிதத் துறையில் கற்று முதல் தரச் சித்தியைப் பெற்றார் (B.Ed Hons 1st Class). இதனைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.இக்காலத்தில் இலங்கை கல்வி மறு சீரமைப்பு ஆணைக்

குழுக்களுக்குப் பல முக்கியமான அறிக்கைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். அத்தோடு பல்கலைக்கழக அனுமதி முறையில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்த ஆணைக் குழுக்களிலும் இணைந்து நல்ல பல ஆலோசனைகளையும், அறிக்கைகளையும் வழங்கியுள்ளார்.

இலங்கையில் புதிய கணித பாடத்தினை அறிமுகம் செய்வதற்காக அவுஸ்திரேலியாவுக்குப் புலமைப் பரிசில் பெற்றுச் சென்று வந்து பல ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சிகளையும் வழங்கி நடைமுறைப் படுத்தியுள்ளார். மேலும் தனது தகைமையை மேம்படுத்தும் பொருட்டு தத்துவ முதுமாணி (M.Phil) பட்டப் பரீட்சையில் சித்தி பெற்றார். அக்காலப் போர்ச் சூழ்நிலையால் அதற்கான கட்டுரையை சமர்ப்பிக்க முடியாமல் போய்விட்டதால் குறித்த பட்டத்தை நிறைவு செய்யவில்லை.

ஒரு கதவு மூட மறு கதவு திறக்கப்பட்டது போல் இக் காலவேளையில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் கல்விக் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்ள புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. உடன் கொலம்பியா பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வியைத் தொடர்ந்தார். இவரது ஆங்கில அறிவுத் திறனும், பாடஞானமும், அங்குள்ள சூழ்நிலையும் கற்றல் முயற்சிக்கு உந்து சக்திகளாக அமைந்தன.

உலகத்திலே முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான கொலம்பியா பல்கலைகழகத்தில் பல தத்துவ ஞானிகளும் புகழ் பெற்ற கல்வியியலாளர்களும் கற்றுள்ளதை முன்கூட்டியே அறிந்திருந்த கலாநிதி கோணேசபிள்ளை அவர்கள் தானும் இந்நிலையை அடையலாம் எனும் உயர் நோக்கோடு M.A, M.SC பட்டங்களைப் பெற்றுள்ளதுடன் கல்விக் கலாநிதிப் பட்டத்திற்காக 'சர்வதேசக் கல்வியும் ஐக்கிய நாடுகள் சபையும்' (Intrnational Education and Unaited Nation) என்னும் தலைப்பில் ஆய்வை மேற்கொண்டு அதி உச்ச புள்ளியான (A+) என்னும் தரத்தினைப் பெற்று கல்விக் கலாநிதி(D.Edu), தத்துவக் கலாநிதி (Ph.D) பட்டங்களைப் பெற்றுக்கொண்டார். அத்தோடு கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மூதவை உறுப்பினராகவும், நூல் நிலையத்தின் நூலகராகவும் சில காலம் பணியாற்றியுள்ளார்.

தொடர்ந்து கல்விப் பணியை மேற்கொள்வதற்காக ஆபிரிக்கா சென்று 'பொட்சுவானா' (Botswana) பல்கலைக் கழகத்தில் விரிவுரை யாளராக நியமனம் பெற்றார். இங்கு கல்விப் பீட ஆராய்ச்சிப் பட்டங்க ளுக்கான மேற்பார்வையாளராகவும் கடமை புரிந்தார். இக்காலத்தில்

உலக நாடுகள் பலவற்றில் நடைபெற்ற கல்வி சம்பந்தமான சர்வதேச மாநாடுகளில் பங்கு பற்றியுள்ளார். பேய்ரா, மொசாம்பிக், சுவிற்சர்லாந்து, சிம்பாவே, தஞ்சாவூர் போன்ற இடங்களுக்குச் சென்று காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

இவ்வாறு கல்விப் பணிகளை வெளிநாடுகளில் செய்து விட்டு முதுமைக் காலத்தில் சொந்த நாட்டிற்குத் திரும்பினார். பிறந்த மண்ணில் இறுதிக் காலத்தைக் கழித்தார். இக்காலத்திலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்திலும், ஆரையம்பதி உயர் தொழில் நுட்பக் கல்லூரியிலும் பகுதி நேர விரிவுரையாளராகவும் செயற்பட்டார்.

கணினி அறிவும், ஆங்கிலப் புலமையும், பொது விவகாரங்களில் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களும் இவரின் ஞாபகத்தில் படிந்திருக்கும். எத்தகவலைக் கேட்டாலும் ஆண்டு, திகதியுடன் கூறுவார். எதையும் சரியாகவும் நேர்த்தியாகவும் எழுத வேண்டும் என்ற நிலைப்பாடு இவரிடம் காணப்பட்டது. இதனால் வெளிவரும் ஆக்கங்கள், கட்டுரைகளைக் கவனமாகப் வாசித்து அவற்றில் காணப்படும் வழுக்கள், பிழைகளைச் சுட்டிக்காட்டி எழுதுவார். மண்டூர் கலை, இலக்கிய அவையுடன் இணைந்து செயற்பட்டதுடன் இச்சங்கத்தின் ஆலோசகராகவும் செயற்பட்டார்.

கலாநிதி கோணேசபிள்ளையின் நுண்மையான அறிவும், ஆற்றலும் காலங் கடந்தே களம் பெற்றுக்கொண்டமை துரதிஷ்டமே ஆகும். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை வெளிநாட்டில் கழித்துள்ளதால் பிற்காலத்திலேதான் சொந்த நாட்டிற்குத் திரும்பினார்.

அண்மையில் இவரால் வெளியிடப்பட்ட 'பலதுறை அறிவுசார் கட்டுரைகள்' என்னும் நூல் பல கணித, விஞ்ஞான கல்விசார் கட்டுரைகளைத் தந்துள்ளது. இவ்வாறான பல அறிவுசார் விடயங்களைப் பெற்றுகொள்வதில் எமக்குத் தாமதம் ஏற்பட்டதுடன், அவரின் அனுபவங்களையும், முன்மாதிரிகளையும் பகிர்ந்ததன் மூலம் மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பெறக் கூடியதாக இருந்தது.

சுத்த போசன (சைவ உணவு) உணவையே உண்டு வாழ்ந்த கலாநிதி கோணேசபிள்ளை அவர்கள் தனது எண்பத்தெட்டாவது அகவையில் தான் பிறந்த மண்டூர் பாலமுனையில் (2018.05.15) இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். இவரின் கல்விப் பணி என்றும் சமூகத்தி னரால் பேசப்படும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

• • •

# கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் சுயவிபரக் கோவை

தொகுப்பு : கலாநிதி கோ.கோணேசபிள்ளை

| | | |
|---|---|---|
| **Name** | : | **Konesappillai** |
| Father's Name | : | Konamalai |
| Mother' Name | : | Alagamma |
| Date of Birth | : | 08.11.1929 |

**EDUCATION AND OTHER PARTICULARS**

- 1935 - 1938 R.K.M. Vidyalaya, Mandur
- 1939 – 1940 G.T.M.S., Palamunai, Mandur
- 1940 – Won scholarship as the best 10 year student in the Eastern Province
- 1941 – 1947 Shivananda Vidyala ya. Kalladi Uppodai, Batticaloa
- 1947 – Passed Senior School Examination
  Subjects: Advanced Mathematics, Special Mathematics, English, Tamil, Commercial Arithmetic, Physics and Chemistry
- 1948 Awarded Tamil Elocution Prize, Hartley College, Point Pedro
- 1950 Awarded Tamil Oratorical Medal, Jaffna Central College, Jaffna
- 1954 – 1955 Government Teachers College, Maharagama
- 1955 Secretary. Tamil Literary Circle, Government Teachers College, Maharagama Leader, Tamil Debating Team.

- 1956-Teacher at Hindu College, Trincomalee
- 1956 -Attended Asia Writers Conference at New Delhi
- 1957-Correspondent for Times of Ceylon, Lankadipa, Virakesari and Eelakesari
- 1961- Lecturer at Kandy Muslim Teachers College, Kandy
- 1963- Lecturer at Muslim Teachers College, Addalaichenai
- 1964- Textbook writing team, Ministry of Education
- 1965-Member, Advisory Committee, Education Publications Commission
- 1967-Awarded correspondence scholarship by Queensland University, Australia. Subjects studied: Education, mathematics, government, English Literature, psychology, measurement and evaluation, Sociology and philosophy
- 1967- Lecturer at Muslim Teachers College, Addalaichenai
- 1969- Lecturer at Government Teachers College, Batticaloa
- 1971-In-service Advisor, Curriculum Development Centre
- 1971-Member, Advisory Board, Department of Education Publications.
- 1971- Awarded Colombo Plan Scholarship to study in Australia Followed Modern Mathematics Education Course at Macquarie University, Australia
- 1973- Leader, Primary Mathematics Project (Tamil Medium) sponsored by Curriculum Development Center, Ministry of Education.
- 1974 – 1979 Deputy Principal, Teachers College, Batticaloa
- 1976 – 1986 Visiting Lecturer, Open University of Sri Lanka
- 1980-Awarded Bachelor of Education degree with First Class Honors by the Colombo University (Specialization: Mathematics)
- 1980-Principal, Teachers College, Batticaloa
- 1980-Member Script Evaluation Board, Film Corporation, Sri Lanka
- 1980-Member, Drama Panel, Ministry of Regional Development
- 1981- Lecturer, Colombo University
- 1984-Tamil tutor to Sinhalese Professors and Lecturers at Colombo University
- 1986-Awarded Scholarship by the Columbia University, New York
- 1986-Admitted to the Doctoral Program of Teachers College, Columbia University in the City of New York
- 1987-Awarded the degree of Master of Science by Columbia University
- 1992 -Awarded the degree of Master of Arts by Columbia University

- 1992 –1996 Lecturer, University of Botswana, Botswana
- 1996 –1998 Research students at Columbia University, New York
- 1997-Awarded the degree of Doctor of Philosophy by Marlborough University
- 1998- Awarded the degree of Doctor of Education by Columbia University
- 1998 –2000 Lecturer, University of Botswana, Botswana
- 1998-Member, Computer Committee, Faculty of Education, University of Botswana
- 1998 –External Consultant, IDM, Botswana
  Subject area: Measurement and Evaluation
- 1998 - Supervisor, M.B.A. Thesis, De Monfort University, U.K.
- 2001 -2009 Coordinator of Training and Head of Department of Information Technology, Vocational and Creativity Institute, Mogoditshane, Botswana
- 2007-External Consultant for Statistics and Research Methods, Institute of Development Management, Botswana
- 2010- Education and Research Consultant

**Primary Education**

R.K.M.Vidyalaya, Mandur. Batticaloa
Government Tamil Mixed School, Palaimuania, Mandur

**Secondary Education**

Shivananda Vdyalalya, Kalladi Uppodai, Batticaloa
Jaffna College, Vaddukoddai, Jaffna
Hartley College, Point Pedro, Jaffna
Jaffna Central Central College, Jaffna

**Tertiary Education**

Government Teachers College (English), Maharagama

**University Education**

Queensland University, Australia
Macquarie University, Australia
Colombo University, Sri Lanka
Colombia University, New York, U.S.A.

• • •

# நல்லாசிரியர் திரு. கோணேசபிள்ளை

பேராசிரியர் சி. சிவசேகரம்

திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி (இப்போது கோணேஸ்வரா இந்துக் கல்லூரி) தாழ்வுற்றுக் கிடந்த வேளை அதைத் தரமுயர்த்தக் கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலிருந்து அதிபராகத் திரு. அம்பலவாணரையும் அவரையடுத்துத் திரு. கோணேச பிள்ளையையும் திருகோணமலைக்கு இராமகிருஷ்ண மிஷன் அனுப்பியது.

கல்வித் தரத்தை உயர்த்துவதில் திரு. அம்பலவாணரின் ஈடுபாடும் தலைமைத்துவமும் வழங்கிய பங்கு போல மாணவர்களின் சமூக ஆற்றல்களை வளர்த்ததில் திரு. கோணேசபிள்ளையின் பங்கு முக்கியமானது. பெருமளவும் ஆங்கில பாடத்தைக் கற்பித்த திரு. கோணேசபிள்ளை மாணவர்கள் கூச்சமின்றி ஆங்கிலம் பேசுவதை ஊக்குவிக்க எடுத்த முன்முயற்சிகள் துரிதமாக நற்பயனளித்தன. மாணவரின் விவாதத் திறனை ஊக்குவிக்க அவர் உயர் வகுப்பு மாணவர் களைக் கொண்டு ஒரு "பாராளுமன்றத்தை" உருவாக்கி வழிநடத்தினார். அது பலரின் பேச்சாற்றலையும் தன்னம்பிக்கையையும் மேம்படுத்தியது.

மேலும், மாணவர்களின் சிறப்பான ஆற்றல்களையும் அக்கறை களையும் அடையாளங்கண்டு அவற்றை ஊக்குவித்த ஆசிரியர்களிடையே அவருக்கு முக்கிய இடமுண்டு. நான் வகுப்பில் நன்றாகப் படித்தாலும், தவணைப் பரீட்சைகளில் முதலிடம் கிட்டுவது அரிது. எனினும் திரு.

கோணேசபிள்ளை என்னைச் சிறப்பாகக் கருதினாரென நினைக்கிறேன். 1956இல் SSC பரீட்சையில் 1A, 4 C பெற்றேன் (அப்போது அது கொஞ்சம் பெரிய காரியம், ஆனால் அதி சிறப்பல்ல). பரீட்சை முடிவுகள் வந்த பின் என்னை அழைத்து இரண்டு ஆங்கில நூல்களைப் பரிசாகத் தந்தார். அதிலொன்றில் விஞ்ஞானத் துறையில் முன்னேற என்னை வாழ்த்திச் சில சொற்களை எழுதியிருந்தார்.

அடுத்த ஆண்டு நான் கொழும்பில் றோயல் கல்லூரிப் புலமைப் பரிசில் பெற்று அங்கு படிக்கப் போய்விட்டேன். விடுமுறைக்குத் திருகோணமலைக்குப் போகும்போது அவரையும் சந்திப்பேன். அவருடைய இடமாற்றத்துடன் எங்கள் தொடர்பு விடுபட்டது.

எதிர்பாராத விதமாகச் சில ஆண்டுகள் முன் கொழும்பில் நடந்த ஒரு பொது நிகழ்வுக்கு அவர் வந்ததாயும் இராமகிருஷ்ண மிஷனில் தங்கியிருப்பதாயும் அறிந்து அங்கு சென்று அவரைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடினேன். அதன் பின் அவரைச் சந்திக்க வாய்க்கவில்லை. பின்னர் அவர் சில காலமாக நோயுற்றிருந்ததாக அறிந்தேன். அவரது மறைவுச் செய்தி சில மாதங்கள் கழித்தே தெரியக் கிடைத்தது.

என்னைக் கல்வியில் ஊக்குவித்தவர்களெனச் சொல்லக்கூடிய பாடசாலை ஆசிரியர்களில் திரு. கோணேசபிள்ளை முக்கியமான ஒருவர். இந்துக் கல்லூரியில் ஆசிரியராக அவரும் மாணவனாக நானும் இருந்த மூன்று ஆண்டுகளில் நான் விஞ்ஞான பாடங்களையே அதிகம் கற்றதால் அவருடைய வகுப்புகளில் நான் படித்தது குறைவு. எனினும் அவருடன் தனிப்படப் பல விடயங்களைப் பேசவும் கேட்டறியவும் எனக்கு வாய்ப்பு மிக இருந்தது. அவருடைய உலக நோக்கு நவீனச் சிந்தனை சார்ந்தது. இன மத வேறுபாடுகள் கடந்து விடயங்களை அணுகும் அவருடைய ஆற்றல் என்னிற் பயனுள்ள சிறு தாக்கத்தை ஏற்படுத்தியது என நினைக்கிறேன்.

இப்போதும் திருகோணமலைக்குப் போகும்போது பழைய பாடசாலை நண்பர்களைச் சந்தித்தால் அதிகம் நினைவுகூரும் ஆசிரியர் களுள் திரு. கோணேசபிள்ளையும் ஒருவராவார்.

அவர் குறிப்பாகத் திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரிக்கும் பொதுப்பட இலங்கைப் பாடசாலைக் கல்வித் துறைக்கும் ஆற்றிய பங்கையும் தனிப்பட என் மீது காட்டிய பரிவையும் இத்தருணம் நினைவு கூர்ந்து அவருக்கு என் அஞ்சலிகளைத் தெரிவிக்கிறேன்.

• • •

## கவிதை:
# முத்தை மறைத்து வைத்த வித்தைக் கடல்

கவிதாயினி த. உருத்திரா

கடல் வற்றிப்
போனதெங்கள் –
கல்விக்
கடல் வற்றிப் போனது
ஆறற்ற ஊராய்
அறிவூரும் பாழானதே!

பேரற்ற
மனிதரெல்லாம்
பெருமைக்குச்
சொல்லும் மண்டூரின்-
மைந்தன்
ஊருக்குப் பேராய்
உலகெங்கும்
ஒலித்தாய்!

கற்றறிந்து உம்மை
காமுறுவார்
கடல் கடந்தும்

நூறிருக்க
உற்ற வசதியெல்லாம் –
உதறிவிட்டு
பெற்ற மண்
வந்துதித்தீர்
பிறவிக்கும்
நாமறவோம்!

என்ன செய்தாய் என்ன
செய்தாய்
என்றென்றும்
ஏதும் செய்யா
மனிதரெல்லாம்
எழுகையிலே
முத்தை மறைத்து
வைத்த
வித்தைக் கடல்
என்பார் - உம்மைப்
பெற்றவர்கள்
உரைப்பாரே
பெருமையெல்லாம்!

ஐயா
உதயத்தில் போய்
மறைந்தீர் –
இதயத்தில் ஏழேழ்
பிறவிக்கும்
மறுபடியும் மண்ணிலே
ஓர் கடலாய்
வந்து பிறவுங்கள்!!!

• • •

## கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையின் எழுத்து

# மண்டூரின் கல்வி வளர்ச்சி: ஓர் அறிமுகம்

மண்டூர் மட்டக்களப்பில் வாவியின் மேற்கில் அமைந்துள்ள ஊராகும். இங்கு வைத்தியர்களும் சோதிடர்களும் வாழ்ந்ததாக அறியக் கிடக்கிறது. இவர்கள் பரம்பரை பரம்பரையாகத் தம் அறிவைப் பெற்றிருக்கவேண்டும்.

யாழ்பாணத்தில் இருந்து அறிஞர்கள் இங்கு வந்து திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடத்தியதாகவும் அவற்றில் படித்தவர்கள் கோயில்களில் புராணங்களுக்கு விளக்கம் கூறியதாகவும் அறியக்கிடக்கின்றது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தியாயப்பர் என்பவர் வீதி மேற்பார்வையாளராக பணியாற்றியவர் களுவாஞ்சிகுடியில் இருந்து வந்து மண்டூரில் குடியேறினார். அவர் பிரபல வைத்தியராகவும் குறிப்பாக விஷவைத்தியராகவும் விளங்கினார். யாழ்பாணத்தில் இருந்து வந்து ஆசிரியராக ஆரையம்பதியில் பணியாற்றிய பின் அந்த ஆசிரியர், தனது மக்களுக்கு திருமணம் செய்து வைக்கும் நோக்கமாக மண்டூரை வந்தடைந்தார். அவருடைய முத்த மகளை தியாயப்பர் மணம் செய்து கொண்டார். தியாயப்பருடைய மனைவியின் இரு தங்கைகளும் இங்கேயே திருமணம் செய்துகொண்டார்கள். தியாயப்பரின் ஒரு சகோதரியும் அவரது மூன்று பெண்பிள்ளைகளும் ஒரு மகனும் களுவாஞ்சிகுடியில் இருந்து வந்து மண்டூரில் வாழத்தொடங்கினர்.

1874 – 1878 காலப்பகுதியில் கிறிஸ்துவ திருச்சபையின் செல்வாக்கு ஆரம்பித்தது. இதனால் கல்விப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன. (இலங்கை மெதடிஸ்த திருஅவை மண்டூர் நூற்றாண்டு சிறப்பு மலர்). திண்ணைக் கல்வி முறை ஆரம்பிக்கப்பெற்றுப் பின்னர் 1875இல் பாடசாலையாக மலர்ந்தது. இங்கேதான் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை கல்வி கற்று 1907ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்தார் என்றும் இதுவே மண்டூரில் அமைந்த முதலாவது பாடசாலை என்றும் அறியக்கிடக்கிறது (உள்ளதும் நல்லதும்).

இந்த ஆண்டு ஏற்பட்ட புயலினால் பாடசாலை பாதிக்கப்பட்டு மீண்டும் அமைக்கப்பட்டு கல்விப் பணி தொடர்ந்தது. திருத்தி அமைக்கப்பட்ட பாடசாலையை 1908ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் வைபவ ரீதியாக அருட்திரு ஜே.ஏ.பாக்கர் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் (இலங்கை மெதடிஸ்த திருஅவை மண்டூர் நூற்றாண்டு சிறப்பு மலர்).

இக்காலகட்டத்தில் அப்போது மண்டூரில் கிறிஸ்தவ திருச்சபையின் செல்வாக்கு ஆரம்பிக்கத் தொடங்கியதால் பழுகாமத்தில் இருந்து மண்டூருக்கு கிறிஸ்தவ மதப் போதனைக்கு வந்த காசினாதப் பாதிரியார் தியாயப்பரின் தங்கையின் பெண் மக்கள்களில் இருவரையும் மகனையும் அழைத்துச் சென்று கல்முனை மெதடிஸ்த பாடசாலைகளில் கல்விபெற ஒழுங்கு செய்தார். அவர்கள் கல்வியை முடித்துக்கொண்டு மண்டூருக்குத் திரும்பிய பின் கல்விப் பணியிலும் சமயப்பணியிலும் ஈடுபட்டார்கள். இந்த இரு பெண்களில் முத்தவர் சின்னமுத்து, மண்டூரில் விதானையாக பதவி வகித்த தம்பிமுத்து விதானையை திருமணம் செய்துகொண்டு இந்துவாகவே வாழ்ந்தார். இளைய பெண் பொன்னம்மா கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி மண்டூர் மெதடிஸ்த பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றி அப்பாடசாலையில் தலைமை ஆசிரியராக பணியாற்றிய திரு. கணபதிப்பிள்ளை ஆசிரியரைத் திருமணம் செய்துகொண்டார்.

கல்வி முடித்து வந்த ஆண் குஞ்சித்தம்பியாவார். இவர் அண்மையிலுள்ள வெல்லாவெளி என்னும் கிராமத்துக்குச் சென்று கல்விப் பணியில் ஈடுபட்டு அங்கேயே திருமணம் செய்துகொண்டு ஒரு பாடசாலையைத் தாபித்து அதை நடத்தினார்.

தம்பிமுத்து தம்பதிகளின் மூத்தமகன் இராசையா மண்டூர் மெதடிஸ்த பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்து கல்முனைக்குச்

சென்று லீஸ் உயர் பாடசாலையில் ஆங்கிலம் கற்றார். இவர்தான் மண்டூரில் முதன்முதலில் ஆங்கிலம் கற்று அரச பணியை ஏற்றவர். மண்டூருக்கு சில மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள சடையன்திளாவைக் குளத்தின் பொறுப்பாளராய் பணியேற்றிருந்தார்.

இந்தக் காலகட்டத்தில் யாழ்பாணத்துப் புலோலியைச் சேர்ந்த வைத்திலிங்க உபாத்தியாயர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வீட்டில் திண்ணைக் கல்வி வகுப்பு நடத்தியதாகவும் அதில் படித்தவர்களில் திருவாளர்கள் ஏ. பெரியதம்பிள்ளை, த. விநாசித்தம்பி, கா.கோணாமலை, சி.கறுவல்தம்பி, செ. வினாசித்தம்பி, க.சுப்பிரமணியம் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள் (95ஆவது ஆண்டு நிறைவுப் பூங்கா, மண்டூர் இராமக்கிருஷ்ண வித்தியாலயம்).

இந்த திண்ணைக் கல்வி வகுப்பில் பல தமிழ் நூல்களைக் கற்றுக்கொண்ட புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை யாழ்ப்பாணம் சென்று நாவலர் பாடசாலையில் மேற்கொண்டு படித்தார். அங்கு படிக்கும் போது சென். பற்றிக்ஸ் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிதர் மயில்வாகனனாரை (பின்னர் சுவாமி விபுலாநந்தர்) அடிக்கடி சந்திக்கும் வாய்புக் கிடைத்தது. அவர் பாடிய மண்டூர் பதிகத்தை மயில்வாகன னாரிடம் கொடுத்தார். இதைப் படித்துச் சுவைத்த மயில்வாகனனார் இப்பதிகத்துக்குப் பின்வரும் சாற்றுக் கவிதையை வழங்கினார்.

“பண்டூரு முகிற்குலங்கள் எமதிறைவர்
    முருகர் திருப்பதிமீ தென்ன
விண்டூர மழைபொழியும் சிறப்பதனால்
    வளம் மலிந்து தோன்றும்
மண்டூரில் உறைமுருகன் மலரடிக்கோர்
    திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
    பிள்ளையெனும் கலை வல்லோனே.

(உள்ளதும் நல்லதும், ப.45)

யாழ்ப்பாணத்தில் படிப்பை முடித்துக்கொண்டு மண்டூருக்குத் திரும்பிய பெரியதம்பிப்பிள்ளையை திருகோணமலை இந்துக் கல்லூரியில் தலைமைத் தமிழ் பண்டிதராக அதன் முகாமையாளராக இருந்த சுவாமி விபுலாநந்தர் நியமித்தார். புலவர்மணி அகில இலங்கை ரீதியில் சிறந்த தமிழ் அறிஞராகவும் கவிஞாகவும் கணிக்கப்பெற்றார். பின்

அப்போது அரசாங்க சபையில் அங்கம் வகித்த கௌரவ நல்லையா அவர்களின் வேண்டுகோளை ஏற்று மட்டக்களப்பு அரசினர் கல்லூரியின் தமிழ் ஆசிரியர் பணியை ஏற்று (1947) ஓய்வு பெறும்வரை பணியாற்றினார். அவரது தமிழ்ப் பணியை மெச்சி கிழக்குப்பல்கலைக்கழகம் இலக்கிய கலாநித்திப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இவரைப் பின்பற்றி தமிழில் பலர் ஆர்வம்காட்டினர். மண்டூர் இராமக்கிருஷ்ண சங்க பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்த வி.சீ.கந்தையா பின்னர் சுவாமி விபுலாநந்தரின் ஆசிரியரான திரு. கே.எஸ்.குஞ்சித்தம்பி ஆசிரியரிடமும், புலவர்மணியிடமும் பாடம் கேட்க வாய்புக் கிடைத்தது. தனது பெரும் முயற்சியால் யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட சங்கப் பண்டிதராகவும் மதுரைத் தமிழ் சங்கப் பண்டிதராகவும் சித்தியடைந்து கிழக்கிலங்கையில் பிரபல கல்வி நிலையமாக விளங்கிய சிவாநந்த வித்தியாலயத்தில் தமிழ் ஆசிரியராக பதவியேற்று பல அறிஞர்கள் உருவாக உதவினார். இவரது கற்பித்தலால் உந்தப்பட்ட மாணவர்கள் பலர் பின்னர் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர்களாகவும், கல்விப் பேராசிரியர்களாகவும், புகழீட்டியது குறிப்பிடத்தக்கது. இவர் மேலும் பட்டங்கள் பெற்று ஈற்றில் சிவாநந்த வித்தியாலயத்தின் அதிபராகப் பதவி வகித்தார். இவரது இலக்கியப் பணிகளைப் பாராட்டும் முகமாக கிழக்குப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. இவரது மக்களில் மூவர் பொறியியலாளர்களாகவும் மற்றையவர் அமெரிக்காவில் பௌதிகவியல் பேராசிரியராகவும் பணியேற்றார்கள். இவர்களில் இருவர் சிறந்த அமெரிக்க பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டங்கள் பெற்றவர்கள்.

பண்டிதர் கந்தையாவைத் தொடர்ந்து பண்டிதர் விசுவலிங்கம், பண்டிதர் நாகலிங்கம், பண்டிதர் முருகேசு, பாலபண்டிதர் நல்லசேகரம் ஆகியோர் பண்டிதர் பட்டங்களைப் பெற்று மண்டூரின் கல்வி வளர்ச்சியில் அங்கம் வகித்தனர்.

பகவான் ஸ்ரீராமக்கிருஷ்ணரின் நேர் சீடர்களில் ஒருவரான சுவாமி அபேதாநந்தரின் சீஷையான சகோதரி அவபாமியா 1909ஆண்டு அமெரிக்காவில் இருந்து மட்டக்களப்புக்கு வருகை தந்து இங்குள்ள கிராமங்களுக்குச் சென்று இந்து சமய பிரசாரம் செய்துவந்தார். இதன் பிரதிபலிப்பாக சைவசமய இயக்கம் உருவெடுத்தது. இதனால் சைவப்பிள்ளைகள் சைவப் பாடசாலையில் படித்தல் வேண்டும் என்ற உணர்ச்சி மேலோங்கியது. மண்டூரில் சைவ வாலிபர் சங்கம் உருவாகி

பாடசாலை கட்டும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த வாலிபர் சங்கத்தில் திருவாளர்கள் த.நல்லதம்பி, த.விநாசித்தம்பி, தி.முருகப்பன், க. மாணிக்கபிள்ளை, ஏ.சுப்பிரமணியம், செ.விநாசித்தம்பி முதலியோர் முன்னின்று பணியாற்றி வந்தார்கள். அப்போது பாடசாலை கட்டுவதற்காக மண்டூர் முருகன் கோயில் வண்ணக்கராக இருந்த சோ.ஏகாம்பரபிள்ளை அவர்களும் மற்றைய கோயில் நிர்வாகிகளும், ஊர் பெரியார்களும் சேர்ந்து கோயிலுக்குச் சொந்தமான, தற்போது பாடசாலை அமைந்துள்ள காணியைத் தெரிவு செய்தார்கள். அதில் ஓலையால் ஒரு மண்டபம் கட்டப்பெற்று அத்தருணம் மட்டக்களப்பிலேயே தங்கியிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த இராமக்கிருஷ்ண சங்க சகோதரி அவபாமியா அவர்களே 01.08.1912ஆம் தகதி இந்த வரலாற்று முக்கியம் மிக்க சைவப் பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். இந்தப் பாடசாலையின் முதல் தலைமை ஆசிரியராக குறுமண்வெளியைச் சேர்ந்த திரு. வயிரமுத்து முருகேசபிள்ளை அவர்கள் நியமிக்கப்பெற்றார். இவரோடு உதவி ஆசிரியர்களாக திருவாளர்கள் கா.கோணாமலை, சி.கறுவல்தம்பி, க.மாணிக்கபிள்ளை, ஏ.சுப்பிரமணியம் ஆகியோரும் வேதனமின்றி சிலகாலம் பணியாற்றினர். பின்னர் கோயில் பணத்தில் இருந்தே இவர்களுக்கு வேதனம் வழங்கப்பெற்றது. ஆரம்பத்தில் இப்பாடசாலை மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல பரோபகாரி திரு க.வி. மார்க்கண்டன் அவர்ளின் முகாமையின் கீழ் இயங்கிவந்தது. உதவி முகாமையாளராக மண்டூர் வண்ணக்கர் திரு. சோ. ஏகாம்பரபிள்ளை இயங்கினார். மூன்று வருடங்களுக்கு மேல் இவ்வாறு கோயில் நிதியுடன் இயங்கிவந்தது. அக்காலகட்டத்தில் தனியார் நடத்தும் பாடசாலைகளுக்கு அரசு உதவி நன்கொடை அளிக்கும் முறை நடைமுறைக்கு வந்தது. 1.04.1916 இல் அப்போது வித்தியாதரிசியாக இருந்த திரு. எம்.தில்லைநாதன் அவர்களின் பரிந்துரையால் அரசின் உதவி நன்கொடை கிடைத்தது. அப்போது முகாமையாளராக இருந்த திரு. மார்க்கண்டன் அவர்கள் நீங்கிவிட விவேகாந்த சபை முகாமைத்துவத்தை ஏற்றுச் சட்டவாதி திரு. எம். சின்னையா அவர்களை முகாமையாளராக நியமித்தது.

இந்தக் காலகட்டத்தில் பத்தக்குட்டி ஆசிரியர் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சூனித்தீவில் இருந்து மண்டூருக்கு வந்து இங்கு கற்பித்தார். இங்கேயே தியாயப்பரின் பெண் மக்களில் ஒருவரைத் திருமணம் செய்துகொண்டு ஊரின் முன்னேற்றத்துக்கு உழைக்கத் தொடங்கினார்.

அப்போது மட்டக்களப்பு வலையிறவு கிராமத்தைச் சேர்ந்த தம்பிமுத்துப் போடியார் என்னும் முருக பக்தர் மண்டூரில் ஒரு யாத்திரிகள் மடம் அமைக்கும் நோக்கோடு இங்கு வந்து கோயில் நிர்வாகிகளோடு தனது நோக்கத்தை வெளிப்படுத்தினார். கோயில் நிர்வாகிகள், மடத்தைவிட இந்தப் பாடசாலையைக் கட்டிக்கொடுத்து கல்வியை வளர்க்க உதவுவது சிறந்த புண்ணியமாகும் என்று எடுத்துக் கூறினர். இதைச் செவிமடுத்த பரோபகாரி தம்பிமுத்துப் போடியார், கோயில் திருவிழாக் காலங்களில் இங்கு வரும் பக்தர்கள் தங்குவதற்குப் பயன்படுத்த அனுமதிகொடுத்தல் வேண்டும் என்ற நிபந்தனையில் பாடசாலையைக் கட்டிக்கொடுக்க முன் வந்தார். இவர் வழங்கிய 18,000 ரூபா பணத்தைக் கொண்டு மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. க.முத்தையா, சமாதான நீதிவான் 1918ஆம் ஆண்டு பாடசாலையைக் கட்டி முடித்தார் (மண்டூர் இராமக்கிருஷ்ண வித்தியாலய 95ஆவது ஆண்டு நிறைவு விழா மலர்.).

பாடசாலை படிப்படியாக முன்னேறியது. பத்தக்குட்டி உபாத்தியாயர் 01.01.1926இல் இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப் பட்டார். பதவியை ஏற்று பாடசாலையின் முன்னேற்றத்துக்கு அயராது உழைத்தார். அப்போது கிழக்கு மாகாணத்கில் 10வயதுக்கு உட்பட்ட மாணவருக்குப் பரீட்சை வைத்து மிகச் சிறந்த மாணவனுக்கு மேற் கல்விக்கு வேண்டிய பணத்தைப் புலமைப்பரிசாக மாதாமாதம் வழங்கும் ஒரு கல்வி மேம்பாட்டு முறையை மட்டக்களப்பில் நெல் வங்கி அறிமுகம் செய்தது. இதைப் பயன்படுத்த முன்வந்த பத்தக்குட்டி உபாத்தியாயர் தனது மூத்த மகன் சிவசுப்பிரமணியத்தை இப்பரீட்சைக்குத் தயார்செய்து 1926 ஆம் ஆண்டே அனுப்பினார். பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் முதலாவதாகத்தேறிய சிவசுப்பிரமணியம் புலமைப் பரிசைப் பெற்று சாதனை படைத்தார். மூத்த மகன் சிவசுப்பிரமணியம் புலமைப்பரிசு பெற்றதனால் திருகோணமலை இந்து ஆங்கில பாடசாலையிற் தனது மேற்படிப்பை ஆங்கிலத்தில் தொடர வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது இராமக்கிருஷ்ண சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட இப்பாடசாலை அதிபராகவும் முகாமையாளராகவும் பணியாற்றினார் சுவாமி விபுலாநந்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்தக்குட்டி உபாத்தியாயர் தம்பதியினருக்கு நான்கு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்த மகனின் சாதனையால் உந்தப்பட்ட

பத்தக்குட்டி உபாத்தியாயர் மற்றைய மக்களையும் இப்பரீட்சைக்குத் தயார்செய்து அனுப்பிவைத்தார். இவரது மூன்றாம் மகனும் நான்காம் மகனும் அடுத்தடுத்து பரீட்சையில் முதலாம் இடத்தைப் பிடித்து புலமைப் பரிசைப் பெற்று சாதனையைத் தொடர்ந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் இப்பாடசாலை இராமக்கிருஷ்ண சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு நடத்தப்பட்டது. இப்பாடசாலை 1924இல் இராமக்கிருஷ்ண சங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு நடத்தப்பட்டது என்று இப்பாடசாலை வரலாற்றில் 95ஆம் ஆண்டு மலரில் குறிப்பிட்டிருந்தாலும், 'இராமக்கிருஷ்ண மிஷன் நூற்றாண்டு விழா மலர் இவ்வாறு கூறுகிறது. "1930ஆம் ஆண்டு முதல் 1945 ஆண்டுவரையுள்ள காலப்பகுதி மட்டக்களப்பு பிரதேசத்தின் கல்வி, கலாசார சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டிய காலமாகும். இந்தக் காலகட்டத்தில்தான் முறக்கொட்டான்சேனை, சித்தாண்டி, கல்லடி உப்போடை, ஆரையம்பதி, மண்டூர், களுதாவளை, கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று போன்ற இடங்களில் ஜாதி,மத, இன வேறுபாடின்றி பரந்த சமய அடிப்படையில் மிஷன் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன".

சுவாமி விபுலாநந்தர் இராமக்கிருஷ்ண சங்கத்தில் துறவை ஏற்று சைத்தன்னியராகி 1925 இல் சுவாமியாகத் தீட்சை பெற்று அவ்வாண்டு இலங்கைக்கு வந்து கல்விப் பணியில் ஈடுபட்டார். இவர் திருகோணமலை இந்து ஆங்கிலப் பாடசாலையாக இருந்த தற்போதய இந்துக் கல்லூரியை 1.06.1925இல் பொறுப்பேற்று இராமகிருஷ்ண சங்கத்தின் கல்வித் தொண்டை ஆரம்பித்து வைத்தார். அவர் பாடசாலை அதிபராகவும் முகாமையாளராகவும் பணியாற்றி 1930 இல் எல்லா இராமகிருஷ்ண சங்கத்தின் பாடசாலைகளின் முகாமையாளராக பணியாற்ற வேண்டி இருந்ததால் திரு.இராமச்திரா திருகோணலை இந்து ஆங்கிலப் பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்றார். 1930 – 1945 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் கிழக்கிலும் வடக்கிலும் 25 பாடசாலைகள் மிஷனால் நிர்வகிக்கப்பட்டு வந்தன (இராமக்கிருஷ்ண மிஷன் நூற்றாண்டு மலர்).

பத்தக்குட்டி உபாத்தியாயரின் மூத்த மகன் சிவசுப்பிரமணியம் திருகோணமலையில் இந்து ஆங்கிலப் பாடசாலையில் கல்வியை முடித்து இந்தியா சென்று பொறியியலாளராகச் சித்தியடைந்து இலங்கை மீண்டு, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியலாளராக பணியாற்றி

ஈற்றில் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஆணையாளராகப் பதவி வகித்தார்.இவர்தான் மண்டூரின் முதலாவது பொறியியலாளர். இவரது அடுத்த சகோதரர், கணேசபிள்ளை, மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் ஆங்கிலத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து பின்னர் அரச பணியேற்று சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளராகி இப்பிரதேசத்தில் நூல் நிலையங்கள் அமைப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்தார். இவர் பொறியியலாளராக வராவிட்டாலும் இவரின் மகள் பொறியியலாளராகத் தேறி உயர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் அடுத்த சகோதரர் கயிலாயபிள்ளை, இவரும் புலமைப்பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கிலத்தில் மேற்படிப்பை முடித்து மூத்த சகோதரரைப் பின்பற்றி பொறியியலாளரானார். இவர்களது கடைசிச் சகோதரர் சந்திரசேகரம், இவரும் புலமைப்பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கிலத்தில் மேற்படிப்பை முடித்துப் பின்னர் யாழ்ப்பாண மத்திய கல்லூரியிற் படித்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற்றுப் படித்து பீ.ஏ பட்டம் பெற்றார்.

மண்டூர் சைவப் பாடசாலையிற் படித்து ஆரம்பக் கல்வியை முடித்த திரு. சி.மூ.இராசமாணிக்கம் பின்னர் கல்முனைக்குச் சென்று ஆங்கிலம் கற்றார். பின் அங்கிருந்து யாழ்பாணம் மத்திய கல்லூரியில் படித்து இலங்கைப் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று பீ.ஏ. (பொருளாதரம்) பட்டத்தைப் பெற்றார். இவர்தான் மண்டூரின் முதலாவது பல்கலைக்கழக கலைப் பட்டதாரியாவார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு இப்பிரதேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்தார். கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் தமிழர்களையும் முஸ்லிம்களையும் குடியேற்றுவதற்கு அவர் முன்னின்று உழைத்தது குறிப்பிடத்தக்கது. இவரின் சகோதரர்களான திரு. சிவகுருவும் திரு. சிவப்பிரகாசமும் மண்டூர் தபால் அதிபர்களாக ஒருவருக்குப் பின் ஒருவராக பணியாற்றினார்கள். இவரது இளைய சகோதரி நேசம், மட்டக்களப்புக்குச் சென்று அங்குள்ள வின்சென்ற் உயர் பாடசாவையில் மேற்படிப்பைத் தொடர்ந்து ஈற்றில் மண்டூர் இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார். இவர்தான் மண்டூரில் ஆங்கிலம் படித்த முதற் பெண்மணி.

திரு.சந்திரசேகரம், பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பின் சிவாநந்த வித்தியாலயத்தில் பணியாற்றிப் பின் யாழப்பாணத்தில் உள்ள கந்தவரோதயா கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கிருந்து

லண்டன் மாநகரம் சென்று லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியில் கலை முதுமாணிப் பட்டம் பெற்று வந்து கந்தவரோதயா கல்லூரியில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். இவர்தான் முதன்முதல் எம்.ஏ. பட்டம் பெற்ற மண்டூரைச் சேர்ந்தவர். அப்பொழுது பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வித்துறையில் வெற்றிடம் ஏற்பட்டதால் அங்கு விரிவுரை யாளராக நியமனம் பெற்றார். அங்கு பணியாற்றிய பின் கொழும்புப் பல்கலைக் கழக கல்விப் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றி பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பேராசிரியராக நியமனம் பெற்றார்.

இந்த புலமைப்பரிசு சாதனையால் பாடசாலையின் புகழ் பரவியது. சாதனை தொடர்ந்தது. இந்தப் பாடசாலையின் ஆரம்ப ஆசிரியர்களில் ஒருவர் கோணாமலை உபாத்தியாயர். அவர் பக்கத்து ஊரில் உள்ள பாலைமுனையில் அரசினர் பாடசாலை கட்டுவதற்காக தனது காணியை உபயம் செய்தவர். இவரது மூத்த மகன் கோணேசபிள்ளை, மண்டூர் இராமக்கிருஷ்ண மிஷன் பாடசாலையிலும் பாலைமுனையில் அரசினர் பாடசாலையிலும் படித்து 1940 இல் கிழக்கு மாகாணத்தில் பரீட்சையில் முதல் இடத்தைப் பெற்றுப் புலமைப் பரிசைப் பெற்றார். இவர் சுவாமி விபுலாநந்தரின் வழிகாட்டலுக்கேற்ப சிவாநந்த வித்தியாலயத்தில் சேர்ந்து ஆங்கிலத்தில் விஞ்ஞானப் பிரிவில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். அங்கு உயர் கணிதம், விசேட கணிதம், வர்த்தக கணிதம், பௌதீகவியல், ரசாயனவியல், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்ப்பாணம் சென்று ஹாட்லி கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆகியவற்றில் விஞ்ஞானக் கல்வியில் மேற்படிப்பைத் தொடர்ந்தார். விஞ்ஞானப் பிரிவில் படித்தாலும் இரண்டு கல்லூரிகளிலும் தமிழ்ப் பேச்சுப் போட்டிகளில் முதல் இடம்பெற்றுப் பரிசும் பதக்கமும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் மகரகம ஆங்கிலப் பயிற்சிக் கல்லூரியில் அனுமதிபெற்று ஆங்கில ஆசிரியராகவும் விசேட கணித ஆசிரியராகவும் பயிற்சி பெற்று அவரது சிவாநந்த வித்தியாலய அதிபரும் அப்போதய திருகோணமலை இந்துக் கல்லூரியின் அதிபருமான திரு.அம்பலவாணர் அவர்களின் அழைப்பை ஏற்று திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆசிரியர் ஆனார். அங்கு ஆசிரியப் பணியோடு, வீரகேசரி,ஈழகேசரி, ரைம்ஸ், லங்காதீப ஆகிய பத்திரிகைகளுக்கும் நிருபராக இயங்கினார். 1956இல் புதுடில்லியில் நடைபெற்ற ஆசிய எழுத்தாளர் மாநாட்டுக்கு அவரது முன்னாள் பேராசிரியர்

கலாநிதி கா.பொ. இரத்தினம் அவர்களோடு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. மாநாட்டில் இந்திய ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத், உப ஜனாதிபதி ராதாக்கிருஷ்ணன், பிரதமர் நேரு, ராஜாஜி, பிரபல எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந் முதலியோர் உரையாற்றினர். மாநாட்டு முடிவில் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது.

இந்துக் கல்லூரியில் இருந்து கண்டி முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் நியமனம் பெற்று அங்கிருந்து அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரிக்கு மாற்றப்பட்டு அங்கிருந்து கணிதத்துக்கு தேசிய ரீதியாக புதிய பாடத்திட்டம் தயாரிப்பதற்கு கல்வி அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டு இந்தப் பணி முடிய மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். இங்கு பணியாற்றும்போது அவுஸ்திரேலியாவிலுள்ள குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தால் தொலைக்கல்வி மூலம் கணிதம், ஆங்கில இலக்கியம், கல்வி, அரசியல் ஆகிய பாடங்களைக் கற்க புலமைப் பரிசு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கொழும்புத் திட்டத்தினால் அவுஸ்திரேலியாவிலுள்ள மக்குவாறிப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச கணிதக்கல்வி கற்கைநெறியில் பங்குபற்ற புலமைப்பரிசு வழங்கப்பெற்றது. இதையேற்று அங்கு சென்று இந்த கற்கை நெறியில் பங்குபற்றியபின் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழத்தில் நடைபெற்ற தொலைக்கல்வி கருத்தரங்கிலும் பங்குபற்றிய பின் இலங்கைக்கு மீண்டு மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியில் தனது பணியைத் தொடர்ந்தார். அப்பொழுது கல்வி அமைச்சு கல்வி புத்தாக் கத்தை ஆரம்பித்தது. இது தொடர்பான பணிகளில் ஈடுபட பாடவிதான அபிவிருத்தி நிலையம் அழைப்பு விடுத்தது. ஆசிரியர் கலாசாலைப் பணிகளோடு பாடவிதான அபிவிருத்தி நிலையப் பணிகளிலும் ஈடுபட்டு ஆரம்பக் கல்வி தொடர்பான தமிழ்மொழிக் கருத்தரங்குகளில் ஈடுபட்டார். ஆரம்பக் கல்வி ஆசியர்களுக்கு விசேட கணிதம் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தினார். ஆசிரியர்களுக்காகத் தயாரிக்கப்பெற்ற "செயல் மூலம் உணர்தல்" என்னும் கைநூலின் தயாரிப்புக் குழுவின் தலைவராகவும் பணியாற்றினார். இதேவேளை கொழும்புப் பல்கலைக் கழகம் கல்விமாணி கற்கைநெறியில் சேர வாய்ப்பளித்தது. இந்த கற்கை நெறியில் கணிதத்தைச் சிறப்புப் பாடமாக எடுத்து இறுதிப் பரீட்சை எழுதியவுடன் மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றார். இந்தக் கல்லூரியின் வரலாற்றில் கிழக்கு மாகாணத்தவர் ஒருவர் அதிபர் பதவி ஏற்றது இதுவே முதலாவதாகும். சில மாதங்களில்

பரீட்சை முடிவு வெளிவந்தது. கோணேசபிள்ளை அகில இலங்கையில் பரீட்சையில் முதல் இடத்தையும் முதல் வகுப்பையும் பெற்றார். அந்த ஆண்டு இந்த கற்கை நெறியில் இவருக்கு மாத்திரமே முதல் வகுப்பு வழங்கப் பெற்றது. இவரது சாதனையை மெச்சிய மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் இவருக்கு தங்கப் பதக்கம் வழங்கி கௌரவித்தார்கள். பரீட்சையில் முதலாம் வகுப்பிற் சித்தியடைந்த காரணத்தால், ஆசிரியர் கல்லூரி சேவையில் இருந்து விடுவிக்கப்பட்டு கொழும்பு பல்கலைக்கழக பணிக்கு நியமிக்கப்பெற்றார். அங்கிருந்து அமெரிக்காவிலுள்ள பிரபல கொலம்பியா பல்கலைக்கழக புலமைப் பரிசு பெற்றுச் சென்று விஞ்ஞான முதுமாணி, கலை முதுமாணி, கல்வி கலாநிதி, தத்துவ கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்று, அமெரிக்க, ஆபிரிக்க பல்கலைக்கழகங்களில் பணியாற்றி யுத்தம் முடிய தாய் நாட்டுக்கு வந்துசேர்ந்தார். இங்கு வந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முது விஞ்ஞானமாணி (கல்வி) கற்கை நெறியில் வருகை விரிவுரை யாளராகவும் விபுலாநந்த அழகியற் கற்கை நிறுவகத்தின் சின்டிகேற் சபை உறுப்பினராகவும் பணியாற்றினார். இவருக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கச்சான்றோர் விருது வழங்கி பாராட்டியது. இவர்தான் மண்டூரில் முதலாவதாக விஞ்ஞான முதுமாணி, கல்வி கலாநிதி, தத்துவ கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

கௌரவ கன்னங்கரா அவர்கள் அரசாங்க சபையில் கல்வி அமைச்சராக பதவி வகித்தபோது 1945 இல் கல்வியில் பல புத்தாக்கங்களைக் கொண்டுவந்தார். அதில் ஒன்று அகில இலங்கை ரீதியாக புலமைப்பரிசு வழங்குவதாகும். அகில இலங்கை ரீதியாக ஐந்தாம் வகுப்பு இறுதியில் பரீட்சை வைத்து அதில் திறமை காட்டும் மணவர்களுக்கு புலமைப்பரிசு வழங்கி அவர்கள் மத்திய மகா வித்தியாலயங்களில் விடுதியில் இருந்து படித்து மேல் படிப்பைத் தொடர்வதற்கு வாய்ப்பளித்தது இந்தப் புலமைப்பரிசு முறை. இந்தப் பரீட்சைக்கு மண்டூர் இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த கோணாமலை செல்வநாதன் தோற்றி சித்தியடைந்து மேற்படிப்புக்கு அப்போது நிறுவப்பட்ட காத்தான்குடி மத்திய மகாவித்தியாலத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து அங்கிருந்து யாழ்ப்பாணம் இஸ்ரான்லி மத்திய கல்லூரிக்குச் சென்று மேற்படிப்பைத் தொரடர்ந்து பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

கிளறிக்கல் பரீட்சையிலும் சித்தியடைந்த காரணத்தால் அதில் இணைந்து பணியாற்றி இலண்டன் பல்கலைக்கழக பீ.ஏ. பட்டப் பரீட்சையில் சித்திடைந்தார். கணக்காளர் பரீட்சைகளிலும் சித்தியடைந்து கணக்காய்வு நாயகத்தின் திணைக்களத்தில் அத்தியட்சகராக நியமனம் பெற்றார். பின்னர் வெளிநாடு சென்று உயர் பதவிகள் வகித்ததோடு அவுஸ்திரேலியாவில் உள்ள மக்குவாற பல்கலைக்கழக எம்.ஏ. பட்டம் பெற்றார். பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகராக பணியாற்றி ஓய்வு பெற்று அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவரது தங்கை மண்டூர் இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்து மட்டக்களப்பு வின்சென்ற் உயர் பாடசாலையில் உயர்கல்வியை முடித்து பேரதேனியா பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று பீ.ஏ. பட்டம் பெற்றார். இவர்தான் மண்டூரில் பீ.ஏ. பட்டம் பெற்ற முதற் பெண். இவர் பட்ட மேல் டிப்புளோமா பெற்று முதலாந்தர அதிபர் பதவி பெற்று மட்டக்களப்பு வின்சென்ற் உயர் பாடசாலையில் உப அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவரைத் தொடர்ந்து பொன்னையா அன்னபூரணம் தமிழில் பீ.ஏ. சிறப்புப் பட்டம் பெற்று ஆசிரியராகி பின்னர் முதலாந்தர அதிபராக கல்முனை இராமக்கிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் அதிபராக பணியாற்றி ஓய்வுபெற்றார்.

தேற்றாத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. சீ.கணபதிப்பிள்ளை ஆசிரியர் மண்டூருக்கு அருகாமையில் உள்ள குறுமண்வெளியில் உள்ள மெதடிஸ்த மிஷன் பாடலையில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் மண்டூர் 3ஆம் பிரிவில் திருமணம் செய்தார். மண்டூர் 3ஆம் பிரிவின் முன்னேற்றத்துக்கு அங்கு ஒரு பாடசாலை அமைதல் முக்கியம் என உணர்ந்து அதற்குரிய முயற்சிகளில் 1950 ஆண்டில் ஈடுபட்டார். இவருடன் இணைந்து திரு.பூ.செல்லப்பா ஆசிரியர், முன்னாள் கிராம சேவகர் திரு.க.சங்கரப்பிள்ளை, ஆகியோரும் முயற்சி எடுத்தனர். இவர்களின் முயற்சியால் 1950ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் மண்டூர் முருகன் கோயில் பெரியகப்புகனாராய் இருந்த திரு. உலக நாதன் வீட்டில் அவரது தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. மண்டூர் 3ஆம் பிரிவில் ஒரு பாடசாலை அமைப்பதற்காகத் தீர்மானம் எடுக்கப்பட்டு அதன் பணிகளை முன்னெடுப்பதற்கு ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது. இக்குழு பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| போஷகர் | - | உலகநாத கப்புகனார் |
| தலைவர் | - | ப.காத்தமுத்து வட்டவிதானையார் |
| உப-தலைவர் | - | செ.கறுவத்தம்பி, கிராமத் தலைவர் |
| செயலாளர் | - | சீ. கணபதிப்பிள்ளை ஆசிரியர் |
| உப-செயலாளர் | - | க.வேலுப்பிள்ளை |
| பொருளாளர் | - | எஸ். ஆர்.தம்பிமுத்து ஆசிரியர் |

இக்குழு, நா.ஆறுமுகம் ஐயரின் காணித்துண்டில் பாடசாலையை அமைப்பதற்குத் தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தை அக்காலப் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.ஏ.எதிர்மனசிங்கம் அவரகளைச் சந்தித்து எடுத்துரைத்தனர். இந்தத் தீர்மானத்தை அவர் வரவேற்றது மாத்திரமல்லாது தனது காணியில் இருந்தும் முதிரை மரங்களை இப்பணிக்கு அறுத்து எடுக்குமாறும் கூறினார். ஒரு குழுவினர் அந்தக் காணிக்குச் சென்று மரங்களை அறுத்து வந்து தற்காலிக கொட்டில் ஒன்றை அமைத்தனர். 1950 நவம்பர் மாதம் இப்பணி நிறைவேறியவுடன் கௌரவ எஸ்.ஏ. எதிர்மனசிங்கம் இவர்களைச் சந்தித்து அவரின் ஆலோசனைப்படி 01.01.1951 பாடசாலை சம்பிரதாயப்படி இயங்கத் தொடங்கியது. திரு. சீ.கணபதிப்பிள்ளை ஆசிரியரும் திரு.பூ. தம்பிமுத்து ஆசிரியரும் தங்கள் ஆசிரியப் பணிகளை ராஜினாமாச் செய்து விட்டு புதிய பாடசாலையில் இணைந்துகொண்டார்கள்.

பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ்.எ. எதிர்மனசிங்கம் அவர்களின் முயற்சியால் இப்பாடசாலை 04.06.1951இல் அரசாங்கப் பாடசாலையாக மாற்றப்பட்டு மட்/மண்டூர் கோட்டமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்று பெயர் சூட்டப்பட்டது. அத்துடன் திரு. எ.அமரசிங்கம் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். திரு. சீ.கணபதிப்பிளை அவர்களும் திரு. பூ. தம்பிமுத்து அவர்களும் இன்னும் சிலரும் உதவி ஆசிரியர்களாகப் பணியேற்றார்கள்.

பாடசாலை வளர்ந்து 01.01.1968 இல், அப்போது பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. மூ.இராசமாணிக்கம் அவர்களின் முயற்சியால் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டு, 1975 ஆண்டு 1C பாடசாலையாக மேலும் தரம் உயர்த்தப்பட்டு க.

பொ.த. உயர்தர வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது (பொன் விழா மலர், மட்/மண்டூர் மகா வித்தியாலயம்). இதன் விருத்தியால் இங்கிருந்து மாணவர் க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்தியடைந்து மேற்படிப்புக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

இலங்கை நிர்வாக சேவையில் திரு. கறுவல்தம்பி கதிர்காமநாதன் சித்தியடைந்து ஈற்றில் உதவி அரசாங்க அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர்தான் இப்பரீட்சையில் சித்தியடைந்து இப்பதவி வகித்த முதலாவது மண்டூர் மைந்தன். சோமசுந்தரம்பிள்ளை சிவசங்கரி, இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமிக்கப்பெற்று மட்டக்களப்பு கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுகிறார்.

முத்தையா விமலநாதன் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமிக்கப் பெற்று பட்டிருப்புக் கல்வி வலயத்தில் கோட்டக் கல்வி அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் முதலாந்தர பாடசாலை அதிபராக வியமனம் பெற்று மணடூர் மகாவித்தியாலயத்திலும் மண்டூர் இராமக்கிருஷ்ண வித்தியாலயத்திலும் அதிபராக அமர்ந்து பெரும் சீர்திருத்தங்களைச் செய்தார் என்பது போற்றப்படவேண்டியது.

வல்லிக்குட்டி தயாபரன் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற டாக்டராவார். உதவி வைத்தியர்களாக (அப்போதிக்கர்) கணபதிப்பிள்ளை சாமிநாதன், விநாசித்தம்பி கனகசபை (தம்பையா) ஆகியோர் நியமனம் பெற்றிருக்கின்றனர்.

கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம் மண்டூர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து ஆனைகட்டியவெளி அரசினர் பாடசாலையில் தொடர்ந்து பின்னர் சிவாநந்த வித்தியாலயத்தில் மேற்கல்வியைப் பூர்தியாக்கி கிழக்குப் பல்கலைக்கழக்தில் சேர்ந்து தமிழில் சிறப்புப் பட்டம் பெற்றார். பின்னர் அங்கு விரிவுரையாளராக நியமனம்பெற்று அங்கு முதுகலைமாணி, தத்துவ கலாநிதி ஆகிய பட்டங் களைப் பெற்று சிரேஷ்ட விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்றார்.

செல்வநாயகம் ஆசிரியரின் மகன் புஷ்பானந்தன், மண்டூர் இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலையில் தேசீய கல்விச் சான்றிதழ் வரை படித்துச் சித்தியடைந்து பட்டிருப்பு மகா வித்தியாலத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து உயர் கல்விச் சான்றிதழ் பெற்று, நில அளவையாளராக நியமனம் பெற்று பின்னர் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றவர்.

குண்டகசாலையில் விவசாய டிப்ளோமா பெற்றோர்: ஆசீர்வாதம் தவராசா, முருகப்பன் சிவமலர், சிவஞ்ஞானம் ஞானமணி ஆகியோராவர்.

மண்டூர் இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து உயர் கல்வியைத் தொடர்ந்து முதுகலைமாணிப் பட்டம் பெற்று தொடர்ந்து சட்டக் கல்வியைத் தொடர்பவர் உருத்திரகுமாரி. கவிஞராகவும் கவிதை நூலுக்கு பரிசு பெற்றவருமான இவர் மண்டூர் பெண்கள் கல்வி முயற்சிக்கும் முன்னேற்றத்துக்கும் சிறந்த எடுத்துக் காட்டாவார்.

**(குறிப்பு: அவரால் நிறைவுசெய்யப்படாத கட்டுரை)**

• • •

## "அமரர் நல்லையா வாழும் மனிதம்" - சில திருத்தங்கள்

"அமரர் நல்லையா வாழும் மனிதம்" என்னும் நூல் கிடைத்தது. படித்தேன். மிக அழகான முக்கிய விடயங்கள் உள்ளடங்கிய வெளியீடு மிகச் சிறந்த பணி. இதன் உருவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இது ஒரு முக்கிய பதிவு. இது இன்றைய சந்ததியினருக்கு மாத்திரமல்லாது வருங்காலச் சந்ததியினருக்கும் வழிகாட்டும் வரலாற்றுப் பதிவு. தன்நலன் கருதாது பெரும் பணியாற்றிய மாமனிதனின் பங்களிப்பு பற்றிய பதிவு. இது மிகவும் முக்கியமான பதிவு என்பதால் இதில் உள்ள சில பிழையான சிறு தரவுகளை அடுத்த பதிப்பில் திருத்திக்கொண்டால் நன்று.

5ஆம் பக்கத்தில் (7உக்கு முந்திய பக்கங்கள் குறிப்பிடப் படவில்லை) 1938 – 1943 மட்டக்களப்பு நகரசபை உறுப்பினர் என்றும் 45 ஆம் பக்கத்தில் "மட்டக்களப்பு நகரசபை உறுப்பினராக அவர் 1941 தொடக்கம் 1943 வரை கடமையாற்றினார்" என்றும் தரப்பட்டுள்ளது. 1941 இல் அவர் அரச பணியை ஏற்றதால் அதன்பின் நகரசபை உறுப்பி னராக இருக்க சட்டம் இடம்கொடுத்திருக்குமா? என்பது ஆராயப்பட வேண்டியது.

11ஆம் பக்கத்தில் "ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்ள எவ்வாறு ஆண்கள் யாழ்ப்பாணம் சென்று பயிற்சியைப் பெற்றார்களோ அவ்வாறே பெண்களும் யாழ் நல்லூர் சென்று ஆசிரியர் பயிற்சியை

மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்நிலையைப் புரிந்த திரு. நல்லையா அவர்கள் 1945ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நான்காம் தகதி பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் பாடசாலையில் ஒரு பகுதியில் நிறுவினார்" என்று தரப்பட்டுள்ளது. ஆனால் மட்டக்களப்பில் ஆண்களுக்கான ஆசிரியர் கலாசாலைகள் இரண்டு அரசடி ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை, சென்ற் ஒகஸ்ரின் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை என 1930 களில் இயங்கின. 1941 இல் அட்டாளைச்சேனையில் ஆண்களுக்கான ஆசிரியர் கலாசாலை அமைக்கப்பட்டது. எனவே ஆண்கள் யாழ்ப்பாணம் போகவேண்டிய நிலை இருக்கவில்லை. சென். ஒகஸ்தீன் ஆசிரியர் கலாசாலையிலேதான் புலவர்மணி தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார். யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. F.X.C. நடராசா இங்கேதான் பயிற்றப்பட்டார். பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சி கோப்பாய் பெண்கள் ஆசிரிய கலாசாலையிலேதான் நடைபெற்றது. நல்லூர் ஆசிரியர் கலாசாலை ஆண்களுக்கான ஆசிரிய கலாசாலையாக இயங்கியது.

37ஆம் பக்கத்தில் "இவ்வாறு கடலில் தத்தளித்தபோது கைகொடுத்த அமரர் வி.நல்லையா என்னைப்போன்று உபதபாலதிபராக இருந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராக பதவி உயர்த்திக் கொடுத்தார். இன்னும் தகுதி இருந்தும் பதவியுயர்வு பெறமுடியாதிருந்த திருவாளர் சின்னத்துரை, திருவாளர் கணபதிப்பிள்ளை முதலியோரை மட்டக்களப்பு இந்துக்கல்லூரி, சிவானந்தா வித்தியாலய அதிபர்களாக நியமித்தார். திருவாளர் ம.ராஜகாரியர், திருவாளர் சபாரட்னம், திருவாளர் சிவசிதம்பரம், திருவாளர் கோபன் கந்தையா, திருவாளர் கந்தசாமி, திருவாளர் துரைசிங்கம் முதலிய பல தகுதி வாய்ந்தவர்களை இனங்கண்டு மட்டக்களப்பு அரசினர் கல்லூரிக்கு (தற்போதைய இந்துக்கல்லூரி) ஆசிரியர்களாக நியமித்தார்" என்று தரப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான கூற்று.

புலவர்மணி, திரு.F.X.C. நடராசாவைப்போல் வேலையிழந்து கடலில் தத்தளிக்கவில்லை. அவர் உணவுக் கட்டுப்பாட்டு காவல் நிலையத்தில் பணியாற்றினார். அவரது ஆசிரியர் நியமனம் தொடர்பாக புலவர்மணி இவ்வாறு கூறுகிறார். 'இந்த சூழ்நிலையில் நண்பர்

நல்லையாவுக்கு என்னைத் தேடிப் பிடிக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டு விட்டது. ஒரு நாள் ஓந்தாச்சி மடத்திலுள்ள எனது தடுப்பு நிலையத்துக்கு அவர் வருகிறார். வந்தவர் மட்டக்களப்பில் அரசினர் கல்லூரி ஒன்றைத் தொடங்கிக்கொண்டேன். உங்களையெல்லாம் நம்பித்தான் இந்தக் கல்விச் சேவையில் ஈடுபட்டிருக்கிறேன். தமிழுக்குத் தகுதியான ஆள் இல்லை. நீங்கள் வந்து அதைக் கையேற்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்" (உள்ளதும் நல்லதும், ப.195).

திரு நல்லையா அவர்கள், உணவுக் கட்டுப்பாட்டு காவல் நிலையத்தில் பணியாற்றிய புலவர்மணியைத் தேடிச்சென்று அவரை அரசினர் கல்லூரியில் பணியாற்ற அழைத்தார் என்ற பெருந்தன்மையும் அவரது பொதுநல ஆர்வமும் வலியுறுத்தப்பட வேண்டியன.

திரு.நல்லையா அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக அல்ல அரசினர் கல்லூரியில் ஆசிரியராக எந்தப் பதவி உயர்ச்சியும் இல்லாது மிகக் குறைந்த சம்பளம்பெற்ற ஆசிரியராகவே இறுதிவரை பணியாற்றினார். மேலும் அவர் தபால் உப அதிபராக இருந்தபோது அல்ல உணவுக் கட்டுப்பாட்டுத் தடை நிலையத்தில் பணியாற்றியபோது ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக அல்ல அரசினர் கல்லூரியில் ஆசிரியராக நியமிக்கப் பட்டார்.

இதில் குறிப்பிடப்பட்டவர்கள் அரசினர் கல்லூரியில் ஆசிரியர் களாக நியமிக்கப்படவில்லை. திரு. ராஜகாரியர், அரசினர் கல்லூ ரியின் தாபக அதிபராக நியமிக்கப்பட்டார். திரு. சபாரட்னம், திரு. சிவசிதம்பரம், திரு. கந்தையா ஆகியோர் பின்னர் அரசினர் கல்லூரி அதிபர்களாகவும், திரு. துரைசிங்கம், திரு.கந்தசாமி ஆகியோர் ஆசிரியர் கலாசாலையிலும் அதிபர்களாகவே வெவ்வேறு காலப் பகுதியில் நியமிக்கப்பட்டார்கள்.

திரு.க.கணபதிப்பிள்ளை நீண்டகாலம் இராமகிருஷ்ண சங்க சிவாநந்த வித்தியாலயத்தில் உபஅதிபராக (Vice Principal) பணியாற்றிவர். ஆங்கிலம், உயிரியல் ஆகிய பாடங்களை திறமையாகக் கற்பித்தவர். ஆங்கில B.A பட்டதாரி. ஆங்கில பயிற்றப்பட்ட ஆசிரியர். F.R.G.S பட்டம் பெற்றவர். காலை 6மணிக்கு பாடசாலைக்கு வந்து மாலை 6 மணிக்கு பாடசாலையை விட்டுச் சென்ற கடமை வீரன். வேறு பதவியை

நாடாது நற்பணியாற்றிய தியாகி. சிவாநந்த வித்தியாலயத்தின் அதிபர் திரு. அம்பலவாணர், திருகோணமலை இந்துக்கல்லூரிக்கு மாற்றலாகச் சென்றவுடன் திருகோணமலை இந்துக்கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிய திரு. ரகுபதி 01-05-1954இல் சிவாநந்த வித்தியாலயத்தின் அதிபரானார். அவர் 31-08-1955இல் ஓய்வுபெற, உப அதிபராக நீண்டகாலம் அர்ப்பணிப்போடு பணியாற்றிய திரு.க.கணபதிப்பிள்ளை 01-09-1955 இல் சிவாநந்த வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப்பட்டார். இது இராமக்கிருஷ்ண சங்க நியமனம். இதில் எந்தச் சிக்கலும் இருக்கவில்லை. (இந்தக் காலகட்டத்தில் நான் இராமக்கிருஷ்ண சங்கத்தில் 1934இல் இருந்து 1961 வரை மாணவனாவும் ஆசிரியராகவும் பணியாற்றினேன்).

திரு.சின்னத்துரை B.A.Dip.inEd அவர்கள் சிவாநந்த வித்தியால யத்தில் ஆசிரியராகப் பணியாற்றிப் பின் அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். அதிபர் பதவி காலியாகியவுடன் அவர் அதிபராக நியமிக்கப்பட்டார். இதில் எந்தச் சிக்கலும் தோன்ற வில்லை. இருவரும் சிவாநந்த வித்தியாலயத்தில் என்னுடைய ஆசிரியர்கள்.

37ஆம் பக்கத்தில் "இவரிடம் கல்வி கற்றவர்களுள் குறிப்பாகக் குறிப்பிடக் கூடியவர்கள் என்று எனக்கு அவ்வளவாக ஞாபகமில்லாதி ருக்கின்றது. எனினும் திரு.ப.சந்திரசேகரம் M.A. (இலங்கைப் பல்கலைக் கழகம்) திரு.வ.சதாசிவம் M.A., திரு. சிவலிங்கம் (மிருக வைத்தியர்), திரு. எஸ். சதாசிவம்பிள்ளை (களுவாஞ்சிகுடி), திரு கணபதிப்பிள்ளை, திரு. வேந்தனார் முதலிய பலர் இன்று உயர் பதவி வகிக்கின்றனர்" எனறு தரப்பட்டுள்ளது. யார் இந்த வேந்தனார் என்று தெரியாதிருக்கிறது. திரு வி. சதாசிவம் அவர்கள் B.A., Dip in Ed., M.Lit. ஆகிய பட்டங்களைப் பெற்றவர். M.Lit என்பது உயர் ஆராய்ச்சிப் பட்டம். இந்தியா வழங்கிய புலமைப் பரிசு பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படித்து இப்பட்டத்தைப் பெற்றவர். சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி பின்னர் பரீட்சைத் திணைக்கத்தில் அட்சியட்சகராக பதவி வகித்தவர். திரு.ப.சந்திரசேகரம், B.A. (Cey), Dip in ED., M.A. (Education, London) அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி விரிவுரை யாளராகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட கல்வி விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதலாவது கல்விப் பேராசிரியராகவும் பணியாற்றியவர் (நேர்காணலுக்கு முன்).

மேலும் சில முக்கிய மாணவர்களைக் குறிப்பிடலாம். சுவாமி விபுலாநந்தரின் ஆசிரியர் திரு.குஞ்சித்தம்பி அவர்களின் மகன் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு.தருமரெத்தினம், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொருளியலில் பீ.ஏ. சிறப்புப் பட்டம் பெற்று பின்னர் புலமைப் பரிசு பெற்று இங்கிலாந்து சென்று கணிதப் பொருளாதாரத்தில் எம்.ஏ. பட்டம் பெற்றார். இலங்கையில் புள்ளியியல் நிபுணராகப் பணியாற்றிப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியியல் நிபுணராகப் பணியாற்றினார். ஆரையம்பதியைச் சேர்ந்த திரு. தட்சணாமூர்த்தி, பிரித்தானியாவில் இலங்கை உயர் ஸ்தானிகராகப் பணியாற்றினார். சம்மாந்துறையைச் சேர்ந்த ஜனாப் அப்துல் மஜீத் பிரபல அரசியல் வாதியாவும் அமைச்சராகவும் விளங்கினார்.

39ஆம் பக்கத்தில் 'கிழக்கின் சாந்தி நிகேதனம்" என்னும் தலைப்பில் புலவர்மணியின் கூற்று தரப்பட்டுள்ளது. "சாந்தி நிகேதனம்" என்பது நோபெல் பரிசு பெற்ற கவிஞர் தாகூர் கல்கத்தாவில் அமைத்த கிராமம். அதில் அமைந்துள்ள கல்வி நிலையந்தான் 'விஸ்வ பாரதி'. இது உயர் கல்வியளிக்கும் பல்கலைக்கழக அந்தஸ்துடையது. இங்குதான் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, பொருளியலுக்கு நோபெல் பரிசு பெற்ற பொருளியல் நிபுணர் சென் ஆகியோர் கல்வி கற்றார்கள். தாகூரின் அமைப்பைத் தெளிவாக அறியாது உயர் அந்தஸ்துள்ள சொற்களை சாதாரண சொற்களாக எழுத்தாளர்கள் கையாண்டாலும் முக்கிய வரவாற்றுப் பதிவுகளில் தவிர்ப்பது நன்று.

44ஆம் பக்கதில் "தனது இருபதாவது வயதில் 1929ல் சுவாமி விபுலானந்தரது ஆசீர்வாதத்தில் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்தில் ஆசிரியராக நல்லையா அவர்கள் இணைந்துகொள்கிறார்" என்றும் 61ஆம் பக்கதில் "தனக்கு எதிர்கால உயர்வைத் தரக்கூடியதும், தவமாக அமையக் கூடியதுமான ஆசிரியப் பணியை இளைஞன் நல்லையா தெரிவு செய்கிறான். இதற்காக கொழும்பில் ஆசிரிய பயிற்சியை முடித்த நல்லையா முதலில் திருகோணமலை இராமக்கிருஷ்ணமிஷன் பாடசாலை ஒன்றிலும் பின்னர் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலும் ஆங்கில ஆசிரியராகப் பணியைத் தொடங்கினார்" என்றும் 82ஆம் பக்கத்தில் "கொழும்பில் ஆசிரிய பயிற்சியை முடித்துக்கொண்ட இவர், தமது சமயப்பற்றுக் காரணமாகவே இராமக்கிருஷ்ண சங்கத்தின் தொண்டராக திருகோணமலை இந்துக்

கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்றார்" என்றும் தரப்பட்டுள்ளன.

இங்கே தரப்பட்ட கருத்துக்கள் கட்டுரையாளர்களின் கருத்துக்களே யல்லாது திரு நல்லையாவின் கருத்துக்கள் என்பதற்கு ஆதாரம் இல்லை. 5ஆம் பக்கத்தில் தரப்பட்ட விபரங்களில் அவர் திருகோணமலையில் கற்பித்ததாகக் குறிப்பிடப்படவில்லை. திருகோணமலையில் கற்பித்த புலவர்மணியும் திரு.நல்லையா திருகோணமலையில் ஆசிரியராக பணியாற்றியதாகக் குறிப்பிடவில்லை. "முதலில் திருகோணமலை இராமக்கிருஷ்ணமிஷன் பாடசாலை ஒன்றில்" என்பது தெளிவற்ற கூற்று. திருகோணமலையில் மூன்று இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலைகள் இருந்தன. அவை இந்துக் கல்லூரி, கோணேஸ்வர வித்தியாலயம், தமிழ்ப் பாடசாலை ஆகியவை. இந்துக்கல்லூரி ஆங்கிலப் பாடசாலையாகவும், தமிழ்ப் பாடசாலை, தமிழில் சிரேஷ்ட கல்வி வழங்கிய பாடசாலையாகவும், கோணேஸ்வர வித்தியாலயம் ஆரம்ப வகுப்புகள் உள்ள பாடசாலையாகவும் இயங்கின. எனவே திரு.நல்லையா திருகோணமலையில் பணியாற்றியிருந்தால் எந்தக் கல்வி நிலையத்தில் எப்போது ஆசிரியராகப் பணியாற்றினார் என்று குறிப்பிடுவது நன்று.

45ஆம்பக்கத்தில் "கல்லூரியின் முதல் அதிபராக பதவியேற்று கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது. இதன்போது அவர் உள்ளூராட்சி அரசியலிலும் தன்னை இணைத்துக் கொண்டார். மட்டக்களப்பு நகர சபையிலும் அவர் 1941 தொடக்கம் 1943வரை கடமையாற்றினார்' என்று தரப்பட்டுள்ளது. 5ஆம் பக்கத்தில அவர் 1938 – 1943 மட்டக்களப்பு நகரசபை உறுப்பினர் என்றும் தரப்பட்டுள்ளது. 1941இல் அசாங்க சேவையில் இணைந்தவர், உள்ளூராட்சி சேவையில் பணியாற்ற முடிந்ததா?

50ஆம் பக்கத்தில் "திரு.நல்லையா அவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையுடன் அமைத்த ஏனைய வைத்தியசாலைகள்" என்ற தலைப்பில் "7.மண்டூர் வைத்தியசாலை" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலை 1930களில் கட்டப்பட்டது. 1934இல் நான் பாலர் கீழ் பிரிவில் படிக்கும்போது வைத்தியசாலையில் பணியாற்றிய ஜேம்ஸ் டாக்டரின் மகன் என்னோடு படித்தார். அப்போது திரு.நல்லையா அவர்கள் சிவாநந்தாவில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

61ஆம் பக்கத்தில் "இளைஞனான நல்லையா பல்கலைக்கழக பட்டமொன்றிற்கும் தன்னைத் தயார் செய்யத் தொடங்கினார். தமிழ், ஆங்கிலம், வரலாறு எனும் பாடங்களைத் தெரிவு செய்த இளைஞன் நல்லையாவுக்கு அப்பாடங்கள் பிற்கால ஆளுமை மலர்ச்சிக்கான பெரும் அடிப்படையாக அமைந்தன' என்று தரப்பட்டுள்ளது. 44ஆம் பக்கத்தில் "ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக வெளிவந்தார். பின்னர் முத்தமிழ் மாமுனிவர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் வழிகாட்டலில் ஆங்கில இலக்கியத்தையும் வரலாற்றையும் முக்கிய பாடங்களாகக் கொண்டு இலண்டன் பல்கலைக்கழக கலைமாணிப் (B.A) பரீட்சையிலும் தேறினார்" என்று தரப்பெற்றுள்ளது. ஆனால் லண்டன் பீ.ஏ. பரீட்சைக்குத் தோற்றும் பாடங்களில் ஒன்று செம்மொழியாக (Classical Language such as Sanskrit, Latin, Greek, etc. Tamil is not considered as a classical language by the University of London) இருத்தல் வேண்டும். அவர் பட்டத்துக்குத் தோற்றிய பாடங்களை நன்கு ஆராய்ந்து குறிப்பிடுவது நன்று. லண்டன் பீ.ஏ பரீட்சைக்கு மூன்று பாடங்களில் தோற்றவேண்டும். இவற்றில் எது முக்கியமானது, எது முக்கியமற்றது என்று கருதப்படுவதில்லை.

46ஆம் பக்கத்தில் "களனித் தொகுதி உறுப்பினர் ஜே.ஆர். ஜயவர்த்தனா அவர்களால் முன்மொழியப்பட்ட தனிச்சிங்களச் சட்டப் பிரேரணை விவாதத்திற்கு வந்தபோது சிங்கள மொழியுடன் தமிழ்மொழியையும் இணைக்கவேண்டி அதற்குத் திருத்தப் பிரேரணை சமர்ப்பித்து தனியொருவனாக அவர் ஆற்றிய உரையும் அதில் அவரது கருத்துக்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டமையும் அவரது மகத்தான சேவையாகவே வரலாறு பதிவுசெய்திருக்கின்றது" என்று தரப்பெற்றுள்ளது. இது தெளிவான கூற்றல்ல. கௌரவ J.R.ஜயவர்த்தனா அவர்களின் பிரேரணை சிங்களம் என்றிருந்ததே அல்லாது தனிச் சிங்களம் என்றிருக்கவில்லை. மேலும் அது சிங்களத்தை சில ஆண்டுகளில் அரசகரும மொழியாக்குவதற்குரிய நோக்கத்துக்காக செய்யவேண்டிய ஆயத்தங்களையே கொண்டிருந்தது. அவர் பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு 1943இல் கொடுத்த முன்னறிவித்தல்: In 1943, J.R. Jayawardene, who was a the member of the State Council gave notice in the State Council of the following resolution: "That with the object of making Sinhalese as the official language of Ceylon, within reasonable number of

years, this council is of opinion:

That Sinhalese should be made the medium of instruction in all schools;

That Sinhalese should be made a compulsory subject to all public examinations;

That legislation should be introduced to permit the business of the State Council to be conducted in Sinhalese also;

That a commission should be appointed to choose for translation and to translate books of other languages into Sinhalese;

That a commission should be appointed to report on all steps that need to taken to effect the transition from English into Sinhalese". (Debates, SC 1943, 1: 1024) .

Later on the debate on the resolution began on 24 March 1944, he declared that on representation by his Tamil friends he had decided to include Tamil also.

திரு. நல்லையா அவர்கள் முன்வைத்த திருத்தம் "சிங்களம்' என்றிருக்கும் இடங்களில் "சிங்களமும் தமிழும்" ஆகிய சொற்கள் இடம்பெறல் வேண்டும் என்பதே."V.Nalliah's amendment stated that the words 'and Tamil' be added after the word 'Sinhalese' and wherever the word 'Sinhalese' occurs".

1944 மார்ச் மாதம் 24 ஆம் திகதி நடைபெற்ற விவாதத்தின்போது கௌரவ ஜயவர்த்தனா அவர்களே தனது தமிழ் நணபர்கள் முன்வைத்த கருத்துக்களின் நிமிர்த்தம் தானே தமிழையும் சேர்த்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிட்டார். இந்த விவாதத்தின்போது வியாங்கொடை பிரதிநிதியாக அரசாங்க சபையில் அங்கம் வகித்த கௌரவ S.W.R.D. பண்டாரநாயக்க அவர்களின் கூற்றும் கருத்திற் கொள்ளப்படவேண்டியது. விவாதத்தின்போது கௌரவ பண்டாரநாயக்கா அவர்கள் "தமிழ்மொழிக்கு உரிய மதிப்பு அளிக்காவிட்டால் அது சிங்கள மக்களாகிய எங்களின் பெருந்தன்மையாக அமையாது" என்று கூறி திருத்தங்களோடு அமைந்த பிரேரணையை ஏற்று வாக்களித்தார். (During the debate on this motion, S.W.R.D. Bandaranayake (the councilor for Viyangoda) declared "it would be ungenerous on our part as Sinhalese not to give due recognition to the Tamil Language" and voted for the amended motion.) எனவே அவர் தனித்து நிற்கவில்லை. முக்கிய சிங்களத்

தலைவர்களும் அவரோடு இணைந்து திருத்தத்துக்கு ஆதரவாக நின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

67ஆம் பக்கத்தில் "சிவாநந்த வித்தியாலயத்தின் அதிபராக அவ்வேளை கடமையாற்றிய விபுலாநந்த அடிகளிடம் ஆங்கிலம், தமிழ், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்று லண்டன் பல்கலைக்கழக பட்டதாரியானார்" என்று தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த மூன்று பாடங்களுடன் லண்டன் பீ.ஏ. பரீட்சைக்குத் தோற்ற முடியுமா? லண்டன் பல்கலைக்கழகம் அனுமதித்த செம்மொழி ஒன்று வேண்டாமா?

மேலும் திரு.நல்லையா அவர்கள் விபுலாநந்த அடிகளைப்போல் கொழும்பு ஆங்கில ஆசிரியர் கல்லூரியில் ஆங்கிலேயரால் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர். எனவே விபுலாநந்த அடிகளிடம் ஆங்கிலம் கற்று லண்டன் பல்கலைக்கழக பட்டதாரியானார் என்று கூறலாமா?

68ஆம் பக்கத்தில் "பாடசாலைகளை நிறுவியது மாத்திரமல்லாது நின்றுவிடாது அவற்றின் தரத்தை உயர்த்துவதற்காக தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமிக்கச் செய்தார். மட்டக்களப்பு அரசினர் கல்லூரி (தற்போது இந்துக்கல்லூரி) யில் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் திருவாளர்கள் ராஜகாரியர், சபாரட்னம், சிவசிதம்பரம், எஸ். கந்தசாமி, வி. துரைசிங்கம் முதலியோர். இவர்கள் பிற்காலத்தில் சிறந்த அதிபர்களாகவும் பணியாற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது" என்று தரப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான கூற்று. திரு. ராஜகாரியர்தான் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியின் தாபக அதிபராக பணியேற்றவர். திரு.வி.துரைசிங்கம் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியின் தாபக அதிபராக நியமிக்கப்பெற்றவர். திரு.எஸ். கந்தசாமி காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றினார். பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பெற்றார்.

இதே பக்கத்தில் "எனவே ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பது அவசியம் என உணர்ந்தார். மட்டக்களப்பில் கிறிஸ்தவ மிஷனரிமாரால் புனித அகஸ்தீனார் ஆண்கள் பயிற்சிக் கலாசாலை 1943இல் ஆரம்பிக் கப்பட்டதாகவும் பெண்களுக்கெனவும் அக்காலத்தில் பயிற்சிக் கலாசாலை நிறுவப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது" என்று தரப் பட்டுள்ளது. இந்த தவறான கூற்று எங்கே குறிப்பிடப்பட்டிருக்கின்றது?

69ஆம் பக்கத்தில் "அதேபோல் உப தபாலதிபராய் பணிபுரிந்து கொண்டிருந்த புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களை அரசினர் கல்லூரிக்குப் பொறுப்பான ஆசிரியராக நியமித்தார்" என்று தரப் பட்டுள்ளது. இது தவறான தகவல். "அரசினர் கல்லூரிக்குப் பொறுப்பான ஆசிரியராய்" என்பதன் பொருள் என்ன? உணவுக் கட்டுப்பாட்டு தடுப்பு நிலையத்தில் பணியாற்றிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களுக்கு, திரு.நல்லையா அவர்களின் முயற்சியால் அரசினர் கல்லூரிக்கு தமிழ் ஆசிரியராய் அரசாங்கத்தால் நியமனம் கொடுக்கப்பட்டது என்பது பொருத்தமான பொருள் பொதிந்த கூற்றாய் அமையலாம்.

70ஆம் பக்கத்தில் "1944இல் அரசாங்க சபையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிங்களம் மாத்திரமே அரசங்க பாஷை என ஒரு பிரேரணையைக் கொண்டு வந்தபோது சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக வேண்டும் என அப்பிரேரணைக்குத் திருத்தம் கொண்டுவந்து டி.எஸ். சேனனாயக்கா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரனாயக்கா போன்றோரையும் ஏற்றுக்கொள்ளச் செய்து திருத்தத்துடன் பிரேரணையை நிறைவேற்றச்செய்தமை" என்று தரப்பெற்றுள்ளது. ஆனால் அரசாங்க சபையின் பதிவுகளின்படி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1943இல் கொடுத்த மேற்படி முன்னறிவித்தலின்படியும் இதற்கு திரு. நல்லையா சமர்ப்பித்த திருத்தத்தின்படியும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா 'சிங்களம் மாத்திரமே அரசாங்க பாஷை' என ஒரு பிரேரணையைக் கொண்டு வரவில்லை எனவும் திரு. நல்லையாவின் திருத்தம் 'சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக வேண்டும்' எனவும் அமையவில்லை என்றும் புலப்படுகின்றன. அரசாங்கம் தொடர்பான கூற்றுக்கள் பதிவுகளின்படி அமைதல் வேண்டும். நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பதியும்போது சரியானமுறையில் பதிவது வரலாற்றுக்கு முக்கியமாகும்.

72ஆம் பக்கத்தில் "it was Mr. Nalliah as early as 1944 proposed parity of states for Sinhalese and Tamils. In 1944 when Mr. J.R. Jayawardana moved in the State Council that Sinhalese should be made the language of administration it was Nalliah who moved an amendment to add the words "and Tamil" to the motions. This was agreed even by S.W.R.D. Bandaranake and the motion was passed unanimously" என்று தரப்பட்டுள்ளது. This is not a correct statement. 'state' should be 'status'. 'Tamils' should be 'Tamil'. 'motions' should be 'motion'. Mr.Jeyawardene did not move a motion first

but he gave notice of a motion in 1943.

He never proposed 'parity' of status. Further the amended motion was accepted in May 1944 but not unanimously. Twenty-nine members voted in support of the amended motion while nine members including Mr. Dudley Senanayake, (who succeeded his father Mr.D.S. Senanayake as Prime Minister) voted against the motion. (Debates, SC1944).

81ஆம் பக்கத்தில் "இந்தச்சங்கம் சிவானந்தாவைப்போல் திருகோணமலையிலும் ஒரு கல்லூரியை நிறுவியது" என்று தரப்பட்டுள்ளது. ஆனால் சிவாநந்த வித்தியாலயம் நிறுவ முன்பே ஆங்கில மொழிமூலக் கல்லூரிகளான யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயமும் திருகோணமலை இந்துக் கல்லூரியும் இராமக் கிருஷ்ண சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டன. திருகோணமலை இந்துக் கல்லூரியில் இருந்து சுவாமி விபுலாந்தர் பணியாற்றும்போது புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையை அக்கல்லூரிக்கு தலைமைத் தமிழ்ப் பண்டிதராக 1926ஆம் ஆண்டு நியமித்தார்.

இது தொடர்பாக புலவர்மணி இவ்வாறு கூறுகிறார்: "இதற்கிடையில் விபுலாநந்த அடிகளிடமிருந்து வருகிறது ஒரு நற்செய்தி. திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு நீங்கள் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக நியமிக்கப் பட்டிருக்கிறீர்கள். கடமையேற்க உடனே வருக. இந்த நற்செய்தி திருமணப் பதிவுப் பரிசு போலாயிற்று. தாமதமின்றிச் சென்று 1926 ஆவணியிலேயே கடமை ஏற்றுக் கொண்டேன் (உள்ளதும் நல்லதும். ப.102). சிவாநந்த வித்தியாலயம் 1929ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது என்பது இங்கு நோக்கப்படவேண்டியது..

82ஆம் பக்கத்தில் "சிவானந்த வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் சுவாமி விபுலாந்தர் அவர்களது தொடர்பும் அதன் பயனாக எழுந்த தமிழ்ப் பற்றும் இவரை மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித பரீட்சையிலும் வெற்றிகாண வைத்தது" இதற்குச் சான்று உண்டா?

83ஆம் பக்கத்தில் "அரசினர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கச் செய்தார். 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதுடன், திருவாளர் நல்லையா அவர்களே அதன் அதிபராகவும் அமர்ந்தார்" என்று தரப்பட்டுள்ளது.

ஆனால் 44 ஆம் பக்கத்தில் "மட்டக்களப்பு தென்பகுதிக்கு அரசாங்கசபை உறுப்பினராகவிருந்த தருமரெத்தினம் அவர்கள் மட்டக்களப்பிற்கான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை 1941 ஜூலையில் அட்டாளைச்சேனையில் நிறுவினார்" என்று தரப்பட்டுள்ளது. ஆனால் திரு.நல்லையா 1941 ஜூலை வரை சிவாநந்த வித்தியாலயத்தில் பணியாற்றினார். அப்போது நானும் அவரிடம் கல்வி கற்றேன். எனவே 83ஆம் பக்கத்தில் தரப்பட்ட கூற்று பிழையானது.

81ஆம் பக்கத்தில் "இந்தச் சங்கமிப்பிலேதான், இந்துப் பிள்ளைகள் ஆங்கிலம் படிக்க சிவானந்தாக் கல்லூரி உருவாக்கப்பெற்றது... சிவானந்தாவைத் தவிர ஏனைய யாவும் சுயமொழிப் பாடசாலைகள். சிவாநந்தா இந்துப் பிள்ளைகள் ஆங்கிலம் படிக்க உருவாக்கப்பட்டது என்று கூறலாமா? நான் படிக்கும்போதே பல முஸ்லீம்களும் சில புத்த சமயத்தவர்களும் அன்னியோன்யமாக பாடசாலை விடுதியில் இருந்தே படித்தார்கள். மேலும் ராமக்கிருஷ்ண சங்கம் சகல மதங்களையும் ஏற்றுக்கொண்ட அமைப்பாகும். மட்டக்களப்பில் ஆனைப்பந்தியில் அமைந்திருக்கும் விவேகாநந்த வித்தியாலயம் ராமக்கிருஷ்ண சங்கம் நடத்திய இன்னுமோர் ஆங்கிலப் பாடசாலையாகும். சிவானந்தாக் கல்லூரி என்பதிலும் சிவாநந்த வித்தியாலயம் என்பதே தூர நோக்குடைய சுவாமி விபுலாநந்தர் அவர்கள் இட்ட சரியான பெயர்.

82ஆம் பக்கத்தில் "சுவாமி விபுலானந்தர் அவர்கள் சைவ உலகம் சுற்றி வரும் பிரபோத சைதன்யராக விளங்க" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சைவ உலகம் எங்கே இருக்கிறது? "பிரபோத சைதன்யர்" என்பது 'சுவாமி விபுலாநந்தர்' என துறவு நாமம் பெறுமுன் அவருக்குக் கொடுக்கப்பட்ட துறவு ஆரம்ப நாமம். சுவாமி விபுலாநந்தர் என நாமம் ஏற்றபின் பிரபோத சைதன்யராக எவ்வாறு சைவ உலகத்தைச் சுற்றிவர முடியும்?

115 ஆம் பக்கத்தில் "1943இல் மட்டக்களப்பு வடக்குப் பகுதியில் நடந்த முதலாவது சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியையும் பெற்றார்" என்று தரப்பட்டுள்ளது. இது சரியல்ல. 1943இல் நடந்தது அரசாங்க சபைக்கு இடைத்தேர்தல். அப்போது மட்டக்களப்பு – திருகோணமலைக்கு அரசாங்க சபை உறுப்பினராக இருந்த திரு.தம்பிமுத்துவின் பதவி இழப்பினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு

நடந்த இடைத்தேர்தல். இது சட்டசபைத் தேர்தல் அல்ல. சட்டசபை என்பது Legislative Council. அரசாங்க சபை என்பது State Council. சட்ட சபைக்குப் பின் அரசாங்க சபை நிறுவப்பெற்றது. சட்ட சபையில் சேர் பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள் மாத்திரமே மக்களால் முதன்முதல் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

படங்கள் அமைந்துள்ள ஏழாம் பக்கத்தில் 7ஆவது கே.கணபதிப்பிள்ளை எவ்.ஆர்.சி.எஸ், 8ஆவது எஸ்.அம்பலவாணர் பி.ஏ என்றும், 10ஆம் பக்கத்தில் 5ஆவது திரு.கே.கணபதிப்பிள்ளை FRCS, 7ஆவது திரு. அம்பலவாணர் BA என்றும், 8ஆவது திரு.வி. சிவசுப்பிரமணியம் என்றும் தரப்பெற்றுள்ளன.

ஆனால், திரு.கே. கணபதிப்பிள்ளை அவர்கள் பெற்ற பட்டம் F.R.G.S.(London). இதன் விரிவு Fellow of the Royal Geographical Society,(London). F.R.C.S. என்பது மருத்துவர்கள் பெறும் பட்டம். இதன் விரிவு: Fellow of the Royal College of Surgeons. திரு. ச. அம்பலவாணர் பெற்ற பட்டம் B.Sc. Hons. (London). இவ்வாறான உயர் விஞ்ஞானப் பட்டத்தை லண்டன் பல்கலைக்கழகத்தில் பெற்று கிழக்கு இலங்கையிலே ஆசிரியராகப் பணியாற்றி விஞ்ஞானக் கல்விக்கு அத்திவாரமிட்ட பெருந்தகை. இவரது முயற்சியினாலேதான் சிவாநந்த வித்தியாலயம் கிழக்கிலங்கையில் முதலாவது முதல்தர பாடசாலையாகவும் விஞ்ஞானம் கற்பிக்கும் பாடசாலையாகவும் 1946இல் தரம் உயர்த்தப்பெற்றது. 8ஆவது திரு.சி.கந்தசாமி. இவர் கல்லடி உப்போடையைச் சேர்ந்த சிவாநந்த வித்தியாலய ஆரம்பகால ஆசிரியர். இவரது மாமனார் (மனைவியின் தந்தை) சிவாநந்த வித்தியாலய விடுதிக்கு "ரத்தினாலயம்" என்னும் கட்டடத்தை அமைத்து அன்பளிப்புச் செய்தவர்.

எனது அறிவுக்கும் அனுபவத்துக்கும் தென்பட்ட திருத்தங்களைக் கூறியிருக்கிறேன். இவைகளை நன்கு ஆராய்ந்து பொருத்தமான திருத்தங்களை அடுத்த பதிப்புக்குச் செய்தல் நன்று என, இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

• • •

## சென்ற நூற்றாண்டுக் கடைசிப் பகுதியிலும் இந்த நூற்றாண்டு முற்பகுதியிலும் இலங்கையில் வெளிவந்த சில தமிழ் வெளியீடுகளில் காணப்பட்ட வழுக்களும் அவை தொடர்பான சரியான தகவல்களும்

**செ**ன்ற நூற்றாண்டு கடைசிப் பகுதியிலும் இந்த நூற்றாண்டு முற்பகுதியிலும், இலங்கையில் பல தமிழ் வெளியீடுகள் வெளிவந்துள்ளன. இது வரவேற்கத் தக்க நிகழ்வாகும். ஆனால் சில வெளியீடுகளில் பல வகையான வழுக்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழைகள், இலக்கணப் பிழைகள், கருத்துப் பிழைகள், தகவல் பிழைகள் ஆகியவற்றோடு இலக்கியத் திருட்டும் காணப்படுகின்றது. இவைகளை ஆராய்ந்து ஏற்புடைய திருத்தங்களை ஆதாரங்களுடன் முன்வைத்து இன்றைய சமூதாயத்துக்கும் வருங்கால சமூதாயத்திற்கும் சரியான தகவல்களைப் பெறுவதற்கு வழிவகுத்தலே இந்த ஆய்வு முயற்சியின் நோக்கமாகும்.

வாழையடி வாழை என்னும் சொற்றொடர் பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து பிரகாசித்துக் கொண்டிருக்கும். அறிவு, திறமை, திறன் ஆகியவற்றைக் குறிக்கும். இது தொடர்பாக பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்கள், பேராசிரியர் க.சின்னத்தம்பி பொன்விழா மலரில் (2010) இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

பரம்பரை பரம்பரையாக தமிழ் படித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களைக் குறிப்பிடும் பொழுது தமிழ்க்கல்வியிற் பரம்பரை அல்லது குடும்பச் செல்வாக்கு நிலவியவற்றையும் சதாசிவம்பிள்ளை குறிப்பிடத் தவறவில்லை. சண்முகச் சட்டம்பியாரின் வரலாற்றைக் குறிப்பிடும் போது சதாசிவம்பிள்ளை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

இவர் "வாழையடி வாழையாகப், பிதா, பாட்டன், முப்பாட்டன் என்று மூன்று, நான்கு தலைமுறைகளாக வித்துவான்களின் வம்சத்தில் சேர்ந்தவர் (பாவலர் சரித்திரதீபம்) சிவலிங்கராஜா, எஸ்.,ப.50).

"ஆனால் வாழையடி வாழை" என்னும் தலைப்பில் 1962இல் ஒரு நூல் வெளிவந்தது. இதில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் வரலாறும் புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் வரலாறும் தரப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் தனது உரையில்

"ஈழத் தமிழகத்தோர் ஏத்தும் இருமணியாய்
வாழும் வழியறிந்து வண்கலைகள் - வாழையடி
வாழை யென வளர்க்கும் வல்லோர்"

என்று கூறியுள்ளார். ஆனால் இவர்கள் இருவரும் பரம்பரை பரம்பரையாக வந்த அறிஞர்கள் அல்ல, எனவே வாழையடி வாழை என்னும் சொற்றொடர் கொண்டுள்ள ஆழ்ந்த பொருளுக்கும் நூலின் தலைப்புக்கும் பொருத்தமில்லை.

மேலும், இதே நூலில் தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களை நோக்குவோம்.

யாழ்பாணத்திலே மாணவராக இருந்த காலத்திலே இவர் தனது கன்னி முயற்சியாக மண்டூர்ப் பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பதிகமானது பண்டிதர் மயில்வாகனனார் அவர்களது பாராட்டுதலைப் பெற்றதோடு அவரது சாற்று கவியையும் கொண்டதாயிருக்கிறது. மண்டூர்ப் பதிகம் ஏ.பெ. பிள்ளையின் இளமைப் பிராயத்தில் பாடப்பட்ட போதிலும் அஃது அருமையான படைப்பாகவே அமைந்துள்ளது. அச்செய்யுள்களில் காணப்படும் சொல்லாட்சிக்கும், பொருள் வைப்பு முறைக்கும் பின்வரும் உதாரணத்தைக் காட்டலாம் (ப.70).

விபுலாநந்த அடிகளாரில் இயல்பாக ஈடுபாடு கொண்ட குரு சீட அடிப்படையில் பிணைக்கப்பட்டவரான ஏ.பெ.பிள்ளையவர்கள் அடிகளாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதில் விருப்புடையவராவார். பெரியதம்பிப்பிள்ளையவர்கள் தமது கன்னிப் படைப்பான மண்டூர்ப் பதிகத்தைப் பாடி முடித்து அடிகளாரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார். ஏ.பெ.பிள்ளையவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். பாராட்டியதோடு அமையாது மண்டூர்ப் பதிகத்துக்கு தாமாகவே ஒரு

சாற்று கவியையும் பாடிக் கொடுத்தார்கள். அடிகளார் அளித்த அச்சாற்று கவியானது பெரியதம்பிப்பிள்ளையவர்களது ஆற்றலைப் பாராட்டிய பாட்டாகவே அமைந்திருக்கிறது. அப்பாடல் பின்வருமாறு:

"பண்டூரும் முகிற்குலங்கள் ஸமதிறைவர்
முருகர்திருப்பதிமீ தென்ன
விண்டூர் மழைபொழியும் சிறப்பதனால்
வளமலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூர் லுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையெனும் கலைவ லோனே"(ப.91)

முதலாவது கூற்றில் இளமையில் பாடப்பட்டது என்று நூலாசிரியர் கூறுவதாகவும் அடுத்த கூற்றில் அடிகளார் பெரியதம்பிப் பிள்ளையின் பாடல்களில் முதிர்ந்த அனுபவத்தைக் காண்பதாகவும் தரப்பட்டுள்ளன. இவையிரண்டும் முரண்பட்ட கூற்றுக்களாகும். முதலாவது கூற்றில் பண்டிதர் மயில்வாகனனாரின் பாராட்டுதலைப் பெற்றது என்றும் அடுத்த கூற்றில் அடிகளாரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார் என்றும் கூறுவது முரண்பாடே. மண்டூர்ப் பதிகத்துக்கு சாற்று கவி கொடுக்கும் போது மயில்வாகனனாராகவே இருந்தார். விபுலாநந்த அடிகளாக நாமம் பெறவில்லை. மேலும், இந்த இரு கூற்றுக்களுக்கும் எந்த ஆதாரமும் இல்லை. இந்த நிகழ்வு நூலாசிரியரின் முன் நிகழவும் இல்லை. ஏனெனில் இவர் பண்டிதர் மயில்வாகனனாரை ஒருபோதும் சந்தித்ததில்லை. இவை நூலாசிரியரின் கற்பனையே.

அடிகளார் அளித்த அச்சாற்று கவியானது பெரியதம்பிப்பிள்ளைய வர்களது ஆற்றலைப் பாராட்டிய பாட்டாகவே அமைந்திருக்கிறது என்று வாழையடி வாழை ஆசிரியர் கூறுகிறார். ஆனால் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் மட்டக்களப்பு சைவக்கோயில்கள் 1 (1983) என்னும் நூலில் மண்டூர்ப் பதியின் வளம் அனைத்தையும் தொகுத்தளிக்கும் இக்கவிதை விபுலாநந்த அடிகளாரால் பாடப்பெற்றது. மண்டூர்க் கவிஞர் பெருமானாகிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் 1922 ஆம் ஆண்டில் வெளியீடு செய்த மண்டூர்ப் பதிகம் என்னும் கவிதை

நூலுக்கு அடிகளார் அளித்த சிறப்புப் பாயிரமாக இக்கவிதை அமைந்து நூலை அணி செய்வது (ப.65) என்று கூறுகிறார்.

நூல் ஆசிரியர்கள் இருவரும் கவிதையின் ஒவ்வொரு அம்சத்தையே காண்கிறார்களே அல்லாது இரு அம்சங்களையும் காணவில்லை. இந்த இரு அம்சங்களும் அமைந்துள்ளமைதான் இக் கவிதையின் சிறப்பாகும்.

வாழையடி வாழை ஆசிரியர் "பாராட்டியதோடு அமையாது மண்டூர்ப் பதிகத்திற்கு தாமாகவே ஒரு சாற்றுக் கவியையும் பாடிக் கொடுத்தார்கள்" என்று கூறுகிறார். ஆனால் புலவர்மணியின் மண்டூர்ப் பதிதிகம் தொடர்பாக பண்டிதர் சைவப் புலவர் க.நல்லரத்தினம் இவ்வாறு கூறுகிறார்: "அந்தக் காலத்தில் புலவர்மணி அவர்கள் மண்டூர் முருகப் பெருமான் பெயரில் ஒரு திருப்பதிகம் பாடினார். அந்தப் பதிகத்திற்கு ஒரு சிறப்புப் பாயிரம் தருமாறு தமது குருவாகிய விபுலானந்த அடிகளாரை புலவர்மணி வேண்டிக்கொண்டார். அவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அடிகள் அப்பதிகத்திற்கு சிறப்புப் பாயிரமாக ஒரு பாடலை யாத்து உதவினார்" (சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா நினைவு மலர்,ப.60-61).

இந்த இரண்டு கூற்றுக்களும் முரண்பட்டவை. இந்தக் கூற்றுக்கள் எதற்கும் சான்று இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தமது கற்பனையில் எழுந்த கூற்றுக்களைத் திணிக்க முயல்கிறார்கள்.

மண்டூர்ப் பதிகத்தைப் பாடிய புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தனது உள்ளதும் நல்லதும் எனும் நூலில் கூறுவதை நோக்குவோம்.

மண்டூர் முருகன் திருமுன்னே ஒரு தனி வெண்பாவாக அரும்பிய எனது கவிப்புலமை நாளடைவில் ஒரு சிறு பிரபந்தமாக மலர்ச்சியடைந்தது. அதுதான் முதல் நான் இயற்றிய மண்டூர்ப் பதிகம் மயில்வாகனனாரின் சிறப்புப் பாயிரத்தால் அது மக்களிடையே ஒரு மதிப்பைப் பெற்றது (உள்ளதும் நல்லதும் ப.45). இங்கு தாமாக பாயிரம் கொடுத்தார் என்றும் அல்லது வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப பாயிரம் பாடினார் என்றும் குறிப்பிடப்பெறவில்லை.

**பரம்பரை பற்றிய ஆய்வு**

இலக்கண, இலக்கிய அறிவு, வைத்தியம், இசை, சோதிடம் போன்ற சிறப்பான திறன்கள் பரம்பரையாக வந்துள்ள தன்மையை வாழையடி வாழை என்னும் சொற்றொடர் குறிக்கின்றது. வாழை ஒரு சிறப்பான தாவரமாகும். சந்ததி சந்ததியாக குறுகிய காலத்தில் பயன் கொடுக்கும் தாவரமாகும். எனவே வாழையடி வாழை ஆழ்ந்த பொருளைக் கொடுத்து நிற்கும் சொற்றொடராகும்.

பரம்பரை பரம்பரையாக அறிஞர்கள் தோன்றுகின்றார்களா என்பதை இங்கிலாந்தைச் சேர்ந்த பிரான்சிஸ் கோல்டன் (Francis golton) என்ற அறிஞர் 1865 தொடக்கம் ஆராய்ந்து தனது ஆராய்ச்சி முடிவுகளை 1869 ஆம் ஆண்டு ஹெடிரிற்றறி ஜீனியஸ் (Hereditary genius) எனும் நூலாக வெளியிட்டார். இந்த நூலில் பரம்பரையாகத் தொடர்ந்து பிரகாசித்த அறிஞர்கள் பற்றியும் அவர்களின் பங்களிப்பு பற்றியும் தொகுத்துக் கூறியுள்ளார். புள்ளி விபர அடிப்படையில் ஆய்வுகளைச் செய்வதற்கு இவர்தான் முன்னோடி என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு தமிழ்ச்சங்கம் 1998 இல் வெளியிட்ட தமிழ்தந்த புலவர்மணி என்ற நூலில் "வாழையடி வாழை" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை இடம்பெற்றது. ஆசிரியரே இக்கட்டுரையை எழுதியுள்ளார்.

கவிதை புனையும் ஆற்றலிலும் கணபதிப்பிள்ளை அவர்களும் பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் சிறந்த புலவர்களாய் விளங்கு கின்றார்கள், கட்டுரை இவ்வாறு முடிகிறது.

உரைநடை இலக்கியத்தில் அதிகமாக ஈடுபட்டு கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப்பணியாற்றி வருகின்றாரோ அவ்வாறான பணிகளை செய்யுள் இலக்கியத்தின் மூலம் பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் செய்து வருகின்றார்.

அதாவது இருவரும் கவிதை புனையும் புலவர்களாக ஆரம்பித்து ஒருவர் உரைநடை இலக்கியத்திற்கும் மற்றயவர் செய்யுள் இலக்கியத்திற்கும் பணியாற்றுகின்றனர். இங்கு வாழையடி வாழையாக இப்பணிகள் தொடர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

இதே கட்டுரையிலும் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள முரண்பாடான இரு கூற்றுக்களும் இடம்பெறுகின்றன. ஆனால் "பிள்ளையெனும்

கலை வல்லானே" என்பது "பிள்ளையெனும் கவி வல்லானே" என்று தரப்பட்டுள்ளது.

இதே நூலாசிரியர் 2010 இல் உள்ளக் கமலம் எனும் தலைப்பில் வெளியிட்ட நூலில் "வாழையடி வாழை" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளார். இவ்வாறு இக்கட்டுரை ஆரம்பிக்கிறது: "ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஆழமான பதிவுகளை ஏற்படுத்திச் சென்ற சான்றோர்களுள் ஆறுமுகநாவலர் அவர்களும் விபுலாநந்த வித்தகர் அவர்களும் குறிப்பிட வேண்டிய தனி இடம் பெறுகிறார்கள். நாவலர் அவர்கள் 1822 இல் அவதரித்து 57 ஆண்டுகள் வாழ்ந்து 1879 இல் இறைவனடி சேர்ந்தவர். வித்தகர் அவர்கள் 1892 இல் அவதரித்து 55 ஆண்டுகள் வாழ்ந்து 1947 இல் இறைவனடி சேர்ந்தவர். இவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இலக்கியப் பணி வாழையடி வாழைகளான சான்றோர்களால் முன்னெடுத்துச் செல்வதைக் காண்கின்றோம் இவ்வாறான வாழையடி வாழைகள் இருவரைப்பற்றிப் பார்ப்போம். ஒருவர் நாவலர் அவர்களின் வாழையடி வாழையான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். மற்றவர் வித்தகர் அவர்களின் வாழையடி வாழையான புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் (ப.4).

இங்கேயும் வாழையடி வாழை எனும் சொற்றொடர் பொருத்தமானதாகக் கையாளப்படவில்லை. மேலும் இந்நூலில் இவ்வாறு கூறப்படுகின்றது:

"திருகோணமலை இந்துக்கல்லூரியில் விபுலாநந்த அடிகளாரிடம் பணியாற்றி வந்த புலவர்மணி அடிகளார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்துக் கல்லூரியிலிருந்து விலகி மட்டக்களப்பு தூய அகஸ்தினார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார் (ப.10).

ஆனால், வாழையடி வாழை (1962) என்னும் நூலில் விபுலாநந்த அடிகளாரால் இராமகிருஸ்ண சங்கத்தின் சார்பில் பொறுப்பேற்கப்பட்ட திருகோணமலை இந்துக்கல்லூரியின் தமிழாசான் பதவியை பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் 1926 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்டார். இதன் பின்னர் மட்டக்களப்பு அர்ச் அகஸ்தீன் ஆசிரிய கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராய் கடமையாற்ற வேண்டிய சந்தர்ப்பம் இவருக்கு ஏற்பட்டது

(ப.40-41) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புலவர்மணியோ, திருகோணமலை இந்துக்கல்லூரியை விட்டு மட்டக்களப்பிற்குச் சென்ற நிகழ்வைத்தான் இவ்வாறு கூறுகிறார்:

"1930 ஆம் ஆண்டு திருகோணமலையை விட்டு மட்டக்களப்புக்கு வந்துவிட்டேன். வரும்போது என் குருவின் ஆசியைப் பெறவில்லை. அவரது ஆணையையும் மீறி வந்துவிட்டேன். சில அன்பர்களின் தூண்டுதலும் எனது விருப்பமுமே இதற்குக் காரணம்" (உள்ளதும் நல்லதும், ப.131).

எனவே, நூலாசிரியர் ஆதாரங்கள் ஏதும் இன்றி தனது சொந்தக் கருத்தைத் திணிக்க முற்படுகிறார். இவ்வாறான செயல்கள் சந்ததி சந்ததியாக பிழையான தகவல்கள பரவுவதற்கு வாய்ப்பளிக்கும்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் சிலவற்றை நோக்குவோம்.

புலவர்மணியின் பிறந்த திகதியை சிலர் வெவ்வேறு விதமாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மட்டக்களப்புத் தமிழகம் என்னும் நூலில் (1964) புலவர்மணி ஏகாம்பரப்பிள்ளை என்பாரின் மூத்த மகனாய் விளம்பி வருடம் மார்கழி மாதம் 25ஆம் திகதி (18.12.1899) பிறந்து, செல்வமாக வளர்ந்து இளமையிலே குருகுல முறைப்படி தமிழ் இலக்கியம், இலக்கணம், நிகண்டு என்பவற்றைக் கற்றுக் கொண்டார் என்று தரப்பட்டுள்ளது (ப.260).

போரதீவுப் பற்று கலாசாரப் பேரவை வெளியிட்ட மருதம் (1998) என்னும் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையில்,

"ஏகாம்பரம் பிள்ளையவர்களுக்கும் சின்னத்தங்கம் அவர்களுக்கும் தலைமகனாக 1899ஆம் ஆண்டு தைத்திங்கள் 8ஆம் திகதி பிறந்தார்" ஏன்று தரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வு ஏட்டின் நூல் வடிவமான "புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை – ஓர் ஆய்வு என்னும் நூலில் புலவர்மணி 1889 ஆம் ஆண்டு தை மாதம் 8ஆம் திகதி பிறந்தார் (ப.54) என்று தரப்பட்டுள்ளது.

கார்த்திகை 2008இல் வெளிவந்த செங்கதிர் என்னும் சஞ்சிகையில் புலவர்மணியின் வாழ்க்கை 08.01.1889 – 02.11.1978 என்று புலவர்மணியின் படத்தோடு வெளியிடப்பட்டுள்ளது. இதே சஞ்சிகையில் 'புலவர்மணியின் தமிழ்த் தொண்டு' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள முதலாம் பரிசு பெற்ற கட்டுரையில் "புலவர்மணியவர்கள் ஈழத்து மண்டூர் எனும் கிராமத்தில் 1889ஆம் ஆண்டு பிறந்தார்." என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வாழ்வியல் தடங்களில் ஆசிரியர் சிரோன்மணி தம்பிப்பிள்ளை செல்வநாயகம் (2010) எனும் நூலில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: "புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மட்டக்களப்பில் பழம்பெரும் பதிகளில் ஒன்றான மண்டூரில் 08.01.1889ஆம் ஆண்டு ஏகாம்பரம்பிள்ளை என்பவருக்கும் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர் (ப.116). இதே நூலில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது:

"தமிழ்க் கடவுள் முருகன். அம்முருகனின் தொண்டனாக தரும கர்தாவாக வண்ணகராக விளங்கிய சோமநாதர் வண்ணகரின் மகன் ஏகாம்பரப் பிள்ளை அவர்களுக்கும் சிதம்பரப்பிள்ளை வண்ணக்கரின் மகள் சின்னத்தங்கம் அம்மையாருக்கும் சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சீர் சிறப்புடன் வாழ்ந்த இலட்சியத் தம்பதிகள் வாழ்வில் முகிழ்ந்த மூத்த புதல்வனே பெரியதம்பி. இது நிகழ்ந்தது 1899 சரியான விளம்பி வருடம் தை மாதம் 08ஆம் திகதியாகும் (ப.174).

புலவர்மணியோ தனது பிறப்பை இவ்வாறு கூறுகிறார். நான் அங்கிருந்து 1899ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதியன்று.... வந்துள்ளேன் (உள்ளதும் நல்லதும் - ப.3).

அதாவது புலவர்மணி 1899ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08ஆம் திகதி பிறந்தார் என்றோ அல்லது 08.01.1899 ஆந் திகதி பிறந்தார் என்றோ எழுதுவதுதான் தெளிவான சரியான கூற்றாகும்.

"புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை – ஓர் ஆய்வு" என்ற நூலில் வாழையடி வாழை (1962), தமிழ் தந்த புலவர்மணி (1998) ஆகியவற்றில் இடம்பெற்ற முரண்பாடான இரு கூற்றுக்களும் இடம் பெறுகின்றன. ஏற்கனவே வெளிவந்த கூற்றை வேறொருவர் தமது கூற்றுப் போலவே தந்தால் அது இலக்கியத் திருட்டாகக் கருதப்படுகின்றது.

புலவர்மணி முதல் பாடிய பதிகம் மண்டூர்ப் பதிகம் ஆகும். இவர் யாழ்ப்பாணத்திலே மாணவராக இருந்த காலத்திலே இவர் தனது கன்னி முயற்சியாக மண்டூர்ப் பதிகத்தைப் பாடியுள்ளார். இப்பதிகம் புலவர்மணியின் இளமைப் பிராயத்தில் பாடபட்ட போதிலும் அது சிறப்பான படைப்பாகவே அமைந்துள்ளது. அது சிறந்த சொல்லாட்சி யையும், சிறந்த பொருள் வைப்பு முறையையும் கொண்டது (186).

விபுலாநந்த அடிகளாரில் இயல்பாக ஈடுபாடு கொண்டு குரு சீட அடிப்படையில் பிணைக்கப்பட்டவரான ஏ.பெ.பிள்ளையவர்கள் அடிகளாரின் அடிச் சுவட்டைப் பின்பற்றுவதில் விருப்புடையவராவர். பெரியதம்பிப் பிள்ளையவர்கள் தமது கன்னிப் படைப்பான மண்டூர்ப் பதிகத்தைப் பாடி முடித்து அடிகளாரிடம் கொடுத்து அபிப்பிராயம் கேட்டார். ஏ.பெ.பிள்ளையவர்களின் பாடல்களில் காணப்பட்ட முதிர்ந்த அனுபவத்தினையும் சிறந்த சொல்லாட்சியையும் பார்த்த அடிகளார் பெரிதும் மகிழ்ந்தார்கள். ஏ.பெ.பிள்ளையவர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். பாராட்டியதோடு அமையாது மண்டூர்ப் பதிகத்திற்கு தாமாகவே ஒரு சாற்றுக் கவியையும் பாடிக்கொடுத்தார்கள்.அடிகளார் அளித்த அச்சாற்றுக் கவியானது பெரிய தம்பிப் பிள்ளை அவர்களது ஆற்றலை பாராட்டிய பாட்டாகவே அமைந்திருக்கின்றது.

"மண்டூரும் முகிற்குலங்கள் எமதிறைவர்
முருகர் திருப்பதிமீ தென்ன
விண்டூர் மழைபொழியும் சிறப்பதனால்
வனம் மலிந்து மிகுந்து தோன்றும்
மண்டூர் லுறைமுருகன் மலரடிக்கோர்
திருப்பதிகம் மரபிற் சொற்றான்
கண்டூரு மினியமொழிப் பெரியதம்பிப்
பிள்ளையெனும் கவிவல் லோனே"(ப.189)

இங்கே பண்டூரும் என்பதை மண்டூரும் என்றும், வளம் மிகுந்து தோன்றும் என்பதை வனம் மிகுந்து தோன்றும் என்றும், கலை வல்லோனே என்பதை கவி வல்லோனே என்றும் பிழையாகத் தரப்பட்டுள்ளது.

• • •

## பல்துறைப் பேரறிஞர் சுவாமி விபுலாநந்தர் அவர்களும் அவரது தமிழ் ஆராய்ச்சியும்

கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1892 ஆம் ஆண்டு பிறந்து மயில்வாகனம் என்னும் பெயரில் ஆசிரியராகப் பணியாற்றி சர்வ மதங்களையும் போற்றும் இராமகிருஷ்ண சங்கத் துறவியான சுவாமி விபுலாநந்தர், பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர். மதுரைத் தமிழ்ச்சங்க தமிழ்ப் பண்டிதர். லண்டன் பல்கலைக்கழகத்து விஞ்ஞானப் பட்டதாரி. இவற்றுக்கு மேலாக சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்க மொழிகளில் விற்பன்னர். மேலும், சிங்களம், மலையாளம், அரேபிய மொழிகளையும் அறிந்திருந்தவர். இவ்வகையாகப் பல்துறைகளிலோ, அல்லது ஒரு துறையிலோ அபூர்வ பாண்டித்தியம் பெற்றவர்களை 'ஜீனியஸ்' (Genius) என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவதுண்டு. தமிழில் 'மேதை' என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொற்கள் சரியாக வரையறுக்கப்படவில்லை எனினும் ஒரு துறையிலோ அல்லது பல துறைகளிலோ அபூர்வ பாண்டித்தியம் பெற்றவரைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது.

"There is no scientifically precise definition of genius, and indeed the question of whether the notion itself has any real meaning has long been a subject of debate. The term is used in various ways: to refer to a particular aspect of an individual, or the individual in their entirety; to a scholar in many subjects"

தத்துவஞானி பேட்றள் றசலின் (Bertrand Russell) கருத்துப்படி "ஒரு தனிமனிதன் அபூர்வ பண்புகளையும் திறமைகளையும் பெற்று தான் இயங்கும் சமூகத்துக்குப் பெறுமதி மிக்கவனாயின் அவன் மேதை (genius)".

(In the philosophy of Bertrand Russell, genius entails that an individual possesses unique qualities and talents that make the genius especially valuable to the society in which he or she operates).

மேதைத் தன்மையை லீவிஸ் ரேர்மன் (Lewis Terman), லேற்றா ஹொலிங்உவேத் (Leta Hollingworth) என்னும் உளவியலாளர்கள் 'ஜீனியஸ்ஸை' நுண்மதி ஈவுடன் இணைக்கிறார்கள். அதாவது ரேர்மன் என்பவர் E-140 இற்கு மேல் அமைபவர் 'ஜீனியஸ்' என்றும், ஹொலிங்உவேத் E-180 இற்கு மேல் அமைபவர் 'ஜீனியஸ்' என்றும் கருதுகின்றார்கள். எவ்வாறாயிருப்பினும் சுவாமி விபுலாநந்தர் அபூர்வ பல்துறை அறிவு பெற்றவர். செயல்களைத் தூரநோக்கோடு நோக்கியவர். இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் சரளமாகப் பேசவும், வாசிக்கவும், எழுதவும் திறமை பெற்றவர். எடின்பரா (Edinburgh) பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இருந்து இரண்டோ அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் திறமை பெற்றவர்கள் கூடிய மூளை விருத்தியும் நுண்ணறிவு வருத்தியும் அடைகின்றார்கள் என்று தெரியவருகின்றது.

"Researches from the university of Edinburgh found people who spoke two or more languages had significantly better cognitive skills later in life".

"The findings indicate that those who spoke two or more languages had significantly better cognitive abilities compared to what would have been expected from their baseline test".

இவ்வாறான பின்னணியில் மீத்திறமை பெற்ற சுவாமி விபுலாநந்தர் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் எடுத்துரைக்கப்பெற்ற ஆழ்ந்த கருத்துக்களை, உண்மைகளை சமஸ்கிருதம், ஆங்கிலம், லத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகள் கூறும் கருத்துக்களோடும் மேற்கே வளர்ந்துள்ள விஞ்ஞானத்தோடும், கணிதத்தோடும் இணைத்து ஒப்பிட்டு ஆய்வு செய்ய முற்பட்டார். இவரது ஆய்வுமுறை தற்கால விஞ்ஞான அடிப்படையில் அமைந்துள்ள ஆய்வு முறைக்கு ஏற்பப் பல துறைகளில்

பெற்ற அறிவின் பின்னணியில் அமைந்திருந்தமையால் ஈடு இணையற்ற ஆய்வு முறையாகவும், உரிய சான்றுகளோடு பெறப்பட்ட முடிவாகவும் அமைந்துள்ளது.

பண்டைய தமிழ் நூல்களில் பழமை வாய்ந்தது தொல்காப்பியம். இதில் அமைந்துள்ள நாடகம் தொடர்பான கூற்றுக்கள் இவரைக் கவர்ந்தன. இவற்றோடு தண்டியலங்காரம், சிலப்பதிகாரம், அகனானூறு, புறனானூறு முதலிய நூல்களிலே கூறப்பெற்ற நாடகம் தொடர்பான கூற்றுக்களையும் சமஸ்கிருதத்திலும் ஆங்கிலத்திலும் கிரேக்க மொழியிலும் உள்ள கருத்துக்களையும் ஆராய்ந்து மதங்கசூளாமணி என்னும் நூலை 1926 அம் ஆண்டு வெளியிட்டார். இந்த நூலில் இவ்வாறு கூறுகின்றார்:

"திருமலி யுலகினிற் புலவராற் பாடுதற்கமைந்த இருவகை வழக்கினை ஆராயப்புகுந்த இவ்வாராய்ச்சியினை உறுப்பியல், எடுத்துக்காட்டியல், ஒழிபியல் என மூன்று இயலாக எடுத்துக் கொள்ளலாம்".

இவ்வாறு ஆரம்பித்த அடிகளார் தமிழில் ஒன்பது சுவைகள் உண்டு என்றும் இவை வீரம், அச்சம், விழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத்திரம் ஆகியவையென்றும் குறிப்பிடுகின்றார். இவற்றில் இன்பம், நகை, வியப்பு ஆகியன அகத்திணை சார்ந்தன என்றும் இவற்றை மேனாட்டார் 'கொமெடி' (comedy) என்று அழைப்பதாகவும் குறிப்பிடுகின்றார். இதற்குச் சான்றாக சேக்ஷ்பியரின் நாடகங்களை மொழிபெயர்த்தும் காட்டியுள்ளார். புறத்திணையைச் சேர்ந்த வீரம், அச்சம், அற்புதம், அவலம், உருத்திரம் ஆகிய ஐந்து சுவைகளை விளங்கவைக்கும் நாடகங்களை 'றஜடி' (tragedy) என்று மேனாட்டார் அழைப்பதாகவும் அதற்குச் சான்றாக றோமியோவும் ஜூலியற்றும் என்னும் ஷேக்ஸ்பியரின் நாடகத்தையும் தமிழில் மொழிபெயர்த்து வழங்கியுள்ளார்.

பண்டைய தமிழர் மத்தியில் பதினொரு ஆடல்கள் இருந்தனவென்றும் இவற்றின் இலக்கணம் சிலப்பதிகாரத்தில் கடலாடு காதையில் காணப்படுகின்றது என்றும் கடலாடு காதை 'மாயோன் பாணியும் வருணப் பூதர் நால்வகைப் பாணியும்' என்று சொல்கின்றது என்றும் தனது ஆய்வில் எடுத்தாண்டுள்ளார்.

நாடகத் தமிழ் ஆய்வை மதங்கசூளாமணி என்னும் நூலாக வெளியிட்ட பின் இசைத்தமிழ் தொடர்பான ஆய்வில் நாட்டம் கொண்டார். இசைத்தமிழ் ஆராய்ச்சி பற்றிக் கூறும்போது "இசை எல்லா நாட்டிற்கும் பொதுவாதலின் மேனாட்டாரது இசைக்கிரமங்களைக்கூடப் பன்னிரு பாலையினுள்ளே காட்டலாம். மேனாட்டுப் பியானோ வாத்தியத்தை முறைப்படி இசை கூட்டினால் அதில் பழந்தமிழ்ப் பண்களை வாசித்தல் கூடும். தமிழர் மத்தியில் முழவு என்ற தோல் கருவியும் குழல் என்ற துளைக் கருவியும் யாழ் என்ற நரம்புக் கருவியும் இசைக்கப்பட்டன என்றும் இவை ஒருங்கிசைத்து இசைக்கப்படும்போது 'ஆமந்திரிகை' என்பது மேனாட்டார் கையாளும் ஒக்கெஸ்றாவைக் (Ochestra) குறிக்கும் என்றும் கூறியுள்ளார். மூன்று வகையான இசைக்கருவிகள் பற்றி ஆராய முற்பட்ட இவர் யாழ் பற்றிய ஆய்விலேயே முதலில் ஈடுபட்டார். இந்த ஆய்வு நூலுருப்பெற்று 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் அரங்கேறப்பெற்றது.

விபுலாநந்தரின் யாழ் ஆராய்ச்சியில் கூறப்படும் ஆய்வு முடிபுகளை நோக்குவோம். மிகப் பழைய காலத்தில் தோன்றிய யாழ் வில்யாழ் ஆகும். இது ஏழு நரம்புகளைக் கொண்டிருந்ததென பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. இதன்பின் இருபத்தொரு நரம்புகளைக் கொண்ட பேரியாழ் தோன்றியது. ஏழு நரம்புகள் ஒரு தானமாதலால் பேரியாழிலே மூன்று தானங்கள் உள்ளன. ஏழு சுரங்களின் கூட்டத்தை இக்காலத்தார் ஒரு ஸ்தாயி என்பர். மந்தரஸ்தாயி, மத்தியஸ்தாயி, தாரஸ்தாயி என இக்காலத்திலே வழங்குவனவற்றை பண்டைய தமிழர்கள் மெலிவுத்தாம், சமஸ்தானம், வலிவுத்தானம் எனக் கையாண்டனர். பேரியாழின் ஒவ்வொரு தானத்திலும் உள்ள நரம்பு களும் கமபதநிசரி என்னும் முறையாக நின்றன. பேரியாழின் பின் சீறியாழ் தோன்றியது. இது செங்கோட்டு யாழ் எனவும் வழங்கியது. ஆசிய மாலையின் கூற்றுப்படி இதற்கு ஒன்பது நரம்புகள் இருந்தன. வில்யாழும் பேரியாழும் சீறியாழும் சங்கத் தமிழ் நூல்களில் கூறப்படுவன. சிலப் பதிகார, மணிமேகலை காலத்தில் அதாவது இற்றைக்கு 1800 ஆண்டு களுக்கு முன் சகோடயாழ், மகர யாழ் என வேறு இரு யாழ்கள் இருந்ததாக அறிகின்றோம். சிலப்பதிகார அரங்கேற்று காதையில் குறிப்பிடப்படுவது சகோடயாழ். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த யாழ்ப்பாண நாயனார்

கையில் இருந்தது சகோடயாழ். சகோடயாழின் நரம்புகள் பதினான்னு. மகர யாழின் நரம்புகள் பத்தொன்பது அல்லது பதினேழு.

ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் களிகூருகின்ற இன்ப விளையாடலினுள்ளே உபயோகிக்கப்படுவதாதலின் மகர யாழ் கண்ணுக்கினிய அழகிய தோற்றத்தினை உடையதாய் இருந்தது. சிலப்பதிகார கானல்வரிப் பாடலிலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

"சித்திரப் படத்துட்புக்கு செழுங்கோட்டின் மலர்புனைந்து மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்திப் பத்தருங்கோடும் ஆணியும் நரம்பும் என்று இத்திறத்துக் குற்ற நீங்கிய யாழ்"

அதாவது, மகரயாழ் மணப்பெண்போல் அழகாய் அமைந்திருந்தது என்று அறியக் கிடக்கின்றது. உதயண காவியத்தினுள்ளே உதயணன் கையிலே கோடபதி என்னும் யாழ் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்த இசையின் உதவியினாலே உதயணன் யானையை வசப்படுத்தினான் என்று கூறப்படுகின்றது.

அதாவது பண்டைய தமிழ் மக்களின் இசைத்திறன் மனிதர்களை மட்டுமல்லாது மிருகங்களையும் உருக வைத்தது என்னும் உண்மையை இவரது ஆய்வு எடுத்துக்காட்டியுள்ளது.

தற்கால விஞ்ஞானத்தில் பௌதீகவியல் ஒலி பற்றிய பிரிவு உண்டு. நரம்புகள் எழுப்பும் ஓசை எவ்வாறு இழுவிசைக்கு ஏற்றவாறு வேறுபடுகின்றது என்று கூறப்பெற்றுள்ளது. இந்தத் தற்கால விஞ்ஞான, கணித கருத்துக்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களிலே காணப்படுவதை எடுத்துக் காட்டிய விபுலாநந்தர் பண்டைய தமிழர் கண்ட ஆயிரம் நரம்புள்ள யாழ் கருவியையும் அமைத்து அதை இசை வல்லுநரால் இசைத்துக் காட்டவும் செய்தார்.

விபுலாநந்தரின் தமிழ் ஆய்வைத் தொகுத்து நோக்கினால் ஐயாயிரம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையான தமிழ் மக்களின் நாடகத் திறனையும் இசைத் திறனையும் தற்கால விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளிலும் உள்ள உயரிய உண்மைகளையும் இணைத்து ஏற்ற எடுத்துக்காட்டுகளோடு தொகுத்தளித்த ஒப்பரிய ஆய்வுதான் விபுலாநந்தரின் தமிழ் ஆய்வு என்பது புலப்படுகின்றது. இந்த

ஆய்வுகளுக்கு அடிப்படையாய் உறுதுணையாய் அமைந்துள்ளன அவரது ஆழ்ந்த பரந்த தமிழ் அறிவு, ஆங்கில அறிவு, விஞ்ஞான, கணித அறிவு, பன்மொழி அறிவு என்று கூறலாம் இவ்வாறு பிரமிக்கத்தக்க பல்துறை அறிவு பெற்ற சுவாமி அவர்கள் சமூகத்தின் நலனுக்காகவும் பெருமைக்காகவும் வாழ்ந்து தமது ஆராய்ச்சிச் செல்வங்களை எமக்கு இட்டுச்சென்றுள்ளார்.

**உசாத்துணை:**


1. கமலநாதன்,சா.இ., (1992) (தொகுப்பாசிரியர்), சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர், மட்டக்களப்பு: மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர் குழு.
2. விபுலாநந்தர், சுவாமி (1947), யாழ்நூல், கரந்தை: கரந்தை தமிழ்ச் சங்கம்
3. விபுலாநந்தர், சுவாமி (1926), மதங்கசூளாமணி, மதுரை: மதுரைத் தமிழ்ச் சங்கம்விபுலாநந்தர் நூற்றாண்டு நினைவு மலர் குழு.


• • •

# கற்றலில் அடிப்படைத் திறன்கள் விருத்தி மட்டமும் உயர் கணித விருத்தியும்

**உ**ங்களின் மாணவர்களின் அடிப்படைக் கணிதத் திறனில் உங்களுக்குத் திருப்தி உண்டா? என்ற கேள்வியை எழுப்பி அதற்குக் கிடைத்த விடைகளைப் பகுப்பாய்வு செய்துள்ளார் பேராசிரியர் விக்ரர். இந்த ஆய்வில் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள 194 ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள்.

இந்த வினாவுக்கு ஆம் என்று 22 பேரும் அதாவது 11.3% ஆனவர்களும் இல்லை என்று 172 பேரும் அதாவது 88.7% ஆனவர்களும் கருத்தைத் தெரிவித்திருந்தார்கள்.

இவரது ஆய்வில் பங்குபற்றியோரால் பலவகையான கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவர்களில் சிலரின் கருத்துக்களை நோக்குவோம்:

டேவிட் பிரஞ் என்பவர் தான் ஒரு சமுதாயக் கல்லூரியில் கணிதம் கற்பிப்பதாகவும் கடந்த 15 ஆண்டுகளில் கல்லூரியில் கற்று வரும் 18-19 வயது மாணவர் மத்தியில் அடிப்படைக் கணித அறிவு குறைந்து வருவதை அவதானித்துள்ளார் எனவும் இவர்களுக்கு நூற்றுவீதம் பற்றிய அறிவுகூட இல்லாது போய்விடுகின்றது என்றும் கூறியுள்ளார்.

எட்டாந் தரத்தில் கல்வி கற்பிக்கும் லோறா டெல்காடோ கருத்துத் தெரிவிக்கையில் பின்னம் என்பது முழுவதின் பகுதி என்பது விளங்காத மாணவர்கள் வகுப்பில் இருக்கிறார்கள் என்றார்.

பலதரப்பட்ட மாணவர்களுக்கு பிரத்தியேக ஆசிரியராகப் பணிபுரியும் ஜெசி றமே தாம் கற்பிக்கும் மாணவர்களுக்கு பின்னம், பெருக்கல், வகுத்தல் தொடர்பான அறிவு குறைவாக இருக்கின்றது. ஆறாம், ஏழாம் தர மாணவர்களில் மாத்திரமல்ல உயர்வகுப்பு மாணவர்களிடத்திலும் இக்குறை காணப்படுகின்றது என்று கூறியுள்ளார்.

மாணவர்கள் தாமே கண்டுபிடித்தல் வேண்டும் என்பதைக் கற்பித்தலில் அழுத்துவதால் ஆரம்பக் கல்வி நிலையில் கணித அடிப்படைத் திறன்களின் விருத்தி புறக்கணிக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்வி மட்டத்தில் கணித அடிப்படைத் திறன்கள் விருத்தி செய்யப்பட்டாலேதான் உயர் கணிதச் செயற்பாடுகளில் மேலோங்கிச் செல்லலாம் என ஜோய் மக்கற்சியன் தெரிவித்துள்ளார்.

மற் டறா என்பவர் இவ்வாறு தெரிவிக்கின்றார்: “உயர்தரப் பாடசாலையில் பௌதீகவியல் கற்பிப்பவன் நான். அடிப்படைக் கணிதத் திறன் இல்லாதவர்கள் உயர்தரப் பாடசாலையில் பௌதீகம் கற்க முனைவது கேலிக்குரியதாகும். ஒரு மாணவனிடம் 10X1 எவ்வளவு என்று கேட்ட போது அந்த மாணவன் கணிப்பானை எடுத்தது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. உண்மையில் எனக்கு நேரம் இருந்தால் மாணவர்களுக்குப் பௌதீகவியலோடு அடிப்படைக் கணிதம் மாத்திரமல்ல வாசிக்கவும் கற்பிப்பேன். உண்மையான ஆசிரியர் இவ்வாறுதான் செயற்படவேண்டும்”.

மாணவி ஒருவரின் தாய் தனது மகள் நல்ல கெட்டிக்காரி என்றும் ஆனால் ஒரு தனியார் பாடசாலையில் இருந்து தன் மகளை விலக்கி வேறு பாடசாலையில் சேர்த்து அவளது கல்வியைத் தொடர்ந்ததாகவும் கூறியுள்ளார். அந்தப் பாடசாலை கணித அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யவில்லை என்றும் கணிப்பான்களைப் பயன்படுத்துவதில்லை என்றும் கூட்டுவதற்கு கைவிரல்களை உபயோகிக்கத் தூண்டுவதாகவும் குறை கூறினார். இக்காரணங்களுக்காக வேறு பாடசாலையில் தனது மகளைச் சேர்த்ததாகவும் அவள் கல்வியில் முன்னேறித் தற்போது மருத்துவக் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜோன்ஸ் என்ற ஆசிரியர் இவ்வாறு கூறினார்: “கணித அடிப்படைத் திறன்கள் என்றால் என்ன என்று தெளிவாக விளங்க வேண்டும். உதாரண

மாகப் பெருக்கல் திறன் இருந்தாலேயே அட்சரகணித செயற்பாடுகளில் முன்னேறிச் செல்லலாம். எல்லாப் பாடங்களைப்போல் அடி அத்திவாரம் திடமாக இருந்தாலேயே உயரமான கட்டடங்களைக் கட்டி எழுப்பலாம். இதுதான் என் கதை. இதை நான் கடைப்பிடிக்கின்றேன்".

ஆய்வின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்காவின் நிலை இவ்வாறு இருக்கின்றது என்றால், எல்லா மாணவர்களும் இவ்வாறு கணித அடிப்படைத் திறன் இல்லாது இருக்கிறார்கள் என்று கருத முடியாது. சகலருக்கும் தரமான கல்வி கிடைக்கவில்லை என்பதையே இந்த ஆய்வு எடுத்துக் காட்டுகின்றது. மேலும் பல சாதனை படைத்தவர்கள் இருப்பினும் கல்வியில் புறக்கணிக்கப்பட்ட சாராரும் உண்டு என்பதும் புலனாகின்றது.

அமெரிக்க ஆய்வு இவ்வாறு இருக்க நமது நாட்டின் கணித அடிப்படைத் திறன் எவ்வாறு இருக்கின்றது என்று நோக்கலாம்.

அண்மையில் கல்வி அதிகாரி ஒருவர் ஒரு பாடசாலைக்குச் சென்று கல்விப் பொதுத் தராதர வகுப்புக்குக் கணிதம் கற்பிக்கும் ஆசிரியரிடம் இந்த ஆண்டு எத்தனைபேர் கணிதத்தில் சித்தியடைவார்கள் என்று எதிர்பார்க்கின்றீர்கள் என்று கேட்டாராம். ஆசிரியர் சிறிது சிந்தித்து இரண்டு பேர் என்று விடை கூறினாராம். வகுப்பில் இரண்டுபேர்தானா இருக்கின்றார்கள் என்று கேட்டாராம் அதிகாரி. இல்லை 40 பேர் என்றாராம் ஆசிரியர். ஆச்சரியம் அடைந்த அதிகாரி ஏன் கணிதத்தில் இவ்வாறான பின்னடைவு என்று கேட்டதற்கு அவர்களுக்கு எழுத வாசிக்கத் தெரியாது என்று விடையளித்தாராம் ஆசிரியர். கணித ஆசிரியர் பிழையை மொழி ஆசிரியர்பால் திருப்பினாலும் இலங்கைப் பாடசாலைகளைப் பொறுத்த மட்டில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் பிரச்சினை உண்டு.

"மொழி அறிவின் குறைபாட்டால் கணித அறிவு விருத்தி பாதிக்கப்படுகின்றது" என்னும் தலைப்பில் நானும் போட்சுவானா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மவுட்லே அவர்களும் ஆய்வு உதவியாளர் மீலா அவர்களும் ஆய்வு நடத்தி மொசாம்பிக் நாட்டில் யுனெஸ்கோவின் அனுசரணையில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் சமர்ப்பித்த ஆய்வறிக்கை மொழித் திறன் குறைவால் கணிதத் திறன் பாதிக்கப்படுகின்றது என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

நமது நாட்டில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சையில் கணிதத்தில் சித்தியடையாதவர்களும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் சேர்ந்து படிக்கலாம் என்றும் உயர்தரப் பரீட்சைக்கு முன் சித்தியடைய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து நமது நாட்டில் கல்வி பொதுத்தராதரப் பத்திர சாதாரணப் பரீட்சையில் கணிதத்தில் சித்தியடையாதவர்கள் தொகை கணிசமாக இருக்கின்றது என்பது புலனாகின்றது.

மேலும், சித்தி என்பதும் விவாதத்திற்குரிய கருத்தைக் கொடுக்கும் பதமாகும். அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளில் மாத்திரமல்லாது ஆபிரிக்க நாடுகளிலும் பரீட்சைக்குரிய சித்திப் புள்ளி 50 இற்கு மேலாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இலங்கையில் சித்திப் புள்ளி 50 இற்குக் குறைவாகவே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஐந்தாந்தரப் பரீட்சை தேசிய மட்டத்தில் மிக முக்கிய பரீட்சையாகக் கருதப்படுகின்றது. ஆசிரியர்களும் மாணவர்களும் மாத்திரமல்லாது பெற்றோரும் நிர்வாகத்தினரும் இப்பரீட்சையின் பெறுபேறுகளில் பிரமிக்கத்தக்க அளவு கவனஞ் செலுத்துகின்றனர். மாணவர்கள் பிரத்தியேக வகுப்பு, கருத்தரங்கு, வினாத்தாள் வகுப்பு என்று பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றிக் களைத்துச் சோர்ந்து விடுகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் பரீட்சைக்குத் தோற்றிய பத்து நூற்றுவீத மாணவர்களுக்கு புலமைப்பரிசு பெற வாய்ப்புள்ளமைதான். புலமைப் பரிசுக்குத் தகுதி பெறும் வெட்டுப்புள்ளி இந்த ஆண்டு 147 இற்கும் 159 இற்கும் இடையில் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டு அமைந்துள்ளது. ஆனால் ஐந்தாம் வகுப்புக்குரிய சித்திப் பள்ளி 70 தான். அதாவது, இரண்டு வினாத்தாள்களைக் கொண்ட இப்பரீட்சையில் ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகள் பெற்றால் சித்தியாகக் கருதப்படுகின்றது. எவ்வாறாயினும் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் அனைவரும் ஆறாம் வகுப்பில் படிக்கத் தகுதியுடையவர்கள். ஒவ்வொரு வினாத்தாளிலும் 35 புள்ளிகள் பெறாத மாணவர் தொகை கணிசமாக இருப்பதில் இருந்து கணிதத்தில் மாத்திரமல்ல மற்றைய பாடங்களிலும் அடிப்படைத் திறன் பெறாத மாணவர்கள் பலர் தரம் ஆறுக்கு அனுமதிக்கப்பெறுகின்றார்கள் என்பது புலனாகின்றது. இவ்வாறான மாணவர்கள் தொடர்ந்து கணிதத் திறன், மொழித் திறன் ஆகியவற்றில்

போதிய விருத்தியடையாது பதினோராம் தரத்தை அடைந்துவிடுகின்றார்கள்.

கணினி விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தும் அதேவேளையில் ஆரம்ப வகுப்பில் இருந்தே அடிப்படைக் கணித விருத்தி, மொழி விருத்தி ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது மிக முக்கியமாகும். எழுத, வாசிக்க, கூட்ட, கழிக்கத் தெரியாத பிள்ளை இரண்டாம் வகுப்பில் இல்லாத நிலையை கல்விமுறை உறுதிப்படுத்த வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் அடிப்படைத் திறன்களில் சீரான விருத்தி ஏற்படாவிட்டால் அல்லது ஏற்படுத்தப்படாவிட்டால் கணினி விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பம், கணிதம், விஞ்ஞானம், கணக்கியல் ஆகியவற்றில் மாணவர்கள் எதிர்பார்க்கும் தேர்ச்சி அடைவது சாத்தியம் இல்லை. இந்தத் துறைகளின் முன்னேற்றம் ஏற்பட்டாலேதான் நமது நாடு உலக நாடுகளுக்கு ஒப்பாக விருத்தியடைய முடியும்.

"நமது எதிர்காலத்தின் விதி ஒவ்வொரு பிள்ளையிலும் தங்கியிருக்கிறது. நமது இளம் சந்ததியினர் சீராகச் செயற்படும் மனிதர்களாக விருத்தியடைவதற்கு உதவும் பொறுப்பு பெற்றோருக்கும் கல்வியாளருக்கும் ஏனையோருக்கும் உண்டு. நாம் அவர்களுக்குச் சரியான ஆரம்பத்தை ஏற்படுத்தினாலேதான் அவர்களாலே மேன்மையான உலகத்தை உருவாக்க முடியும்"... மாறிய மொண்டசோறி.

• • •

## ஆசிரியர், உயர்வதற்கு கற்பித்தலோடு தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும்.

மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் புதிய மாணவர்களை வழிப்படுத்தும் நிகழ்வில் ஆற்றிய உரை

**த**ற்கால உலகில் புதுப்புது விடயங்கள் தோன்றிக்கொண்டே இருப்பதால் சகலரும் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கவேண்டிய நிலை உருவாகியுள்ளது. எல்லோருக்கும் மேலாக ஆசிரியர்கள் உன்னிப்பாகத் தொடர்ந்து கற்றுக்கொண்டு இருந்தாலேதான் சிறந்த ஆற்றல் மிக்க அறிவு நிறைந்த மாணவர் சமுதாயம் உருவாகும். தற்கால உலகில் ஆசிரியர்களின் முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டுள்ளது மிகத் திறமை மிக்கவர்கள் ஆசிரியர்களாக பணியாற்றுவதிலேதான் ஜப்பான், சிங்கப்பூர், ஜேர்மனி ஆகியநாடுகள் பல துறைகளிலும் பிரமிக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. தற்போது சகல நாடுகளும் தரமான ஆசிரியர்களை பணியிற் சேர்ப்பதில் கவனம் செலுத்தி வருகின்றன. நமது நாடும் தரமான ஆசிரியர்களை பணியில் இணைப்பதிலும் அவர்களுக்கு உரிய கற்றல் வாய்ப்புக்களை ஏற்படுத்து வதிலும் நல்ல முயற்சி எடுத்து வருகின்றது. தேசிய கல்வியியல் கல்லூரிகள் நிறுவப்பட்டமை ஆசிரியர் கல்வியில் ஏற்பட்டுவரும் முன்னேற்றத்திற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். இந்த வாய்ப்பை நீங்கள் ஏற்ற முறையில் பயன்படுத்தி உங்கள் முன்னேற்றத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்தல் வேண்டும். நாட்டால் நாம்

பயன்பெறுவது போல் நாடும் நம்மால் பயன்பெறல் வேண்டும்.

நமது நாட்டில் கல்வியைத் தொடர்வதற்கு பல வசதிகள் அரசும் தனியார் நிறுவனங்களும் செய்துள்ளன; செய்து வருகின்றன. தொழிலில் இருந்துகொண்டே உயர் பட்டங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு நம் நாட்டில் உண்டு. இந்த வாய்ப்புகளை ஆசிரியர்கள் நன்கு பயன்படுத்துதல் வேண்டும். ஆசிரியர்களாக ஆரம்பித்து பல துறைகளில் ஆழ்ந்த அறிவு பெற்று பேரறிஞர்களாகப் பிரகாசித்த பலர் நமது முன்னோடிகளாக அமைந்துள்ளார்கள். நமது நாட்டவரான பல்துறை அறிஞர் சுவாமி விபுலாநந்தர் நமக்குச் சிறந்த வழிகாட்டியாகும். அவர் தராதரமற்ற ஆசிரியராக ஆரம்பித்து பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக அடியெடுத்து வைத்து, சமஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், சிங்களம், பாளி, அரபிக் போன்ற மொழிகளையும் தமிழையும் மேலும் கற்று மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்தார். கல்வி தொடர் கதையாகத் தொடர்ந்தது. இரசாயனவியல் கற்று அதில் டிப்ளோமா பட்டம் பெற்று தான் கற்ற தொழில்நுட்பக் கல்லூரியிலேயே பணியாற்றினார். அழைப்பின் நிமிர்த்தம் அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்று சென் பற்றிக் கல்லூரியில் ஆங்கிலத்தில் விஞ்ஞானம் கற்பித்தார். தானாகவே தொடர்ந்து கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றைக் கற்று, லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய விஞ்ஞானமாணிப் பரீட்சையில் சித்தியடைந்தார். தமிழ்ப் பண்டிதர், ஆங்கில மொழியில் பரீட்சைக்குத் தோற்றி விஞ்ஞானப் பட்டதாரியாகக் கூடிய சாத்தியமும் உண்டு என்பதை நிரூபித்தார். ஈற்றிலே இந்தியாவில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணியேற்றுச் சாதனை மேல் சாதனை படைத்தார். இவரது பல்மொழி அறிவு மதங்கசூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலாகவும் பல்மொழியறிவோடு கணிதம், விஞ்ஞானம், இசை இணைந்த அறிவு நூல் என்னும் இசைத்தமிழ் ஆய்வு நூலாகவும் மலர்ந்தன.

இவருடைய முயற்சியை முன்மாதிரியாகக் கொண்டு சாதனை படைத்த இவரது மாணவர்களும் மற்றையவர்களும் பலர் உண்டு. மண்டூரில் ஆங்கில உதவி ஆசிரியராக ஆரம்பித்த திரு.வி.சதாசிவம், பின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று சிவாநந்த

வித்தியாலயத்தில் ஆசிரியராகி, புலமைப்பரிசில் பெற்று மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று இலக்கிய முதுமாணிப் பட்டம் பெற்றார். பின்னர் பரீட்சைத் திணைக்களத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். பேராசிரியர் பத்தக்கட்டி சந்திரசேகரம் சிவாநந்த வித்தியாலயத்திலும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் சுவாமியிடம் படித்தவர். பல்கலைக்கழகப் பட்டம் பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதன்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்று மீண்டும் சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரியராகப் புலமைப்பரிசில் பெற்று மேற்படிப்புக்காக இந்தியா சென்றார். பின் யாழ்ப்பாணத்தில் கந்தரோடையில் உள்ள ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி அங்கிருந்து லண்டன் சென்று லண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிப் பட்டம் பெற்றார். மீண்டும் வந்து ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்திற்கு விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அங்கிருந்து கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். அங்கிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டு அங்கு முதலாவது கல்விப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

சுவாமி விபுலாநந்தரின் ஆரம்ப ஆசிரியர் திரு. கே.எஸ். குஞ்சித்தம்பி. அவரது மகன் திரு. தருமரெத்தினம். திரு. தருமரெத்தினம் சுவாமியிடம் சிவாநந்த வித்தியாலயத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் படித்தவர். இவர் பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சைக்கு தமிழ், பௌதீகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் ஆகிய பாடங்களில் தோற்றி சித்தியடைந்தவர். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் தமிழ், கணிதம், பொருளியல் ஆகிய பாடங்களைப் படித்து பின் பொருளியல் சிறப்புப் பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற பின் அரசாங்க சேவையில் புள்ளியல் அதிகாரியாகப் பணியாற்றி புலமைப்பரிசு பெற்று, இங்கிலாந்திற்குச் சென்று அங்கு லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் கணிதப் பொருளியல் முதுமாணிப் பட்டம் பெற்று இலங்கைக்கு மீண்டார். இங்கு அரச பணியில் ஈடுபட்டு பின் ஐக்கிய நாடுகள் சபையின் ஆலோசகர்களில் ஒருவராக நியமனம் பெற்று போட்சுவாணா, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளியல் ஆலோசகராகப் பணியாற்றினார்.

இவர்களைப் போல் நீங்களும் கல்வியைத் தொடர்கதையாக ஆக்க வேண்டும். பல மொழிகளைக் கற்க வேண்டும். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற வேண்டும். தற்கால உலகத்தில் ஆங்கிலம் மிக முக்கியமான மொழியாகும். தற்போது தரமான ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலேதான் வெளிவருகின்றன. இந்த மொழிகளோடு சமஸ்கிருத, ஹிந்தி, பிரெஞ்சு, ஜேர்மன், அராபிய, சீன, யப்பானிய, ரஷ்ய, கொரிய மொழி போன்றவற்றில் சிலவற்றைச் சிறிதளவாவது தெரிந்திருப்பது நமது மனப்பான்மையை விரிவாக்கும். அண்மையில் செய்யப்பட்ட ஆய்வின்படி ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் அறிவு பெற்றவரின் மூளை களைப்பின்றி துல்லியமாக இயங்குகிறது என்று அறியக்கிடக்கின்றது.

மொழிகளோடு கணிதம், விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் ஆகியவற்றிலும் ஆசிரியர் தேர்ச்சியடைதல் வேண்டும். இவற்றின் அறிவு தர்க்கரீதியான சிந்தனை, திறனாய்வுத் திறன், விளக்கமான மொழி வெளிப்பாடு, சரியான செய்திகளை இனங்கண்டு அறிதல் ஆகியவற்றுக்கு உறுதுணையாக அமைகின்றது. ஆசிரியர்கள் தாம் கையாளும் கைந்நூல்களும் பாட நூல்களும் உண்மையான செய்திகளை முன்வைக்கின்றனவா என்பதைப் பகுப்பாய்வு செய்யக்கூடிய திறனைப் பெற முயல வேண்டும். ஆசிரியர் கைநூல்களிலும் பாடநூல்களிலும் உள்ள பிழைகளை நானே சுட்டிக்காட்டியுள்ளேன்.

ஆசிரியர்கள் மாணவர்களை மாத்திரமல்ல மற்றையோரையும் மதிப்பீடு செய்வதில் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். பிழையான மதிப்பீட்டினால் சிலரது முன்னேற்றம் தடைப்படலாம். எனது அனுபவத்தில் பல்கலைக்கழகத்தால் அனுமதி மறுக்கப்பட்ட ஒருவர் மேல் முறையீடு செய்து பல்கலைக்கழகக் கற்கையில் சேர்ந்து முதலாம் வகுப்பில் சித்தியடைந்து மேலும் கல்வியைத் தொடர்ந்து உலகப் பிரசித்தி பெற்ற தாபனமொன்றில் உயர்நிலையில் பணியாற்றுகின்றார்.

பல சந்தர்ப்பங்களில் சிந்தனை, நிபந்தனைப்படுத்தலால் விரிவடையாது குறுகிவிடுகின்றது. உங்களை ஒரு கோடு வரையும்படி கேட்டபோது எல்லோரும் ஒரு நேர்கோட்டை அதுவும் கிடையான கோட்டை வரைந்துள்ளீர்கள். கோடு நேராக இருக்கவேண்டியதில்லை.

கிடையாக இருக்கவேண்டியதுமில்லை. ஒரு செவ்வகம் வரையும்படி கேட்டபோது எல்லோரும் கிடையான செவ்வகத்தை வரைந்தீர்கள். ஆனால், நமது அன்றாட வாழ்க்கையில் செங்குத்தாக வரைந்துள்ள செவ்வகங்களே அதிகம். உள்ளும் புறமுமாகச் செல்லும் கதவுகளைப் பாருங்கள். எனவே, எந்த விடயத்தையும் பல கோணங்களில் இருந்து சிந்திக்கும் திறனை விருத்தி செய்தல் வேண்டும்.

என்னைப்பற்றிக் கூறும்படி கேட்டீர்கள். மூன்றாம் வகுப்பில் படிக்கும்போது சுவாமி விபுலாநந்தரின் ஆசீர்வாதம் கிடைத்தது. கிழக்குமாகாண புலமைப்பரிசு பெற்று சிவாநந்த வித்தியாலயத்தில் ஆங்கிலம், தமிழ், உயர் கணிதம், பௌதீகவியல், ரசாயனவியல் ஆகிய பாடங்கள் கற்க வாய்ப்புக் கிடைத்தது. தராதரமற்ற விஞ்ஞான ஆசிரியராக ஆரம்பித்தேன். ஆங்கில மொழியிலே கணித ஆசிரியராக பயிற்சி பெற்றுத் திருகோணமலை இந்துக் கல்லூரியில் எனது குருவான அதிபர் திரு.ச. அம்பலவாணரின் வழிகாட்டலில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். பின் கண்டியில் அமைந்திருந்த முஸ்லிம் ஆசிரியர் கல்லூரியில் கணிதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பித்தேன். அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரியிலும் மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியிலும் பணியாற்றினேன். கொழும்புத் திட்டத்தின் புலமைப்பரிசு பெற்று அவுஸ்திரேலியாவில் உள்ள மக்குவாறி பல்கலைக்கழகத்தில் தற்காலச் சர்வதேச கணிதக் கற்கை நெறியில் பங்குபற்றினேன். இதைத்தொடர்ந்து மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரி பணிகளோடு கொழும்பு பாடவிதான அபிவிருத்தி நிலையப் பணிகளிலும் ஈடுபட்டேன். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டப்படிப்புக்கு வாய்ப்புக் கிடைத்தது. கல்விமாணிக் கற்கை நெறியில் கணிதத்தை விசேட பாடமாகப் படித்து முதலாம் வகுப்பில் சித்தியடைந்தேன். சிறிது காலம் மட்டக்களப்பு ஆசிரியர் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றிப் பின் கொழும்புப் பல்கலைக்கழக கல்விப் பீடத்தில் விரிவுரையாளரானேன். அங்கு தத்துவ முதுமாணிப் படிப்பை முடித்தேன். ஆனால் ஆராய்ச்சிக் கட்டுரை சமர்ப்பிக்க முயலவில்லை. நாட்டின் நிலை வெளியில் சென்று ஆய்வு செய்ய இடமளிக்கவில்லை. இந்தவேளையில் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஸிசின்னர், புளும் ஆகியோருடன் தொடர்பு கொண்டேன். அவர்களின் சிபார்சில்

சில பல்கலைக்கழகங்கள் பட்டப்படிப்புக்கு அனுமதி அளித்தன. ஆனால், கல்வியியல் கற்கைக்கு உலகப் பிரசித்தி பெற்ற கொலம்பியா பல்கலைக்கழகம் அனுமதியோடு புலமைப்பரிசு தர முன்வந்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி அங்கு சென்று கல்வியைத் தொடர்ந்து கலை முதுமாணி, விஞ்ஞான முதுமாணி, கல்வி கலாநிதி, தத்துவ கலாநிதி ஆகிய பட்டங்களைப் பெற்றேன். சர்வதேச கணிதக் கல்வி மாநாடு, சர்வதேச ஆசிரியர் கல்வி மாநாடு ஆகியவற்றில் பங்குபற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. ஐக்கிய நாடுகள் சபை கொலம்பியாப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து நடாத்தும் 'ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேசக் கல்வியும்' என்னும் கற்கை நெறியில் பங்குபற்றி உச்ச மதிப்பீடு பெற்றமையும் அமெரிக்கப் பல்கலைகழகங்களின் சிறந்த மாணவர்களில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டமையும் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் மில்வங் நூலகத்தின் ஆலோசகர் குழு உறுப்பினராகப் பணியாற்றியமையும் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டமையும் பட்ட மேற் படிப்புக்கான களப்பணிக்காக ஆபிரிக்காவில் உள்ள பொடஸ்வாணா பல்கலைக்கழகத்தில் பணியாற்றியமையும் அங்குள்ள 'ஐடியெம்' என்னும் நூலகத்தின் ஆலோசகராக புள்ளியல், ஆராய்ச்சி முறையியல், மதிப்பீடு, அளவீடு ஆகிய துறைகளில் விரிவுரையாற்றியமையும் குறிப்பிடலாம். இந்தக் குறிப்பு தங்களுக்கு ஊக்கமளிக்க உதவும் என நம்புகின்றேன்.

"வெள்ளத் தனையதுமலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"

என்று கூறுகின்றது திருக்குறள். திடமான நம்பிக்கையுடனும் தூய உள்ளத்துடனும் ஆசிரிய பணியில் அடியெடுத்து வையுங்கள். வெற்றிமேல் வெற்றி பெறுவீர்கள்.

• • •

பின்னிணைப்பு 1 : பேராசிரியர் ப.சந்திரசேகரத்தின் புகைப்படங்கள்.



M.Phil கற்கைக்காக டில்லிப் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது பிரதமர் நேருவுடன்



1960களில் Ph.D கற்கைக்காக லண்டன் சென்றிருந்தபோது





1972 இல் யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியில் முதன்மை அதிதியாக மனைவி கமலாவுடன் கலந்துகொண்டபோது



யாழ்ப்பாணம் - இணுவிலில் உள்ள அவரது வீட்டில் அவரது
மனைவி கமலா, மகள் கலைமகள், மகன் கிருபாகரன்
(Reputed Prof. in Finance at the New York University in the USA) ஆகியோருடன்



மடியில் தனது மகள் வாவனியுடன் (வாவனி 1972 இல் மரணமடைந்தார்)





21.01.1981 இல் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தில் பிரதம அதிதியாக.



மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் டாக்டர் ராமச்சந்திரன், டாக்டர் கோதைப்பிள்ளை, டாக்டர் குந்தள ஜயராமன் ஆகியோருடன்



1988ல் இந்தியாவில் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தா மேட்டில் அன்னாரின் குடும்பத்தாரால் நிகழ்த்தப்பட்ட அவரது இறுதிச் சடங்குகள்





அவர் 11.12. 1987 இல் மரணமடைவதற்கு 4 மாதங்களுக்கு முன்





1980 அளவில் நடந்த யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்

பின்னிணைப்பு 2 :


கலாநிதி கோணாமலை
கோணேசபிள்ளையின் புகைப்படங்கள்








மண்டூர் கலை இலக்கிய அவை கலாநிதி கோணேசபிள்ளை அவர்களின் 81வது பிறந்ததின நிகழ்வினை 08.11.2010 அன்று நடாத்தியபோது



மண்டூர் கலை இலக்கிய அவை கலாநிதி கோணேசபிள்ளை அவர்களின் 81வது பிறந்ததின நிகழ்வினை 08.11.2010 அன்று நடாத்தியபோது



மண்டூர் இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் நிறுவப்பட்டுள்ள புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் உருவச்சிலைக்கு முன்பாக மண்டூர் கலை இலக்கிய அவை உறுப்பினர்களோடு





மண்டூர் கலை இலக்கிய அவை பாரதி சஞ்சிகை ஆசிரியர் குழுவினரைப் பாராட்டிக் கௌரவிப்பதும் அக்குழுவில் ஒருவரான ந.செபரெத்தினம் அவர்கள் தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதுமான நிகழ்வை 10.08.2013 இல் மண்டூர் இராமகிருஷ்ண கலாசார மண்டபத்தில் நடாத்தியபோது.





மண்டூர் கலை இலக்கிய அவையின் ஏற்பாட்டில்
கலாநிதி கோணேசபிள்ளை அவர்களின் 'பலதுறை அறிவுசார் கட்டுரைகள்'
என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு 2017.05.28 அன்று
மண்டூர் இராமகிருஷ்ண கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது.



பேராசிரியர்
பத்தக்குட்டி சந்திரசேகரம்

பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் கல்வியியலை மேற்குநாட்டு முறையில் அறிந்தவர். மேற்கு நாட்டில் உயர் கல்விப் பட்டம் பெற்றவர். பிளேட்டோ, ரூஸோ, ஜோன் ரூயி என்ற மேற்கத்தைய கல்வியியலாளர்களுடன் கார்ல் மாக்ஸையும் அவர் இணைக்கையில் அவர் மற்றவர்களில் இருந்து மாறுபடுவார். அது மட்டுமன்றி அவர்களோடு வள்ளுவர், விவேகானந்தர், காந்தியடிகள், தாகூர் என இந்தியக் கல்வியியலாளர்களின் தத்துவங்களையும் இணைப்பார். மேற்கத்தைய மரபில் அல்லாது கீழைத்தேய மரபில் அவர் கல்வியை, உளவியலை, ஆசிரிய விழுமியங்களை நோக்கினார்.

கல்வியைப் புரிந்துகொள்வதில் மேற்கத்தைய மரபையும் கீழைத்தேய மரபையும் இணைத்து அவற்றினூடாக நமக்கு ஏற்ப ஒரு முழுமை தேடும் இப்பார்வை பேராசிரியர் சந்திரசேகரத்திற்கேயுரிய பார்வை.



கலாநிதி
கோணாமலை கோணேசபிள்ளை

கிழக்கிலங்கை மண்ணில் தோன்றிய அறிவியல் புலமையாளர் வரிசையில் கலாநிதி கோணாமலை கோணேசபிள்ளையும் முக்கியமானவர்.

அவர் ஒரு கணிதவியல் புலமையாளனாக மட்டும் இருக்காமல் கணிதவியலுடன் கல்வியியலையும் இணைத்தவொரு புலமையாளனாக விளங்கினார். அவரது கல்விக் கலாநிதிப் பட்ட ஆய்வு இந்தப் புலமை இணைப்பை மேலும் வலுப்படுத்தியிருந்தது. அதற்கும் மேலாக அவர் மாணவனாக இருந்த காலம் முதல் கலை இலக்கியம் மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார்.

ISBN: 978-955-7202-04-4
9 789557 202044